
# தமிழரசு

மார்ச் 1-15, 1998 ரூ.3





















## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்....


| | |
|---|---|
| உலக மகளிர் நாள் : முதலமைச்சர் வாழ்த்துச் செய்தி | 2 |
| "பாரதரத்னா" எம்.எஸ்.சுப்புலட்சுமி - கே.எஸ். மகாதேவன் | 4 |
| "பாரதரத்னா" சி.சுப்பிரமணியம் - மதுராந்தகன் | 7 |
| எங்கள் ஊர்ப் பிரச்சினை | 8 |
| சரித்திரம் படைத்த டாக்டர் கலாம் | 13 |
| உலகம் இனியது - கே.மீனாட்சிசுந்தரம் | 14 |
| நலம் காப்போம் (கவிதை) - முனைவர். கடலூர் மணிமாறன் | 17 |
| இதுவரை சிறுகதை - மாலன் | 18 |
| திறப்பதற்கு இங்கே கத்தரியுங்கள் (கவிதை) - கலாப்ரியா | 24 |
| 'தமிழ்நாடு' - முனைவர் சா.வளவன் | 25 |
| திராட்சையில் மாவுப்பூச்சியா ? - டாக்டர். கே.சந்திரசேகரன் | 31 |
| 1998 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் | 33 |
| வெள்ளிப் பூண் - சு. சமுத்திரம் | 41 |
| மருத்துவம் - மு. வீராசாமி | 46 |



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு - 2029
மாசி - பங்குனி
மார்ச் 1 - 15, 1998 இதழ்: 17
மலர்: 28
விலை ரூ.3

# உண்மை வழிநடந்து - விழிப்புடன் செயல்பட்டு

# தமிழக முன்னேற்றத்திற்குத் தொண்டாற்ற

# தமிழக மகளிர் முன்வரவேண்டும்.

**உலக மகளிர் நாளில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தி**

8.3.98 உலக மகளிர் நாள்! உலகில் ஏறத்தாழ சரிபாதியாக வாழும் மகளிரின் முன்னேற்றம் குறித்துச் சிந்திக்கும் நாள்! பெண்கள் நலத் திட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தி - செயல்படுத்தி - பெண்கள் சமுதாயத்தின் பெருமையை நிலைநாட்டுதற்குப் பாடுபட வேண்டுமெனும் உணர்வை நாட்டு மக்களிடையே ஊட்டி வளர்க்கும் நாள் - இந்நாள்!

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!"

- எனப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள், நாம் விடுதலை பெறுவதற்கு முன்பாகவே - பெண்கள் சமுதாய விடுதலை காண்பது இன்றியமையாதது என்பதை வலியுறுத்தினார்.



தந்தை பெரியார் அவர்களும், பேறிஞர் அண்ணா அவர்களும் தமிழகம் முழுவதும் மகளிர் மாநாடுகள் பல நடத்திப் பெண் கல்வி, விதவை மறுமணம் முதலியவற்றை வலியுறுத்தி, பெண்கள் மேம்பாட்டிற்குத் தம் வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டனர்.

1967 ஆம் ஆண்டில் தமிழகத்தில் அமைந்த கழக அரசு, பெண்கள் மேம்பாட்டிற்காக - பெண்கள் சமுதாயத்தின் எழுச்சிக்காக ஆக்கபூர்வமான பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிறந்த கவனம் செலுத்திவந்துள்ளது - இன்றும் கவனம் செலுத்திவருகின்றது.

★ 1973 ஆம் ஆண்டில், காவல் துறையில் பெண் காவலர்களை முதன்முதல் நியமனம் செய்து இந்தியாவிற்கே வழிகாட்டியது இந்த அரசு.

★ ஆதரவற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்...



★ டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்...

★ 1989 ஆம் ஆண்டில் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம்...

★ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்...

★ 1990 ஆம் ஆண்டில் அரசுப் பணிகளிலும், பொது நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம்...

- எனப் பெண்களுக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியது இந்த அரசு.

★ தொடக்கப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்திட ஆணையிட்டு, படிப்படியாக ஐந்தாம் வகுப்புவரை பெண்கள் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதற்கு வழிவகுத்தது இந்த அரசு.



★ 1989ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்னும் ஒரு மாபெரும் திட்டத்தை அறிமுகப்படுத்தி - அதன் மூலம் கிராமப்புறங்களில் வாழும் ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கவும், குடும்பத்தில் கூடுதல் வருமானம் கிடைக்கவும் - தொழில் வாய்ப்புகளை ஆண்டுதோறும் ஏற்படுத்திவருகிறது இந்த அரசு.

★ 1996 ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி - ஊராட்சி உறுப்பினர் பொறுப்பு முதல் - மாநகராட்சி மேயர் பதவி வரை பல்வேறு நிலைகளில் மக்கள் பிரதிநிதிகளாய் வீற்றிருந்து ஆட்சி செலுத்தும் அரிய வாய்ப்பினை - ஏறத்தாழ 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட மகளிருக்கு ஏற்படுத்தித் தந்துள்ளதும் இந்த அரசே.

★ தொழில் தொடங்கும் மகளிர்க்கு ஊக்கமளிக்கும் வகையில் குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் தொடங்கும் 250 மகளிருக்குத் தொழில் முதலீட்டில் 50,000/- ரூபாய் வரை மானிய உதவி வழங்கியுள்ளதும் இந்த அரசே.

★ ஏறத்தாழ 2,600-க்கு மேற்பட்ட பெண்காவலர்களை இந்த ஆண்டில் நியமனம் செய்துள்ளதுடன், மேலும் 5,000 பெண் காவலர்களை நியமனம் செய்திட ஆணையிட்டுள்ளதும் இந்த அரசே.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த 5,000/- ரூபாய் நிதி உதவியை 10,000/- ரூபாய் என உயர்த்தியதுடன், கடந்த இரண்டு ஆண்டுகளில் 46,145 பெண்களுக்கு 10,000/- ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கிய இந்த அரசு, இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யும் மகளிர் அனைவருக்கும் நிதியுதவி வழங்கவும் ஆவன செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.



- இப்படி கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகியவை மூலம் சமூகத்தில் பெண்களின் மதிப்பினை மேம்படுத்துவதில் அதிக ஆர்வமும் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டு மகளிர் நலம் காப்பதில் மகத்தான சாதனைகள் பலவற்றை உருவாக்கி உள்ளது இந்த அரசு.

நலமான சூழ்நிலைகளுக்கும், வளமான வாழ்க்கை மேம்பாடுகளுக்கும் உரிய அடிப்படைத் தேவைகள் எவை என்பதை உணராதவர்களும் கூட - அவர்கள் கேட்காமலேயே - அவர்களின் தேவை அறிந்து - தாயினும் சாலப் பரிந்து - திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி அவர்களுடைய மேன்மைக்காகப் பாடுபடுவதையே தனது கடமையாகக் கொண்டுள்ளது - இந்த அரசு.

இந்த அரசின் இத்தகைய திட்டங்கள் மூலம் உயர்வான கல்வியையும் - உரிய வேலைவாய்ப்புகளையும் பெற்று - வாழ்வில்



உன்னதநிலை எய்திடத் தமிழக மகளிர் அனைவரையும் இந்த உலக மகளிர் நாளில் உளமார வாழ்த்தி மகிழும் இவ்வேளையில் - யார் எதைக் கூறினாலும் அதை அப்படியே நம்பிடாமல் -



'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு".

- எனும் வள்ளுவர் உரைத்த வழி நின்று - சிந்தித்து - உண்மையறிந்து - உண்மை நிலைத்திட - உண்மை வழி நடந்து - விழிப்புடன் செயல்பட்டு, தமிழக முன்னேற்றத்திற்குத் தொண்டாற்றுவர் தமிழக மகளிர் என உறுதியுடன் நம்புகிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் தாம் விடுத்த உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# 'பாரதரத்னா'

# எம்.எஸ்.சுப்புலட்சுமி

- கே.எஸ்.மகாதேவன்

சங்கீத கலாநிதி திருமதி. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களுக்குப் "பாரத ரத்னா" என்னும் நாட்டின் மிக உயர்ந்த விருது அறிவிக்கப்பட்டபோது, உலகமே பாராட்டியது.

எம்.எஸ். சுப்புலட்சுமி தனது எழுபது ஆண்டு வாழ்வில், இசைகலைக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டதோடு, மாபெரும் நற்பணிகள் - அறப்பணிகளுக்காகவும் பாடு பட்டிருக்கிறார். மாந்தருக்குள் ஒரு தெய்வம் என்று போற்றப்படுகின்ற மகாத்மா காந்தியே எம்.எஸ்.ஸின் நற்பணிகளைப் பாராட்டியுள்ளார்.

"பாரத ரத்னா" விருது எம்.எஸ்.ஸின் இசை மகுடத்தில் பதிக்கப்பட்ட கோகினூர் வைரம் என்பதில் ஐயம் ஏதுமில்லை. என்றாலும், மேலும் பல நவரத்தினங்கள் அவருடைய இசை மகுடத்தில் ஒளி வீசுகின்றன. எடின்பரோ சர்வதேச இசை நாடக விழா 1963-ஆம் ஆண்டு நடைபெற்றபோது, அதில் எம்.எஸ்.ஸின் பங்கேற்பு, 1966-ஆம் ஆண்டு ஐ.நா. பேரவையில் இவரின் உணர்வு பூர்வமான இசை நிகழ்ச்சி, லண்டன், மாஸ்கோ போன்ற நாடுகளில் இவர் பங்கேற்ற இந்திய விழாக்கள், இதுபோல அவர் கலந்துகொண்ட பல நிகழ்ச்சிகள், தொன்மையான தூய்மையான சாஸ்திரிய கர்நாடக இசையின் புகழை உலக நாடுகள் உணரும்படி செய்து ஓர் எழுச்சியை ஏற்படுத்தின.

இதுபோன்ற நிகழ்ச்சிகளாலும், மற்ற நிகழ்ச்சிகளாலும் ஒரே சீராகப் பல கௌரவங்கள் அவரை வந்தடைந்தன. 'பத்ம விபூஷண்', 'காளிதாஸ் சன்மான்', 'சென்னை சங்கீத வித்வ சபையின் 'சங்கீத கலாநிதி', 'மக்ஸேஸ விருது' போன்ற பல சிறப்புகளை எம்.எஸ். ஏற்கெனவே பெற்றிருக்கிறார். எம்.எஸ்.ஸின் இசை மகுடத்தை அழகு செய்யும் இத்தனைச் சிறப்புகள் - விருதுகள் இந்தியாவில் வேறு எந்த இசைக் கலைஞருக்கும் கிடைத்தது இல்லை. இணையில்லாத இனிய குரல் மூலம் வாழ்வெல்லாம் பொதுநலனுக்காகத் தம்மை அர்ப் பணித்துக் கொண்டவருக்கு "பாரத ரத்னா" விருது அளித்திருப்பது மிகப்பொருத்தமானது.

எம்.எஸ்.ஸின் பணிவு, எல்லோரும் அறிந்த ஒன்று. காஞ்சி பரமாச்சாரியார், ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, டாக்டர். ராதாகிருஷ்ணன், முன்னாள் ஐ.நா. தலைமைச் செயலர் ஊதாண்ட் போன்றவர்கள் இதைப்பற்றிப் பாராட்டியுள்ளார்கள். "எல்லோருக்கும் நன்றாம் பணிதல்", என்ற வள்ளுவர் வாக்கை எம்.எஸ். இன்று நிரூபித்து நம்மிடையே வாழ்கிறார்.

இசைப்பயணம்

தமிழ் நாட்டின் கலைத் தலைநகரான மதுரையில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய வீணை வித்தகர் திருமதி. சண்முக வடிவு மகளாக 1916 செப்டம்பர் 16ஆம் நாள் இவர் பிறந்தார். பாரம்பரிய இசைப்புலமை இதனால் இவருக்குக் கிடைத்தது. இயற்கையிலேயே அமைந்த இனிய குரலோடு மிக இளம் வயதிலிருந்தே தமது அன்னையாரின் வீணை நிகழ்ச்சிகளில் உடன் பாடிவந்தார், எம்.எஸ். மிருதங்கச் சக்கரவர்த்தி புதுக்கோட்டை தட்சிணா மூர்த்தி பிள்ளை, மதுரை புஷ்பவனம் ஐயர் போன்ற பாடகர்கள் வீணை சேஷண்ணா போன்ற இசைமேதைகள் அடிக்கடி இவர் வீட்டிற்கு வருவதுண்டு. இதுபோன்ற சமயங்களில் அவர் பாடல்களைக் கேட்டுப் போற்றிய இந்த மேதைகள் "உங்கள் மகளுக்கு உன்னதமான இசை வாழ்வு காத்திருக்கிறது" என்று சண்முக வடிவிடம் கூறினார்கள். சீனிவாச அய்யங்காரிடம் கர்நாடக இசையின் அடிப்படைகளைக் கற்ற எம்.எஸ். தமது அன்னையாரின் பாடாந்தரம் (இசைவழி), அவருடைய சொந்த இசைத்தாகம் ஆகியவற்றைப் பின்பற்றி, 16ஆம் வயதினில் வியக்கத்தக்க திறமையுடன் ஆழமாகப் பாடும் ஆற்றலைப் பெற்று அரங்கேற்றினார்.



சிறந்த திரைப்படத் தயாரிப்பாளர் டாக்டர் கே.சுப்பிரமணியம் தமது துணைவியாருடன் மதுரையில் சண்முகவடிவு இல்லத்திற்குச் சென்ற போது, எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இனிய சங்கீதத்தை நேரில் கேட்டதும், எம்.எஸ்.ஸின் கலைப்பாதையில் ஒளிமயமான எதிர்காலம் ஏற்பட வழிவகுக்கப்படலாயிற்று. அப்போது இவருக்கு வயது 17.

இவருடைய குரலினிமையால் ஈர்க்கப்பட்ட டாக்டர் கே.சுப்பிரமணியம், "சேவாசதன்" என்னும் தமது திரைப்படத்தில் நடிக்கவும் பாடவும் இவரை ஒப்பந்தம் செய்தார். இந்தத்



கணவர் திரு.சதாசிவம் அவர்களுடன் திருமதி. எம்.எஸ்.

திரைப்படத்தில் எம்.எஸ்.ஸின் பாடலும், நடிப்பும் திரை உலகிலும் இவருடைய தனித்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கின. எம்.எஸ். சுப்புலட்சுமியைப் பெரிதும் நேசித்த திரு.சதாசிவம் ஒரு கோயிலில் நடந்த எளிய நிகழ்ச்சியில் 1936-ல் இவரைத் திருமணம் செய்துகொண்டார்.

- "துன்பம் வரும்போது திறமை வெளிப்படும்" என்று ஹோரேஸ் கூறியிருக்கிறார். ஆனந்தவிகடன் வார இதழில் பணியாற்றிய திரு.சதாசிவமும், திரு.'கல்கி' கிருஷ்ணமூர்த்தியும் அதில் இருந்து விலகிய பிறகு 'கல்கி' என்ற பெயரில் வார இதழ் ஒன்றைத் துவக்க எண்ணினார்கள் (1992ஆம் ஆண்டு 'கல்கி' வார இதழ் பொன்விழாக் கொண்டாடியது). பத்திரிகையைத் துவக்க குறைந்தது ரூபாய் நாற்பதாயிரம் தேவைப்பட்டது. நினைவில் நீங்கா மூன்றாவது திரைப்படமான "சாவித்திரி" திரைப்படத்தில் எம்.எஸ்.நாரதராக நடித்து இத்தொகையை ஈட்ட உதவினார். காவியுடைதரித்து நாரதராக நடிப்பிலும் பாட்டிலும் திறமை காட்டி மக்களைக் கவர்ந்தார். இந்தத் திரைப்படத்தில் ஹேமாவதி ராகத்தில் "காந்திமதி" என்று இவர் பாடிய பாடல் மிகச் சிறந்த பாடலாக அமைந்தது. இதற்கு முன்னர் "சகுந்தலை" என்ற திரைப்படத்தில் ஜி.என்.பாலசுப்பிரமணியமும், எம்.எஸ்.ஸும் பாடிய மறக்கமுடியாத பாடல்களால் ஈர்க்கப்பட்ட ரசிகர்கள் இந்தப் பாடலுக்கு அடிமைகள் ஆனார்கள்.

இந்தக் காலகட்டத்தில் திருமதி. எம்.எஸ்.அவர்கள் இந்தியா முழுவதும் இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்திவந்தார். அன்பும், ஒழுங்குக் கட்டுப்பாடும் உடைய கலைஞராக, ஆளுமையை இவர் நிலைநிறுத்திக் கொண்டாலும், காந்தம்போல் கவரும் இசையை இவர் வழங்கினார்.

1944-ஆம் ஆண்டு வரை இவர் பெற்ற இசைக் கச்சேரி அனுபவம், பின்னாளில் ரசிகர்களைப் பொறுத்தவரையில் அவர்களை ஈர்ப்பதாக அமைந்துவிட்டது.

## மகாத்மாவின் அழைப்பு:

1944ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூதறிஞர் ராஜாஜி, சதாசிவம் தம்பதியை அவர்கள் இல்லத்தில் சந்தித்தார். சேவாகிராமத்தில் காந்தியடிகளைச் சந்தித்துவிட்டு அப்போதுதான் திரும்பி வந்ததாகவும், கஸ்தூரிபா நினைவு நிதிக்கு நிதி சேகரிப்பதற்குத் திருமதி.எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் ஐந்து நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் திரு.சதாசிவத்திடம் கூறி ஒப்புக்கொள்ளச் செய்வதாகக் காந்தியடிகளிடம் உறுதி அளித்து வந்திருப்பதாகவும் ராஜாஜி கூறினார். உடனே, சதாசிவமும் ஒப்புக்கொண்டார். அதுவரை, எம்.எஸ்.சுப்புலட்சுமி ஒரு சில நிதி சேகரிப்பு இசை நிகழ்ச்ச்சிகளையே நடத்தியிருந்தார்.

பெங்களூர் தேசிய உயர்நிலைப்பள்ளி, கோத்தகிரி பள்ளி போன்ற சில பள்ளிகள், எட்டயபுரம் மகாகவி பாரதி மண்டபம், தமிழ்ச் சங்கம் (சென்னை) போன்றவற்றுக்கு நிதி திரட்ட நடந்த இசை நிகழ்ச்சிகளில் இவர் பங்கு பெற்றார். இவை தவிர சென்னை சங்கீத வித்வத் சபை, மற்றும் சில சபைகளுக்குப் பணம் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் இவர் பாடியுள்ளார்.

இசைப் பாரம்பரியத்தில் இவரைப்போல இந்த அளவுக்கு நற்பணிகளுக்காகப் பாடியவர் எவரும் இல்லை. திருவையாறு சத்குரு தியாகராஜ சுவாமிகள் சமாதிக்காக, பெங்களூர் நாகரத்தின அம்மாள் தம்முடைய உடைமைகளை எல்லாம் வழங்கியதுபோல, சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த திருவாரூரில் இந்த மும்மூர்த்திகளுக்கு நினைவுச் சின்னங்கள் அமைவதற்குத் திருமதி எம்.எஸ். அவர்கள் காரணமாக இருந்தார்.

1941 ஆம் ஆண்டு கல்கத்தா சென்றபோது, சதாசிவம் தம்பதியர் நாக்பூரில் இறங்கி, காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக வார்தா ஆசிரமத்திற்குச் சென்றார்கள். அப்போது நடந்து கொண்டிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் இவர்கள் கலந்துகொள்ள, மகாத்மா காந்தி கேட்டுக் கொண்டதற்கு இணங்க எம்.எஸ்.சுப்புலட்சுமி சில "பஜன்" பாடல்களைப் பாடினார். இவர் பாடலில் இருந்த இதயபூர்வமான தெய்வீக உணர்வு காந்தியடிகளைக் கவர்ந்தது.

பின்னர், கஸ்தூரிபா நினைவு நிதி இசை நிகழ்ச்சிகள் நடந்தபோது, திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமிக்குக் காந்தியடிகளிடம் இருந்து, காந்தியடிகளின் கையெழுத்தில் தமிழ்க் கையெழுத்தோடு ஒரு கடிதம் வந்தது. மிகச் சிறிய கடிதம் என்றாலும் மிக முக்கியமானது இந்தக் கடிதம்.

1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அகில இந்திய வானொலி, திரு. சதாசிவத்தோடு தொடர்பு கொண்டு, காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதி எம்.எஸ்.சுப்புலட்சுமி ஒரு சில பஜன்களைப் பாட முடியுமா என்று கேட்டது. ஆனால் துளசிதாஸ், கபீர்தாஸ், மீரா பஜன்களின் எம்.எஸ். ஒலிப்பதிவைத் தில்லிக்கு அனுப்பிவைத்தார்.

எல்லோரும் வியக்கும் வண்ணம், காந்தியடிகள் திருமதி. எம்.எஸ். "ஹரி துமா ஹாரோ" என்ற மீரா பஜனைப் பாட வேண்டும் என்று வற்புறுத்தினார். எம்.எஸ்.சுக்கு இந்த இசைவகை அவ்வளவு பரிச்சயம் இல்லை என்றும், திரு.சதாசிவம் பணிவோடு செய்தி அனுப்பினார். ஆனால், காந்திஜி, அதுபற்றிக் கவலையில்லை என்றும், மற்றவர்கள் பாடுவதை விட எம்.எஸ். இந்தப் பஜனைப் பேசினாலே போதும் என்றும் சொல்லி அனுப்பினார்.

பின்னர் திருமதி. சுப்புலட்சுமி இந்தப் பாடலை நண்பர்கள் உதவியோடும், இசைக்கலைஞர்கள் ஒத்துழைப்போடும் சாதகம் செய்து சிறந்த தேர்ச்சி பெற்றார். அகில இந்திய வானொலி இதைப் பதிவு செய்து தில்லிக்கு அனுப்பியது. 1947 அக்டோபர் 2ஆம் தேதி மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் இதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

1948 ஜனவரி 30ல், காந்தியார் மறைந்த பிறகும் - காந்தியடிகளின் மறைவால் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி காரணமாகப் பிறகு ஓராண்டுக்காலம் அந்தப் பாடலைப் பாடும்போது எம்.எஸ். அழாமல் பாடியதே இல்லை!

## நாடே பாராட்டிய 'மீரா'

"மீரா" திரைப்படத்தின் இந்தி மொழியாக்கம், எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு நாடெங்கும் புகழைத் தேடித்தந்தது. காற்றினிலே வரும் கீதம், கண்ணன் புகழ் இசைக்க, இனிய குரலால் இவர் பாடிய "மீரா" பஜன்கள், பக்த மீராவாக இவர் நடித்த இயல்பான நடிப்புத்திறனை நாடெங்கும் இவருக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது. இந்தத் திரைப்படத்திற்குப் பிறகு, எளிமையான தென்னிந்தியா போற்றும் இசைக் கலைஞராக இருந்த திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் நாடே போற்றும் தெய்வீக இசைக் கலைஞராகப் பெருமை பெற்றார்.

இராமன் பற்றிய தியாகராஜ சுவாமிகளின் கிருதி, துளசிதாஸ் பஜன் அல்லது மீரா பஜன் ஆகியவை இசையில் திருமதி. சுப்புலட்சுமியின் மிகையில்லா உடைமைகள் ஆகும்.

எம்.எஸ்.ஸின் இந்தத் தெய்வீகக் கலவைதான் திருமதி. சரோஜினி நாயுடு, பாபு ராஜேந்திர பிரசாத், ஜவஹர்லால் நேரு, டாக்டர். இராதாகிருஷ்ணன், லார்டு ஹார்வுட் மற்றும் ஐ.நா. பேரவையினர் எல்லோரையும் இவருடைய இசையில் மயங்கச் செய்தது.

ஜவஹர்லால் நேருவே ஒரு முறை "இசைப் பேரரசி முன்னர் நான் ஒரு பிரதமர்" என்று கூறிப் பெருமைப்பட்டார்.

### கணவரின் பெருமை

வாழ்விலும், இசைப்பாதையிலும் எல்லா விஷயங்களிலும் கணவர் சதாசிவத்தின் கருத்தை அப்படியே ஆதரித்த சுப்புலட்சுமி எப்போதும் கணவரிடம் ஆழ்ந்த மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருந்தார். எம்.எஸ்.ஸுடைய வளர்ச்சியில், குறிப்பாக நிதி நிகழ்ச்சி சம்பந்தமான விஷயங்கள் இவற்றின் இடம், செயலாக்கம் பற்றிய விஷயங்களில், ஒவ்வொரு கட்டத்திலும் திரு.சதாசிவம் திட்டமிட்டு நடத்தியது எவரும் செய்யமுடியாத பணியாகும்.

இந்தியப் பெண்மையின் நெறிகளைப் போற்றும் எம்.எஸ். இந்திய மரபுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். சதாசிவத்துடனான இவருடைய இல்வாழ்க்கை போற்றுதற்குரியதாகும்.

"பாரத ரத்னா" விருது பெற்றபோது அந்த இன்ப அதிர்ச்சியை அனுபவிக்கக் கணவர் இல்லையே என்பது எம்.எஸ்.ஸுக்குப் பெருமளவு வருத்தத்தைத் தந்தது. "பாரத ரத்னா" விருது அளிக்கப்பட்ட இப்பெருமைக்குரிய நாளில் சதாசிவம் இல்லையே என்ற ஏக்கம் அவரை வாட்டாமலில்லை.


சென்ற செப்டம்பர் மாதம் 81 வயதான அவருக்கு, பெண்மை நெறிகளில் அவர் கொண்டுள்ள மங்காத நம்பிக்கை மற்றும் இசைச்சேவையும் உலகெங்கும் பாராட்டைப் பெற்றுத் தந்தது.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பர். இதைப் போல எதிலும் திருப்தி அடையும் இவர் அணுகுமுறை மிகச் சிறந்ததாகும். மருத்துவமனைகள், பள்ளிகள், ஏழைகள் போன்றவர் வளர்ச்சிக்காக நற்பணி மூலம் இசை நிகழ்ச்சிகள் நடத்தி கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதித்து, எல்லாவற்றையும் இவற்றுக்கு வழங்கிய எம்.எஸ்.ஆரம்பத்திலிருந்தே, எளிய வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பலமுறை தம்முடைய நகைகளை ஏழைகளுக்கு வழங்கியுள்ளார். கொடுத்துக் கை சிவந்தவர் இவர். தமது கணவர் வாழ்ந்து காட்டிய வழியில், தூய வாழ்வும் உயர் சிந்தனையும் கொண்டு இவர் வாழ்க்கை நடத்தி வருகிறார்.

### கர்நாடக இசையின் பேரரசி

கர்நாடக இசைக்கலைஞர் என்ற முறையில் இவருடைய திறமை மறுக்க முடியாததாகும். எடுத்துக்காட்டாக, ராக ஆலாபனையில், மூன்று ஸ்தாயிகளில் எளிதாகப் பாட வல்லவர் இவர். சுருதி சுத்தம் போற்றுதற்குரியது. இவரைப்போலப் பாட வல்லவர்கள் ஒரு சில முன்னோடிகளே ! சங்கராபரணம், காம்போதி, தோடி, பைரவி, கீர்வாணி, கல்யாணி, ரஞ்சனி, கேதார கௌள போன்ற ராகங்களில் விரிவான தொடுவானத்தைத் தொடுபவர் எம்.எஸ்.

அவர்களைப் போல எம்.எஸ்.ஸும் நெடுநாள் நினைவு கொள்ளத்தக்கவர். திரைச்


Bombay 28-9-46

Dear Subbulakshmi

Rajaji has told me everything about your good work in connection with Kasturba Memorial Fund by using your musical gifts may God bless you.

Yours

மோ. க. காந்தி

**திருமதி எம்.எஸ்.சுக்குக் காந்தியடிகள் எழுதிய கடிதம்**

சீலையில் பல வண்ண ஓவியம் தீட்டுவது போல, தாராஸ்தாயியில் அந்தர காந்தாரத்தை வானில் மிதக்க விடும் வல்லமை படைத்தவர் எம்.எஸ்.

### இணையற்ற இசை வீச்சு

மற்ற பாடகர்கள் பெரும் சிரமம் எடுத்துக்கொண்டு செயல்படுத்த முடியாத உணர்வலைகளை, இயல்பாகவே வழங்கக்கூடிய தனி பாணியைக் கொண்டவர் எம்.எஸ். இவருடைய உத்தி ஆச்சரியம் தருவது; ஒவ்வொரு முறையும் ஓர் இசைப்பயணம் மேற்கொள்ளும் உணர்வை இவர் ஏற்படுத்துகிறார். இது உலகின் ஒரு தனித்தன்மை வாய்ந்த குரலாகும். இந்தக் குரலின் அழகு, தெளிவான தரம், அறிவார்ந்த ஒலி வெள்ளம் எல்லோரையும் கவர்வதாகும். தாராஸ்தாயியில் இசையையும் பாடலையும் வழங்கும்போது எல்லை கடந்து செல்லாமல், இவர் குரல் உள்ளேயே அடங்கியிருக்கும்.

பறவை போல இவர் இசைப்பயணம் மேற்கொள்ளும்போது, இவருடைய இசை வீச்சில், விலை மதிக்கமுடியாத குரல் வளத்தின் பொன்னாபரணங்களை ஒருவர் பார்க்க முடியும். இதுபோன்ற வெற்றிகளைப் பெறுவதற்கு, இவர் எவ்வளவு பாடுபட்டிருக்க வேண்டும் என்பதைக் கற்பனையால்தான் உணரமுடியும்.

சங்கீத மும்மூர்த்திகள், புரந்தரதாசர், பாபநாசம் சிவன், வாசுதேவாச்சார் போன்றவர்களின் பாடல்களில் இவருடைய ஆற்றலைக் குறிப்பிட வேண்டும் என்றால், அது விரிவாகும். பாலா, பிருந்தா போன்றவர்களிடம் கற்ற பதங்கள் எண்ணிக்கையைச் சொல்ல முடியாது. அவ்வளவு அதிகம். இவருடைய அன்னமய்யா பாடல்கள் பக்தி மயக்கத்தை ஏற்படுத்தும். வீடுகள் தோறும் இவை பாடப்படுகின்றன. இதைப் போலவே, கல்கியின் "காற்றினிலே வரும் கீதம்", ராஜாஜியின் "குறை ஒன்றும் இல்லை" ஆகியவை இசை நிகழ்ச்சிகளில் இடம் பெறும் முக்கியமான பாடல்களாகிவிட்டன.

தியாகராஜ சுவாமிகளின் சிஷ்யப் பரம்பரையைச் சேர்ந்த மகாவைத்தியநாத சிவம், 72 மேளகர்த்தா ராகங்களில் சமஸ்கிருதத்தில் பாடல் இயற்றினார். இவர் காலம் 1844 - 1893 ஆகும். வெங்கடஹரி 72 மேளகர்த்தா ராகங்களை வகுத்த முறையில் இவர் பாடல் இயற்றினார். சுத்த மத்திமம், பிரதி மத்திமத்தில் ஒவ்வொன்றிலும் 36 ராகங்கள், மராத்தி மொழியில் தனிநபர் ஒருவரைப் புகழ்ந்து லாவணி வெங்கடராஜ் முன்னர் இயற்றியதைப் பார்த்து சமஸ்கிருதத்தில் சிவம் புதிதாக இயற்றினார்.

டாக்டர். எம்.எஸ். வெறும் கலைஞர் மட்டும் அல்ல; இசையுலகில் இணையற்றுத் திகழும் ஞானியுமாவார் ! ★

# 'பாரத ரத்னா' சி.சுப்பிரமணியம்



இந்திய நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரதரத்னா' விருது பெற்றிருக்கிறார், மூத்த அரசியல் மேதைகளில் ஒருவரான திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள்.

இதுபற்றி - நோபல் பரிசு பெற்றவரான நார்மன் இ.போர்லாக், திரு.சி.எஸ்.சுக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

'1965-66ஆம் ஆண்டுகளில் இந்திய நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டபோது, நீங்கள் எடுத்த கொள்கை முடிவுகளே அங்கே அந்நாட்டை ஆபத்திலிருந்து மீட்டன. அப்போது தாங்கள் கொண்டுவந்த 'பசுமைப் புரட்சி'த் திட்டம் காரணமாக இந்தியாவில் உணவு உற்பத்தி அதிகரித்தது; விவசாயப் பெருமக்களின் வருவாய் பெருகியது'...

- என்றெல்லாம் அவர் அந்தக் கடிதத்தில் புகழ்ந்து பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்.

அயல்நாட்டவரே இவ்வாறு நினைவில் வைத்துள்ள அந்த அற்புதத் திட்டத்தின் நேரடிப் பலனை அனுபவித்தவர்களல்லவா நாம்!

இந்த ஆண்டு, இவரையும் சேர்த்து மேலும் எம்.எஸ்.சுப்புலட்சுமி, ஏ.பி.ஜே. அப்துல் கலாம் உட்பட - 6 பேருக்குப் 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமை பெற்றது இந்திய அரசு. விருது வழங்கப்பட்ட நாளில் இவர் உடல் நலிவுற்றிருந்ததால், அதை நேரில் சென்று பெற்றுக்கொள்ள இயலவில்லை; எனவே, பிறகு இந்தியக் குடியரசுத் தலைவரே அவ்விருதை சி.எஸ்.சுக்கு நேரில் வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டது.

கோவை மாவட்டம் - பொள்ளாச்சிக்கு அருகேயுள்ள செங்குத்துப்பாளையம் என்ற சிற்றூரில், 30.1.1910 அன்று, சிதம்பரம் கவுண்டர் - வள்ளியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள். உயர் படிப்பை முடித்தபின், கோவையில் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கினார்; அதன்பிறகு அரசியல் பிரவேசம்.

இவரது மனைவியாரின் பெயர் திருமதிசகுந்தலா என்பதாகும்.

தமிழ்நாட்டில் - 1952-ல், மூதறிஞர் ராஜாஜி அமைச்சரவையில்தான் முதன்முதல் இவர் அமைச்சராகப் பொறுப்பேற்றார். பிறகு தொடர்ந்து கர்ம வீரர் காமராசர், பெரியவர் பக்தவத்சலம் போன்ற பெருமக்களின் அமைச்சரவை களிலெல்லாம்கூட இடம் பெற்றிருந்து, இணையற்ற நற்பணிகளால் புகழ்பெற்ற பெருமையாளர் சி.எஸ், சிறந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தன்னலம் கருதாத தேசியவாதி, திறமையான நிர்வாகி, அமைச்சராக ஆன பிறகு மட்டுமல்ல; நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் உறுப்பினராகப் பங்கேற்றிருந்த காலத்திலும் தம்முடைய விவாதத்தைச் சரியான புள்ளி விவரங்களோடு எடுத்து வைத்து வாதிட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்; நல்ல நிர்வாகி; சிறந்த மேடைப்பேச்சாளர்; தேர்ந்த எழுத்தாளர் 'தமிழால் முடியும்' என்கிற ஒரு நூலே இதற்குச் சாட்சி, பேச்சிலே மட்டுமன்றிச் செயலிலும் சீர்திருத்தத்தைக் கடைப்பிடித்து வருபவர்.

இவ்வாறான அரிய சிறப்புகளாலேயே ஜவகர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில், மத்திய அமைச்சராகவும் இவர் பதவியிலமர்த்தப்பட்டார்.

நேருவின் மறைவுக்குப் பின்னர் அமைந்த லால்பகதூர் சாஸ்திரி அமைச்சரவையிலும் இவர் இடம் பெற்றார். அப்போதுதான் நாட்டின் உணவுத் தட்டுப்பாட்டைத் தீர்த்துவைக்கும் 'பசுமைப்புரட்சித் திட்டம்' இவரால் உருவாக்கப்பட்டது. இதில் இவருக்குத் துணைநின்றவர் திரு.எம்.எஸ்.சுவாமிநாதன் ஆவார்.

பிறகு, திருமதி இந்திராகாந்தி அம்மையார் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்து இவர் வகையுற வடிவமைத்த வரவு செலவுத் திட்டங்கள் உலகப் புகழ் பெற்றன.

பிறகு - அண்மைக் காலத்தில், மகாராட்டிர மாநில ஆளுநராகவும் பதவி வகித்துத் தமது பண்பட்ட உள்ளத்தால் உயர்வு பெற்றார் திரு.சி.எஸ்.

'பாரதரத்னா' விருது பெற்றுள்ள அவர் - 'என் வழிகாட்டியான எனது சித்தப்பா - காலம் சென்ற சுவாமி சித்பவானந்தா, அரசியலில் என்னை ஊக்குவித்த ராஜாஜி, நேருஜி ஆகியோருக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்'

- என்று விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கிடைத்ததும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள்.

மத்திய அரசிலும், மாநில அரசிலும் அவர் அமைச்சராக இருந்தபோது, தனக்கு எவ்வளவு வேண்டியவராக இருந்தாலும் சரி; தகுதியில்லாத பட்சத்தில் யாருக்கும் சிபாரிசு செய்ததே இல்லை.

*"என்னைப் பொறுத்தவரையில் கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் நான் தலையிடமாட்டேன் என்ற உறுதியை நானாக எனக்கு விதித்துக்கொண்டேன்.*

*டாக்டர் எல்.கே.முத்துசாமியின் புதல்வர் ராமகிருஷ்ணன் ஓரளவு குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்ததால், அவருக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. ராமகிருஷ்ணன் என்னை அணுகினார். ஆனால், கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் தலையிடுவது இல்லை என்ற எனது கொள்கையில் நான் உறுதியாக இருந்தேன். ராமகிருஷ்ணன் பிறகு எனது மருமகனாக - அதாவது எனது மகளை மணக்க இருந்தவர்".*

- 'என் வாழ்க்கை நினைவுகள்' என்று அவர் எழுதியுள்ள புத்தகத்தில், அவரே தம் பிடிவாத குணம் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதி இது!

**- மதுராந்தகன்**

# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள புஞ்சை சங்கேந்தி கிராமம் எங்கள் ஊராகும். எங்கள் ஊருக்குப் பேருந்து தட எண்.91, வண்டி எண். டி.என். 45-0465 என்ற எண்ணுள்ள பேருந்து வந்துகொண்டிருந்தது. இப்போது அதற்குப் பதிலாக டி.எண். 45 என்-0961 என்ற எண்ணுள்ள பேட்டவாய்த்தலை சென்று வந்த எல்.எஸ்.எஸ். வண்டி வந்தது. டி.என்.45 என்.ஒ. 465 கடந்த 1 வருட காலமாகத் தமது பயணத்தை முழுமையாகவோ, குறிப்பிட்ட நேரத்துப்படியோ வருடத்திற்கு 70% நாள்கூட முழுமையாகச் செயல்பட்டதில்லை. அக்குறையைப் போக்க வந்த பேருந்தும் அதே நிலை. இப்படி எங்கள் ஊருக்கு வந்துசெல்லும் பேருந்து எப்பொழுது வரும் எப்பொழுது திரும்பும் என்ற கேள்வி தினமும் மக்களின் மனதில் எழக்கூடிய சாதாரண நிகழ்ச்சியாகும். இதனால் எங்கள் ஊரிலிருந்து 3 கி.மீ. தினமும் நடந்துசெல்லும் நோயுற்றவர்களும், பள்ளிச் சிறார்களும், சிறு வியாபாரிகளும் வெளியூரிலிருந்து வந்து போகும் பக்தர்களும் ஏராளம். இது குறித்து அதிகாரிகளிடம் பல முறை விண்ணப்பித்தும் எவ்விதப் பயனும் இல்லை. இக்குறையினைத் தீர்க்குமாறு தங்களை மிகவும் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

- கிராம மக்கள்
*லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்*



தீர்வு :

பேருந்து வழித்தட எண்.91 என்ற புஞ்சை சங்கேந்தி கிராமத்திற்கு இயக்கப்படும் நகரப் பேருந்து எண். டி.என்45/என்.0961 ஐ கால அட்டவணைப்படி, நடை இழப்பின்றி இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

*- மேலாண்மை இயக்குநர்,*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*கும்பகோணம் (கோட்டம் II)*

பிரச்சினை :

எங்கள் ஊர் நீலகிரி மாவட்டம், பாலாடா என்ற கிராமம் ஆகும். இங்கு தமிழ்நாடு அரசின் பொது நூலகத்துறையின் கீழ், பகுதி நேர நூலகம், 1996-ம் வருடம் ஜனவரி மாதத்தில் திறக்கப்பட்டது. அரசு 30.1.96ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்கும் திட்டத்தில் எங்களது கேத்தி பாலாடா உள்ளது என்பது தெரிந்ததே. ஆணை பிறப்பிக்கப்பட்டு,6 மாதம் ஆகியும் இன்னமும் இந்த கிராமப்புற நூலகம் திறக்கப்படவில்லை. இதை எப்பொழுது திறக்க உள்ளீர்கள்? மேலும் அரசு கோரியிருந்தபடி அனைத்து நிபந்தனை களையும் எங்கள் கிராமத்தில் பூர்த்தி செய்துள்ளோம். எனவே இது குறித்து எப்பொழுது எங்கள் ஊரில் கிராமப்புற நூலகம் திறக்க உள்ளீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

- கிராம மக்கள்
*பாலாடா*

தீர்வு :

பார்வை 1-ல் கண்ட கடிதத்திற்கிணங்க கேத்தி (பாலாடாவில்) ஊர்ப்புற நூலகங்கள்திறக்க ஊர்ப்புற நூலகர்கள் பணியிடம் இனச் சுழற்சி முறைப்படி நியமனம் செய்யப்பட்டமையால் ஏற்கெனவே பணி புரிந்துவந்த பகுதி நேர நூலகர்கள் நான்கு பேர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்து உள்ள்தாலும், பணியிடத்தைத் தற்போது காலியாக வைக்கத் தீர்ப்பாணையத்தில் ஆணை வழங்கப் பட்டுள்ளது. ஆகவே,கேத்தி பாலாடா, பில்லிக்கம்பை, சம்பட்டி, குருத்துக்குளி ஆகிய ஊர்ப்புற நூலகங்களின் தற்போதைய நிலையினைப் பொது நூலக இயக்குநர்-சென்னைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிவுரைக் கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நூலக அலுவலர் (உதகை) தெரிவித்துள்ளார் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- திரு. பி. சோனை, இ.ஆ.ப.,*
*மாவட்ட ஆட்சித் தலைவர்,*
*உதகமண்டலம்.*

பிரச்சினை :

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த 1. மொட்டையாண்டி, சேனிக்கோட்டை, சூரகுடி, இடையார் ஊராட்சியைச் சேர்ந்த வீரண்டான், கள்ளியம்பள் ஆகிய குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில் அறந்தாங்கி - காரைக்குடி, தேனிப்பட்டி புதுப்பட்டி வழியாகச் செல்லும் மெயின் சாலையில் 4.05வது கி.மீ. இணைப்புச் சாலை துவக்கப்பட்டு, அந்தச் சாலை இடையார் ஏரியின் மேல் வழியாகச் சென்று மொட்டையாண்டி - சேவிகோட்டை கிராமங்களுக்கு மத்தியில் சூரடி கிராமத்திற்கு வடபுறம் வீரண்டான் ஆரம்பப் பள்ளி வழியாகக் கள்ளியம்பள் கிராமத்திற்குத் தென்புறம் சென்று, அறந்தாங்கி - புதுவயல், இடையார் புதுவாக்கோட்டை, கம்மங்காடு வழியாகச் செல்லும் மெயின் சாலையில் இடையார் கூட்டுக் குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையம் அருகில் போய் இணைகிறது. இச்சாலையின் மொத்த நீளம் சுமார் 6 கி.மீ. ஆகும். இச்சாலையைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்து தரக்கோரி பல மனுக்கள் அனுப்பியும் (பல வருடங்களாக) எவ்விதப் பலனுமில்லை. ஏனெனில் இச்சாலை வழியாகத்தான் கிராமவாசிகள் விவசாயம் செய்யும் சுமார் 1000 ஏக்கர் நஞ்சை நெல் விவசாயம் செய்யத் தேவையான இடுபொருட்கள் கொண்டு வரவும், லாரி - டிராக்டர் வண்டி, வாகனங்கள் மேலும் மக்களுக்கு டவுன்பஸ் வசதி சரியாக அமையவும் இச்சாலைதான் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனவே, இச்சாலையைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்யத் தக்க நடவடிக்கை எடுத்து, எங்களின் குறைகளைத் தீர்த்து வைக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

— மா.மு. கருப்பையா
மொட்டையாண்டி
புதுக்கோட்டை மாவட்டம்.

தீர்வு :

*புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியைச் சார்ந்த மொட்டையாண்டி கிராமத்தில் உள்ள சாலையினைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்யக்கோரி பார்வை 1ல் காணும் இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்படி சாலையில் நடைபெறும் பணியினைக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றேன்.*

1. *1997 - 98ஆம் ஆண்டுக்கான 10-வது நிதிக்குழு சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் மொட்டையாண்டி சாலை கி.மீ. 2/6ல் குழாய்ப்பாலம் அமைக்க ரூ.80,000 மதிப்பீட்டில் டெண்டர் முடிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட உள்ளது.*
2. *1997 - 98ஆம் ஆண்டுக்கான பராளுமன்றத் தொகுதி மேம்பாடு நிதி மூலம் ரூ.5.90 இலட்சத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறையின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

*மேலும் 1998 - 99ஆம் ஆண்டு நிதியில் மேற்படி சாலையினை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

— ஆணையர், ஊராட்சி ஒன்றியம்,
அறந்தாங்கி

பிரச்சினை :

கோவை மாவட்டம் சுல்தான்பேட்டை ஒன்றியத்திற் குட்பட்ட அப்பநாயக்கன்பட்டி கிராமம் எங்கள் ஊராகும். அண்மையில் பெய்த பலத்த மழையின் காரணமாக 1982-ஆம் வருடம் அரசு கட்டிக்கொடுத்த தொகுப்பு வீடுகள் (இந்திரா நினைவு குடியிருப்பில்) இடிந்துள்ளன. மழைநீர் வெள்ளம் காலனியில் வந்ததே காரணம், புதிதாக எங்கள் காலனிக்கு அருகில் திரு.கோவிந்தராஜ் என்பவரது பட்டாபூமியினை பிளாட் போட்டு விற்பனை செய்யப் பள்ளத்தின் நடுவில் குறுகிய பாலம் கட்டப்பட்டது. மழை வெள்ளம் அதிகமாய் வந்ததால், பாலம் ரிங் பைப்பில் போகமுடியாமல் நீர் தேங்கி, கிழக்குத் திசையில் பாய்ந்தது. எங்கள் வீடுகள் இடிந்தும், சிலவற்றின் மேல் கூரைகள் இடிந்தும், காலனியைச் சுற்றியும் மழைநீர் தேங்கியும் உள்ளது. எனவே இடிந்த வீட்டினைப் பழுதுபார்த்தும், மழைநீர் காலனியில் தேங்காவண்ணமும், தேங்கிய நீரை விரைவில் வெளியேற்றவும், தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கத் தாங்கள் உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஊர்ப்பொதுமக்கள், அரிசனக்காலனி,
அப்பநாயக்கன்பட்டி.

தீர்வு :

*சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றிய அப்பநாயக்கன் பட்டி, அரிசன காலனி பொதுமக்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, கீழே குறிப்பிட்டவாறு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மழையின் காரணத்தால், அப்பநாயக்கன் பட்டி அரிசனக் காலனிக்குள் மழைநீர் புகுந்து சேதமடைந்துள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள 17 நபர்களின் வீடுகளுக்குப் பதிலாகப் புதிதாகத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியக் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரின் ந.க.4478/97/பி4 நாள் 12.12.97ல் முன்மொழிவு அனுப்பப் பட்டுள்ளது. முன்மொழிவுகள் பரிசீலனை செய்யப்பட்டு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க. 3649/97/அ3 நாள். 5.2.98ல் கீழே குறிப்பிட்டுள்ள 17 பயனாளிகளுக்கு அவர்களின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையில் 31.3.98க்குள் முடிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.*

| வ. எண் | பயனாளியின் பெயர் மற்றும் முகவரி | வீட்டு எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| திரு/திருமதி | | | |
| 1. | குமரன் த/பெ.பழனி, அப்பநாயக்கன்பட்டி | 1/222 | 25,900.00 |
| 2. | பழனாள், சு/பெ. சுப்பன் | 1/124 | 26,000.00 |
| 3. | கருப்பன், த/பெ.பச்சான் | 1/131 | 26,000.00 |
| 4. | சுப்பன், த/பெ.சின்னான் | 1/120 | 26,050.00 |
| 5. | சின்னாள், த/பெ.நாச்சி | 1/116 | 26,100.00 |
| 6. | மாறன், த/பெ.நாச்சி | 1/119 | 25,900.00 |
| 7. | பழனிச்சாமி, த/பெ.நாச்சி | 1/108 | 25,900.00 |
| 8. | பழனிச்சாமி, த/பெ.அம்பான் | 1/102 | 26,100.00 |

| | | | |
|---|---|---|---|
| 9. | மதுராள், க/பெ.ரங்கன் | 1/104 | 26,100.00 |
| 10. | சின்னபழனி, த/பெ.கருப்பன் | - | 26,050.00 |
| 11. | சின்னான், த/பெ.மாறன் | 1/109 | 25,900.00 |
| 12. | ரங்கன், த/பெ.சுப்பன் | 1/123 | 25,900.00 |
| 13. | பழனி, த/பெ.நாச்சி | 1/127 | 25,900.00 |
| 14. | பழனி, த/பெ.மாறன் | 1/121 | 25,900.00 |
| 15. | சுப்பன், த/பெ.மாறன் | 1/110 | 26,950.00 |
| 16. | திரு. ஒவன், த/பெ. மாறன் | 1/106 | 26,000.00 |
| 17. | திரு. பழனி, த/பெ. சுப்பன் | 1/148 | 26,000.00 |
| | | | ரூ.4,41,650.00 |

பொதுமக்ககள் விரும்பியபடி எதிர்காலத்தில் மழைநீர் அரிசனக் காலனிக்குள் செல்லாதிருக்கப் பாதுகாப்பிற்காக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் அப்பநாயக்கன்பட்டி வண்ணான்குட்டை அருகில் வெள்ளத் தடுப்புச் சுவர் ரூ.1.50 மிதிப்பீட்டில் கட்டுவதற்கு 19.12.97ம் தேதி சுல்தான்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலரின் ந.க.851/97/ஏ9ல் முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிநிலையின் அடிப்படையில் 1998-99ஆம் நிதியாண்டில் வேலை (ந.க.11232/97/அ4 உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ்) அனுமதியளிக்கப்பட்டு துவங்கப்படும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஜி.சந்தானம்,
மாவட்ட ஆட்சித்தலைவர்
கோவை மாவட்டம்

**பிரச்சினை :**

எங்கள் ஊர் மதுரை மவாட்டம் சமயநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆகும். எங்கள் ஊரில் ஒரே ஒரு தியேட்டர்தான் உள்ளது. இத் தியேட்டரில் குறைந்த அளவு கட்டணத்தை அச்சு செய்து மக்களுக்கு ரூ.8.50 ஆக கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். தியேட்டர் டிக்கெட்டில் ரூ.2.30 அச்சிடப்பபட்ட கட்டணம் ஆகும். ஏன் இவ்வளவு கட்டணம் வசூல் செய்தீர்கள் என்று கேட்டால் அடிதடி நடத்துகிறார். இதனால் பொது மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இதனால் அரசுக்கு வரி ஏய்ப்பு நடக்கிறது. அரசுக்குப் பல ஆயிரம் ரூபாய்கள் இதனால் நட்டம் ஏற்படுகிறது. எனவே, இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— பி.ஜி. தவிடன், எம்.உத்திரம்,
சமயநல்லூர், மதுரை மாவட்டம்

**தீர்வு :**

மேற்படி தியேட்டர் (பரவை - ஊர்மெச்சிகுளம் பகுதியில் உள்ளது) அப்படி எதுவும் கூடுதலாக வசூல் செய்ததாகத் தெரியவில்லை. மேலும் சமயநல்லூர் ஊராட்சிப் பகுதி தேசிய நெடுஞ்சாலை மற்றும் இருப்புப் பாதையில் உள்ளபடியாலும் போக்குவரத்து உள்ள பகுதியாக உள்ளதால் இங்கு அனைத்துக் கட்சிகள் மற்றும் பொதுத் தொண்டு நிறுவனங்களின் பார்வைகள் தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கும். மேலும் இப்பகுதிமக்கள்ரவுடித்தனத்தை எப்பொழுதும் அனுமதிக்கமாட்டார்கள் என்பதைத் தாங்கள் காவல் துறையைத் தொடர்புகொண்டால்தங்களுக்குத்தெரியும். விலாசத்தில் உள்ள பி.ஜி.தவிடன் என்ற நபர் உண்மையான விலாசமாகத் தெரியவில்லை. அப்படி ஒரு பெயர் இப்பகுதியில் இல்லை என்பதையும் புகார் உண்மை இல்லை என்பதையும் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

— தலைவர்,
சமயநல்லூர் ஊராட்சி

**பிரச்சினை :**

வெண்கரும்பூர் கிராமம் ச.எண்.210, 211, 212 நத்தம் புறம்போக்காக உள்ளது. மேற்படி கிராமம் நத்தம் சர்வே செய்தபோது உட்பிரிவு செய்யாமல் பட்டா கொடுக்கப்படாமல் விடுபட்டுவிட்டது. மேற்படி இடத்தில் சுமார் தற்போது 40 குடும்பத்தினர் வீடுகள் கட்டி குடியிருந்து வீட்டுவரி செலுத்தியும் வருகிறார்கள். மேற்படி பகுதிக்குக் 'கலைஞர் கருணாநிதி நகர்' என்று பெயரிடப்பட்டும் உள்ளது. எனவே, தாங்கள் மேற்கண்ட குடியிருப்புகளுக்கு நத்தம்பட்டா வழங்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

—ஊராட்சி மன்றத் தலைவர்
வெண்கரும்பூர், பென்னாடம்,
கடலூர் மாவட்டம்

**தீர்வு :**

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், வெண்கரும்பூர் கிராம ஊரட்சி மன்றத் தலைவர் கொடுத்துள்ள மனுவின் மீது திட்டக்குடி நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேற்படி கிராமப் புல எண்கள். 210, 211, 212 ஆகியவற்றில் புல எண். 211 மட்டுமே நத்தம் புலம் என்றும், இப்புலத்தில் நன்கு வளர்ந்த இலுப்பை மற்றும் புளியமரங்கள் உள்ளதால் மனைப்பட்டா வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டதாகவும், தற்போது புலப்பரிசீலனை செய்ததில் மனைப்பட்டா வழங்கத் தகுதியுள்ள 39 இனங்கள் உள்ளன என்றும், இவைகளுக்கு மட்டும் மனைப்பட்டாவும், மீதம் பரப்பில் அமைந்துள்ள மரங்களுக்கு மரப்பட்டாக்களும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார். மேலும் புல எண்கள். 210, 212ஆகியவை பட்டா புஞ்சைப் புலங்கள் என்றும், எனவே, இப்புலங்கள் நத்தம் அளவைப் பணிக்குக் கொனரப் படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, புல எண்.211 நத்தம் புலத்தில் மட்டும் தற்போது அமைந்துள்ள வீடுகளுக்கு மனைப்பட்டாக்கள் வழங்கவும், இப்புலத்தின் மீதம் பரப்பில் அமைந்துள்ள மரங்களுக்கு மரப்பட்டாக்கள் வழங்கவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டக்குடி வட்டாட்சியருக்குப் பார்வை 3 கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளேன் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மாவட்ட வருவாய் அலுவலர்,
கடலூர் மாவட்டம், கடலூர்,

**பிரச்சினை :**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற் குட்பட்ட தனக்கண் குளம் கிராமம் திருவள்ளுவர் நகரில் வசித்து வருகின்றோம். இங்கு 5000த்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். குறிப்பாக 80 விழுக்காடு மக்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக உள்ளனர். மேலும்,

இப்பகுதியின் அருகாமையில் பொது நூலகம் இல்லாதார் மக்கள் விழிப்புணர்வு அற்றவர்களாக இருக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே, மாவட்ட நூலகத்தை அணுகி நூலகம் அமைக்க அவர்கள் தந்த விதிமுறைகளின்படி நூலகத் தளவாடங்களான வாடகையில்லாத அரசு கட்டிடம், பிற்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 7 சென்ட் காலி இடம் பத்திரப் பதிவுடன் இரு புரவலர்கள் தொகை ரூ.2000 குறைந்தது200 உறுப்பினர்கள் தொகை ரூ.6000 ஸ்டீல் பீரோ-1, ஸ்டீல் மேஜை-1, ஸ்டீல் சேர்-10, டியூப்லைட் பிட்டிங் ஆகியன திருநகர் கிளை நூலகரிடம் 9.10.97ல் ஒப்படைக்கப்பட்டும் இதன் விவரங்கள் மாவட்ட நூலகருக்கும், மாநிலப் பொது நூலக இயக்குநருக்கும் கடிதத்தின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டும் காலதாமதம் ஆவது தவிர்க்க இயலாததாக உள்ளது. ஆகவே, எங்கள் பகுதிக்கு நூலகம் திறக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
நண்பர்கள் அன்புக்குழு,
திருவள்ளுவர் நகர், திருநகர்
மதுரை - 6.



தீர்வு :

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற் குட்பட்ட தனக்கன் குளம் கிராமம் திருவள்ளுவர் நகரில் பகுதிநேர நூலகம் உள்ளது என்றும், அவ்வூரில் உடன் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு உடன் ஆவன செய்யும்படியும் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக மதுரை மாவட்ட நூலக அலுவலருக்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது. விரைவில் அப்பகுதியில் நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது நூலக இயக்குநர்,
அண்ணாசாலை, சென்னை - 2.

பிரச்சினை :

பழனி வட்டம் பழைய ஆயக்குடி கிராமத்தில் ஆயக்குடி பேரூராட்சிக்குச் சொந்தமான சந்தைப் பேட்டை உள்ளது. இங்குதான் திங்கட்கிழமை தோறும் வாரச்சந்தை நடப்பது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக இச்சந்தைப் பேட்டை வளாகம் முறையான பராமரிப்பின்றி, திறந்த வெளி பொதுக்கழிப்பறை போன்ற நிலைக்கு வந்துவிட்டது. இதனால் வாரச்சந்தை போக்குவரத்து நெருக்கடி மிகுந்த பிரதான (திண்டுக்கல் - பழனி) நெடுஞ்சாலை ஓரத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இதனால் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. விபத்து நடப்பதற்கான சூழ்நிலையும் உள்ளது. இதுகுறித்துப் பல மனுக்கள் அனுப்பியும் எந்த ஒரு பலனுமில்லை.

மேலும் இதே சந்தைப்பேட்டை வளாகத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் 4,5 ஆண்டுகள் முன்பு கட்டப்பட்ட சமுதாயக் கூடம் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கூட கட்டடம் என்ன நோக்கத்திற்காகக்கட்டப்பட்டதோ அதை நிறைவேற்றும் வகையில் அதன் உபயோகம் இருக்க வேண்டும். அல்லது ஊர்மக்கள் அனைவருக்கும் பயன்படும் விதத்தில் நூலகம் / படிப்பகம் போன்றவற்றை இக்கட்டடத்தில் ஏற்படுத்த வேண்டும். எதுவும் செய்யாமல் ஏன் பூட்டப்பட்ட நிலையில் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளது? இது குறித்தும் கோரிக்கை மனுக்கள் அனுப்பியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, தாங்கள் தக்க நடிவடிக்கை எடுத்து, இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுகொள்கிறேன்.

— கிராமப்பொதுமக்களின் சார்பாக நா. புகழேந்தி
பழைய ஆய்க்குடி, பழனி வட்டம், திண்டுக்கல் வட்டம்

தீர்வு :

ஆயக்குடி பேரூராட்சியின் 4வது வார்டு சந்தைப்பேட்டையில் சில வருடங்களுக்கு முன்பு குப்பைகள் கொட்டப்பட்டு வந்தது. கடந்த ஓராண்டாகக் குப்பை கொட்டுவது நிறுத்தப்பட்டு உள்ளது. ஏற்கெனவே, குப்பைத் தொட்டியை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்ககப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் அரசின் நலத்துறை மூலம் சமுதாயக்கூடம் ஒன்று கட்டப்பட்டு, அது தற்சமயம் பொதுமக்கள் பயன்படுத்த முன்வராத நிலையில் உள்ளது. சந்தை கூடும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மேற்படி வாரசந்தை கூடும் அளவுக்குச் சுத்தம் செய்து பிளீச்சிங் பவுடர் சுண்ணாம்புத்தூள் தூவியும், பினாயில் தெளித்தும் வேலைகள் செய்யப்படுகிறது. தினந்தோறும் காலை வேளையில் சந்தையின் உட்புறம் துப்புரவு செய்தும், கக்கூஸ் கழிவுகளை அப்புறப்படுத்தியும் வேலைகள் செய்து முடிக்கப்படுகிறது. சந்தை நாட்களில் சாலை ஓரங்களில் கடைபோடும் நபர்களைச் சந்தையின் உட்புறம் கடையைப் போட அறிவுறுத்தி, சாலை ஓரங்களில் கடை போடாதவாறு கண்காணிக்கப் படுகிறது.

இதற்கிடையில் சந்தை காம்பவுண்டு உட்புறம் தற்காலிகக் கடைகள் போடவும் பேரூராட்சி மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தாட்கோ லோன் மூலம் கடைகள் கட்டி வாடகைக்கு விடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு செய்யும்போது வாரச்சந்தை சுத்தமாக வாய்ப்பு உள்ளது.

— செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி (தேர்வுநிலை)
திண்டுக்கல் மாவட்டம்.

# வாசகர் இதயம்

தமிழ்நாடு அரசு எனக்குத் 'தந்தை பெரியார் சமுகநல விருது' வழங்கிச் சிறப்பித்ததைத் தங்கள் இதழில் நல்லமுறையில் - முதலமைச்சரின் சொற்பொழிவோடு வெளியிட்டிருந்தீர்கள். அந்த இதழில் இருந்த மற்ற விஷயங்களும் எனக்கு மகிழ்வூட்டும்படி இருந்தன - என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- எஸ். தவமணிராசன்,
சிவகாசி.

பொங்கல் சிறப்பு மலர் கண்டேன்; தங்கக் கவிதை பல உண்டேன்; பொங்கு மகிழ்ச்சியைப் புரிந்து கொண்டேன்; எங்கெங்கும் புகழ் மணம் வீசட்டும் - மங்கலத் 'தமிழரசு' மண்மிசை நின்றே.

- கெங்கை பாலதா,
சின்னக்கலையம்புத்தூர்.

இலக்கியத்தில், பூக்களைக் கொண்டே பெண்கள் எப்படியெல்லாம் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இனிக்க இனிக்க விளக்கியிருந்த சிலம்பொலியாரின் கருத்துகள் மிகவும் அருமை.

- மு. செல்வம்,
கீரப்பாளையம்.

பொங்கல் சிறப்பு மலரில், கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன் எழுதியிருந்த 'ஓர் இலக்கியப் பார்வை' கட்டுரை நற்சிந்தனைக்கு விருந்தாக இருந்தது; பாராட்டுகிறேன்.

- கே.எஸ்.அப்துல் ரகுமான்,
திருவல்லிக்கேணி.

தமிழரசில் தொடர்ந்து வெளிவரும் "எங்கள் ஊர்ப் பிரச்சினை" பகுதி மிகவும் பயனுள்ளதாகும். என் போன்ற சாதாரணமானவர்கள். எல்லா ஊர்களிலிருந்தும் தமது குறைகளைத் தெரிவிக்கவும், "தமிழரசு" மூலம் அவற்றை நிவர்த்தித்துக் கொள்ளவும். அரசின் பல நன்மைகளைப் பெறவும் அப்பகுதி நல்ல விதமாக உதவுகிறது.

- சு.பட்டுசாமி
ஆணையாங்குப்பம்

அரசின் திட்டச் செய்திகள், கட்டுரைகள், கதை, கவிதை, இலக்கியம், துணுக்குச் செய்திகள், விழாப் படங்கள் - என்று தொடர்ந்து வெளியிட்டு வியக்கவைத்து விடுகிறீர்கள்; இதழுக்கு இதழ் மெருகு கூடிவரும் 'தமிழரசு'க்கு நல்வாழ்த்து.


- எம்.என்.குபேந்திரன்,
சென்னை.

தமிழரசு ஜனவரி இதழில், கலைஞரின் தனித்தமிழ்ச் சொல்லாக்கம் பற்றிய கட்டுரை அருமையாக இருந்தது; அரிய பல செய்திகளைப் புரிந்து கொள்ளச் செய்தது. கலைஞரின் 'தமிழ்வழிக் கல்வி' மொத்தத்தில் சிறப்பான வெளியீடு.

- மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

பிப்ரவரி தமிழரசில் இடம்பெற்றிருந்த 'எதிர்முனை' சிறுகதை சிறப்பாக இருந்தது; முழுக்க முழுக்க இலக்கியப் புதையலாக இருந்தது. நன்றி.

- கா.நா. ராஜசேகர்,
மங்களபுரம்.



# சரித்திரம் படைத்த

# டாக்டர் கலாம்

'இந்திய ஏவுகணைத் தொழில் நுட்பத்தின் தந்தை' எனப்படும் நிபுணரான புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்கு நம் இந்திய நாட்டின் இணையற்ற விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது. வழங்கியவர் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்கள்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசகராகவும் - பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி வளர்ச்சி அமைப்பின் தலைவராகவும், இருப்பது மட்டுமல்ல; இலகு ரகப் போர் விமானம், அர்ஜுன் டாங்கிகள் ஆகியவற்றை உருவாக்குவதிலும் இவர் முக்கியப் பங்காற்றியிருக்கிறார்.

மறைந்த டாக்டர் விசுவேசுவரய்யாவுக்குப் பிறகு பொறியாளர்களைப் பொறுத்த மட்டில் இவருக்குத்தான் 'பாரத ரத்னா' விருது கிடைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டில் மிகக் குறுகிய காலத்திலேயே ஏவுகணைத் தொழில் நுட்பத்தை மேம்படுத்தி - அது தொடர்பான வளர்ச்சித் திட்டம் வெற்றியடைச் செய்ததில் பெரும்பங்கு இவருடையதாகும்.

பாதுகாப்பு அமைப்புகள், உயர்கல்வி நிலையங்கள், விஞ்ஞானக் கூடங்களில் பணிபுரிந்துவந்த திறமையாளர்களை ஒருங்கிணைத்து ஆய்வுப் பணியை மேற்கொண்டதால்தான் குறுகிய காலத்திலேயே ஏவுகணைத் தொழில் நுட்பத்தை மேம்படுத்த முடிந்தது.

திரு.கலாமைப் பொறுத்த வரை, நாம் நெஞ்சுயர்த்திப் பெருமைப்பட வேண்டிய செய்தி, அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஆம், 1931 அக்டோபர் 10ஆம் நாள் இராமேஸ்வரத்தில் பிறந்தவர் திரு.கலாம். முழுப் பெயர் அவுல் பக்கீர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம்.

**பிடித்ததும், பிடிக்காததும்**

மிக வறிய குடும்பத்தில் பிறந்த திரு.கலாம், ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மீடியம்தான்; பிறகு, திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரியில் பட்டப்படிப்பு; அதன்பின்னர் அவர் சென்னை எம்.ஐ.டி.யில் சேர்ந்து விமானப் பொறியியல் துறையில் தம் மேற்படிப்பைத் தொடர - அவருடைய சகோதரி தம்மிடமிருந்த நகையையெல்லாம் விற்றுப் பொருளுதவி செய்திருக்கிறார்.

இன்றைக்கும் கட்டைப் பிரம்மச்சாரியாகவே உள்ள திரு.அப்துல் கலாமுக்குத் தமிழ் இலக்கியம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், கதையெல்லாம் தெரியும்.

கவிதை இயற்றுதல், வீணை வாசித்தல் பிடிக்கும்; அசைவம் பிடிக்காது -



அதேபோல மது, சிகரெட் ஆகியவைகளும்கூட அறவே பிடிக்காது!

இதையெல்லாம் விட முக்கியமான ஒன்று, இளம்பருவத்தில் உயர்கல்வி முடிந்ததும் மேலும் வளரவோ - பொருள் திரட்டவோ கருதி, எந்த ஒரு வெளிநாட்டிற்கும் சென்றதில்லை திரு.அப்துல் கலாம். படித்து முடித்ததும் வெளிநாட்டிற்குப் போனால்தான் மரியாதை என்று கருதுவோர் இதை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

**முதலமைச்சர் வாழ்த்து**

டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்குப் 'பாரத ரத்னா' விருது அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு வாழ்த்துச் செய்தி கொடுத்திருந்தார் பெருமிதத்தோடு:

"நமது நாட்டில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருது எனப் போற்றப்படும் 'பாரத ரத்னா விருது' இந்தியாவின் தொழில்நுட்பச் சாதனையில் சரித்திரம் படைத்துவரும் விஞ்ஞான வித்தகர் டாக்டர் அப்துல் கலாமுக்கு அளிக்கப்பட்டிருப்பதும், அதுவும் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அளித்திருப்பதும் பெருமைக்குரியதும் பெருமகிழ்ச்சிக் குரியதுமாகும். அவருக்கு என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியதாகுக" - என்று அதில் முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' பட்டம் பெற்ற இவர், இதற்கு முன்பாக தேசிய வடிவமைப்பு விருது, ஓம் பிரகாஷ் பாஸின் விருது, நேரு பெயரிலான தேசிய விருது (மத்தியப் பிரதேசம்), ஆர்யபட்டா விருது (1994), நாயுடம்மா நினைவு தங்க மெடல் (1996), ஜி.எம்.மோதி அறிவியல் துறை விருது (1996), எச்.கே.ஃபெரோடியா விருது (1996) - ஆகிய விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

அதுமட்டுமா? 1981ல் டாக்டர் கலாமுக்கு இந்திய அரசின் 'பத்ம பூஷன்' பட்டம் வழங்கப்பட்டது. 1990ல் 'பத்ம விபூஷன்' பட்டமளித்துப் பாராட்டப்பட்டது.

இப்போது - டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் இந்திய விண்வெளி ஆய்வுப் பிரிவுத் துணைத் தலைவராகவும், இந்திய தேசியப் பொறியியல் இயக்க உறுப்பினராகவும், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழக உறுப்பினராகவும், இந்திய எலக்ட்ரானிக்ஸ் மற்றும் டெலிகம்யூனிகேஷன் அமைப்பின் உறுப்பினராகவும் உள்ளார்.

2020ல், இந்தியா எப்படி இருக்கவேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுக்கும் பெரும் பொறுப்பே, இவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது!

- பி.எல்.ஆர்.

# உலகம் இனியது

## கே. மீனாட்சிசுந்தரம்



**வா**ழ்க்கையைக் குறித்து மக்கள் இரண்டு விதமான மனப்பான்மையை உடையவராக இருக்கின்றனர்.

எல்லாம் துன்பமயம், எல்லாம் இன்பமயம் என்பவையே அவை. உலகில் துன்பந்தான் மிகுதியாய் உண்டு. இன்பம் சிறிதளவே என்பதுதான் பலர் கொள்கை. ஒரு ரூபாயில் பதினைந்தணாத் துன்பமும் ஒரு அணா இன்பமும் கலந்திருக்கிறது என்று ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. உண்மையை உணர்பவர்கள் உலகில் நிறைந்த இன்பங்களைக் காண்கின்றனர். துன்பமுண்டு என்பதை உணர்ந்தாலும் சோர்வடையாமல் நின்றால் அவற்றைக் களையமுடியும் என்ற உறுதியான எண்ணத்தை நிறுவுகின்றனர். உணர்ச்சியூட்டி எழுச்சி கொள்ளச் செய்த பாரதி உலகை இன்ப மயமாகவே காண்கிறார்.

பாரத நாயகியின் திருக்கையால் "உலகின்பக் கேணி" என எழுதப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைக்கிறார் நமது அமரகவி. "எத்தனைக் கோடியின்பம் வைத்தாய் இறைவா"! என்ற கவியைப் பாடுங்கால் நம்மை அறியாமல் உலகிலமைந்த இன்பங்கள் யாவற்றையும் நுகர்ந்து சுவைத்து இன்பத்தில் திளைக்கின்றோம். இயற்கை அழகினை அள்ளிப் பருகுகிறார். தனது வசன கவிதையில் "இவ்வுலகம் இனியது" எனத் தொடங்கி ஒவ்வொன்றையும் இனிய பொருளாகக் காணும்போது நம்மையும் மறந்து இனிக்கச் செய்கிறார். எனவே உலகம் இன்பம் நிறைந்ததே தவிர துன்பம் நிறைந்ததன்று என்பதைக் காட்டி உலகின்மீது வெறுப்புக் கொள்ளாது ஆசைகொள்ள வழி வகுக்கிறார்.

துன்பங்கள் எல்லாவற்றையும் எளிதில் போக்கிவிடலாம். பாப்பாப் பாட்டிலும், ஆத்தி சூடியிலும் அதைப் போக்குவதற்குரிய பாதையைக் காட்டுகிறார். "துன்பம் மறந்திடு" என்று ஆத்திசூடியில் கூறுகின்ற கருத்து எவ்வளவு உயர்ந்தது; சிறந்தது தெரியுமா ?

**"துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்**
**சோர்ந்து விடலாகாது பாப்பா"**

துன்பங்கள் நெருங்கி வரலாம். ஆனால் அதைக்கண்டு சுருங்கிவிடக்கூடாது. ஏனெனில் "கெடுப்பது சோர்வு" என்றார் பாரதி. அது மட்டுமா கூறுகிறார் ? விநாயகர் நான்மணி மாலையில் விநாயகரை என்ன வேண்டுகிறார் ? கூர்ந்து கவனிக்கவேண்டும். இதோ அந்த வரிகள்:

**"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்**
**இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல் - உமைக்கினிய**
**மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்**
**சிந்தையே யிம்மூன்றுஞ் செய்".**

நமக்குத் தொழில்கள் மூன்று என அறுதியிட்டுக் கொண்டு உறுதியாகச் சோராதிருத்தல் வேண்டுமென்பதனை அவற்றில் ஒன்றாக அமைத்துக் கணநாதனை வேண்டுகிறார். உழைக்கவேண்டும். தனக்கா ? இல்லை, நாட்டுக்கு. உழைக்குங்கால் இமைப்பொழுது கூடச் சோராதிருத்தல் வேண்டும். பாருங்கள் ! பரந்த உள்ளத்தோடு எவ்வளவு தூரம் ஊக்கம், முயற்சி, உற்சாகம் வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார் என்று.

செயலாற்றுங்கால் எவ்வளவோ துன்பங்கள் நெருங்கலாம். தோல்வியும் ஏற்படலாம். ஆனால், தோல்வியில் கலங்காது, கேட்டிலும் துணிந்து நின்று நொந்தது சாகுமென உணர்ந்து, சிதையா நெஞ்சுகொண்டு சோராது தொழிலாற்ற வேண்டுமென்பதை அழகுற ஆத்திசூடியில் குறித்து அருமையான பாதை காட்டுகிறார்.

துன்பத்தை மறக்காமல் சோர்வுகொண்டு கவலையுடன் வாழ்பவன் கருகி, நைந்து, செத்தே தீருவான். நரகமும், முத்தியும் இங்கேயே இருக்கின்றன என்கிறார் பாரதியார்.

**"கவலைப்படுதலே கடுநரகம்மா**
**கவலையற்றிருத்தலே முக்தி"**

பாரதி அறுபத்தாறில் மரணமில்லாமல் வாழலாம் என்கிறார் கவிஞர். விஞ்ஞானக் கண்ணை வெளிக்காட்டி உண்மையை எடுத்து இயம்புகிறார். ''நாடியிலே அதிர்ச்சியினால் மரணம்" என்று "கோனாகிச் சாத்திரத்தை ஆளும் மாண்பார் ஜகதீச சந்த்ர வசு" கூறுகின்றார். இந்த நாடியதிர்ச்சிக்குக் காரணம் என்ன ? "கவலையினால் நாடி எலாம் தழலாய் வேகும்" என்கிறார் ஆராய்ச்சிக் கவிஞர். எனவே ''கொன்றழிக்கம் கவலைக்கு'' ''வஞ்சகக் கவலைக்கு'' இடங்கொடுக்க வேண்டாம் என்று பறைசாற்றுகிறார். கற்றவர்களையும் அறிஞர்களையும் பார்த்துக் கடாவுகின்றார் :

**"கற்றுத் தெளிந்த பின்னும் - கிளியே**
**கவலைப்படலாகுமோ ?"**

எவ்வளவு அருமையாகப் படித்துப் பட்டம் பெற்ற அறிவாளிகளுக்கு அறிவுறுத்துகிறார் பாருங்கள் :

**"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி**
**அஞ்சியுயிர் வாழ்தல் அறியாமை - தஞ்சமென்றே**
**வையமெலாங் காக்கு மகாசக்தி நல்லருளை**
**ஐயமறப் பற்ற லறிவு"**

அறிவையும் அறியாமையையும் அறிவுறுத்தியவர் வேத முடிவை வெளிப்படுத்துகிறார்.

**"கவலை துறத்திங்கு வாழ்வது வீடென்று**
**காட்டு மறைகளெல்லாம் - நீவிர்**
**அவலை நினைந்து உமிமெல்லுதல் போலிங்கு**
**அவலங்கள் புரிவீரோ"**

கவலையுற்று, சோர்வுற்று, ஊக்கமின்றி, உள வலியின்றி, உண்மையில் பற்றின்றிக் கிடப்பவர்களைப் பார்த்து மிகவும் கிண்டலாக இடித்துரைக்கின்றார் இடி போன்ற பாரதியார். ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் ஊக்கமில்லாத ஒரு சிலர் வாழ்க்கையில் முன்னேறிவிடுவதைக் கண்டு, இளைஞர் உலகம் உண்மைக்கும் நேர்மைக்கும் இடமில்லை என்று எண்ணி உளவலி குன்றிச் சோர்வுற்று வாழ்க்கையில் வெறுப்புற்று நிற்கிறது. ஆனால் அவற்றிற்குப் பாரதியின் பாக்கள் முற்றுப்புள்ளி வைத்து விட முடியும்.

தனி ஒருவனுக்குணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று மார்தட்டி முன்வர மாட்டானா? முயற்சியில் தளர்ச்சி இருக்குமானால் வளர்ச்சி எப்படி இருக்க முடியும் ? எனவே, ஊக்கமும் உளவலியும் வேண்டியதாகின்றது. உண்மையில் பற்றில்லையானால் உருப்படியான வேலையை என் செய்யப் போகிறான் ?

கவலை போவதற்குக் காதல் செய்ய வேண்டுமென்கிறார் கவிஞர். தமிழ்மணங் கமழத் தலைதூக்கிய தலைவர் தமிழ்க் காதலைப் போற்றாதிருப்பாரா ? தமிழ்ப் பண்பாட்டைத் தலைசிறந்ததாகக் காண்கிறார். உண்மைக் காதல் கொண்டு வாழ்க்கை தொடங்க சமூகம் இடமொதுக்கவில்லை என்பதைக் கவிஞர் கண்டு கொண்டார். சோர்ந்த இளம் உள்ளங்களுக்கு உள்ள நிலையை எடுத்தியம்புகிறார். நகைச்சுவை ததும்ப நம் கவியரசர் கூறும் அழகைப் பாருங்கள் :

**"நாடகத்தில் காவியத்தில் காத லென்றால்**
**நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றா மென்பர்.**
**ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே**
**ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்**
**பாடைகட்டி அதைக்கொல்ல வழி செய்கி ன்றார்**
**பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க**
**மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து**
**முறைதவறி இடரெய்திக் கெடுக்கின் றாரோ !"**

- இளைஞர்களைப் பார்த்து உண்மைக் காதலுக்கு வழிவகுக்கச் சொல்லுகிறார். ஆனால் அதே சமயத்தில் முறை பிறழ்ந்து மேனாட்டுக் காதல் முறையைப் பின்பற்றிக் கவலைகொள்ள வேண்டாமென எச்சரிக்கிறார். விடுதலைக் காதலை வெட்டிப் பேசுகிறார், நம் வீரர் சுப்பிரமணிய பாரதியார். என்னே நம் தமிழ் பண்பாட்டின் சிறப்பு!

இன்பமான உலகிலே துன்பங்கள் நெருங்கி வந்த காலத்துச் சோர்வுறாது கவலையுறாது இறைவனை உள்ளத்தெண்ணி காதல் செய்து ஊக்கமும் உளவலியும் உண்மையில் பற்றும் கொண்டு வாழ்க என்கிறார் வாழும் கவிஞர். இவ்வாறு கூறும் கவிஞர் தம் வாழ்க்கை எவ்வகையில்



## ரூ. 123 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்படவுள்ள இத் திட்டங்களின் மூலம் சுமார் 6.62 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

கோவை மாவட்டத்தில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப் படவுள்ளன. முதல் திட்டத்தின் மூலம், அன்னூர் மற்றும் அவிநாசி ஒன்றியங்களில் உள்ள 28 ஊரகப் பஞ்சாயத்துகளும் சூலூர் ஒன்றியத்திலுள்ள 25 ஊரகக் குடியிருப்புகளும், மூப்பேரி பாளையம் ஊரக நகரப் பஞ்சாயத்திலுள்ள 9 குடியிருப்புகளும் பயனடையும்.

2-வது திட்டத்தின் மூலம், பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி - தெற்கு, கிணத்துக் கடவு மற்றும் குடிய மங்கலம் ஒன்றியங்களில் உள்ள 295 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும்.

ஈரோடு மாவட்டம் குண்டடம் ஒன்றியத்திலுள்ள 85 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.6.14 கோடி செலவில் நிறைவேற்றப்படும். இது தவிர, அந்தியூர் ஒன்றியத்திலுள்ள நாகலூர், சின்னத்தம்பி பாளையம், மைக்கேல் பாளையம் ஊராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 32 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.8 கோடி செலவில் மற்றொரு திட்டம் நிறைவேற்றப் படவுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூ.11 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.6.69 கோடி செலவில் நிறைவேற்றப் படவுள்ளது. இத்திட்டத்தால், சேந்தமங்கலம், ஆலங்குளம், மானூர், மேல நீலிதநல்லூர், குருவிகுளம், சங்கரன் கோவில், பெத்தநாடார்பட்டி, பூலான்குளம் மற்றும் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 72 குடியிருப்புகள் பயன்பெறும். ★

---

சென்றது ? பெரும் பேரறிஞர்கள் இக்கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்களா என்பதனையும் காணுதல் வேண்டும்.

உலகினை இன்ப மயமாகக் கண்டார் உமர்கயாம். இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் நற்பொருளாளர்களுக்கும் துறவிகளுக்கும் காதலர்களுக்கும் கலங்கியவர்களுக்கும் மகிழ்ந்தவர்களுக்கும் மனமுடைந்தவர்கட்கும் விருந்து நல்கி, ஏனையோரையும் சூழச் சிந்திக்கவைத்து பாவையரும் பழரசமும் மணிநூலும் வாழ்வுக்கு இன்றியமையாதன என்றியம்பி, வாழ்வு மகிழ்ச்சியில், இன்பத்தில் தேங்கி திளைத்தலே என்கிறார். என்றாலும் உலகியலை ஊன்றியறிந்து ஆண்டவன் இயலை ஆழ்ந்துணர்ந்து காதல் இயலைக் கனிவுடன் பொழிந்து நடைமுறைக்கு ஏற்ற உண்மையான உணர்ச்சி இயல்களை உரைத்து மெய்ப் புலவராக விளங்குகிறார்.

நம் கவிஞரும் ஓரளவு அவர் போன்றவரே. பாரதியாருக்கு வாழ்க்கையில் நெருங்கிவந்த துன்பங்கள் எத்தனை ? சோர்வுற்றாரா ? இல்லை. கவலையுற்றாரா ? சோற்றுப் பருக்கைக் கூட இல்லாக் காலத்திலும் கேட்டவர்க்குக் கையிலுள்ளதை அள்ளி வழங்கினார்! அடுத்த நாளைப் பற்றி எண்ணினாரில்லை. சக்தியைப் பாடிச் சக்தி பெற்றார். ''காணி நிலம் வேண்டும்'' என்ற பாட்டில் அவர் இலட்சியத்தையே படம் பிடித்துக் காட்டி ஒவ்வொருவனும் அது போலப் பொது உடைமை வாழ்வு வாழமுடியும் என்பதைக் காட்டுகிறார். "பாரத சமுதாயம் முழுவதும் பொது உடைமை'' என்றன்றோ பாடுகிறார். பாரதியின் வாழ்க்கையைப் பார்க்குங்கால் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கண்டேதான் பாடியிருக்கிறார் என்ற முடிவுக்கு வரலாம். ஒவ்வொரு தமிழ் மகனும் பாரத மகனும் அவர் வாழ்க்கையையும் கவியையும் தெளிவுறக் கற்று ஊக்கமும் உளவலியும் கொள்ளவேண்டும்.

விஞ்ஞான நூல்களைப் படித்துப் பாருங்கள். விஞ்ஞானிகள் எவ்வளவு பேர் எவ்வளவு துன்பங்களுக்கிடையில் எள்ளளவும் சோர்வின்றி உளவலியோடு தொண்டாற்றி, வெற்றி கண்டுள்ளார்கள் என்பது வெளிப்படும். பெயரும் வாழ்க்கையும் கூறி விரிக்க வேண்டாமென விடுத்துச் செல்கிறேன்.

அடியார்களை எடுத்துக்கொள்ளுங்கள். மரண வேதனையை விட வேறு வேதனை என்ன இருக்க முடியும் ? கொல்லுகிறேனென்று வேண்டுவன செய்த காலத்தும் சோர்வுறாது அஞ்சாது உறுதியோடு இருக்கவில்லையா நமது நாவுக்கரசர்! ஆண்டவனை அடைய அவாவிய ஆண்டாள் உறுதியோடு இருந்த காரணத்தால் உடும்புபோல் பிடித்துவிட்டாளல்லவா ?

உலகம் போற்றும் கீதை என்ன சொல்கிறது ? எண்ணித் துணிந்த கருமத்தைச் சோர்வால் விட இருக்கிறான் அர்ச்சுனன். கண்ணனாகிய "ஞானமலை" என்ன சொல்கிறார். ''சூழ இருப்பவர்களைக் கொல்வது துன்பமெனக் கவலைக்கிடமெனக் கருதுகிறாய். உள்ள உறுதியோடு வந்தவர் சோர்வுறுகின்றான். ஊக்கம் உருண்டுவிட்டது. அது தவறு. அறம் செய்வது உன் கடன். அதில் எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்க வேண்டா" என்றார். இதனை நாம் நன்கு எண்ணிப் பார்க்கவேண்டும்.

இளைஞர்களே! உலகில் ஏற்படும் சில திடீர்ச் செயல்களைக் கண்டு உள்ளம் நோவாதீர்கள். உலகம் இன்பமயமானது. துன்பம் நெருங்கி வரலாம். சோர்வடையாதீர்கள் கவலை கொள்ளாதீர்கள். அண்டம் சிறிதானாலும் அஞ்சாதீர்கள். துன்பம் தூளிபடும். இன்பம் பொங்கும். பாரதி கண்ட நல்ல வாழ்வு பாரதி பாதையில் சென்றால் பார்த்தோடி வரும். தீமையெலாம் அழிந்துபோகும். ஆகவே, வீரச் சிங்கங்களே!

"கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம் இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்றுவிளையாடி இன்புற்று இருந்து வாழ்வீர்!"

- வாழ்க பாரதி! வாழ்க அவர் வகுத்த பாதை!

# நலம் காப்போம்

உலகமெலாம் நடுநடுங்கி அஞ்சிச் சாகும்
ஒருபெருநோய் 'ஆட்கொல்லி' எயிட்சே ஆகும்!
பலதுறையில் முன்னேற்றம் எய்தி இந்தப்
பார்வியக்கும் அருஞ்செயல்கள் புரிந்த போதும்
கலங்குகிறோம்! இந்நோயின் வயப்பட் டோரைக்
காப்பாற்ற முடிவதில்லை; மருந்தும் காணோம்!
நலம்போக்கி வாழ்நாளை நறுக்கி நம்மை
நடைப்பிணமாய் ஆக்கிவிடும் இந்த நோயே!

ஒருவனுக்கு ஒருத்தியென்ற உயர்ந்த வாழ்க்கை
ஒப்பரிய தமிழ்ப்பண்பாம்! ஒழுக்க வாழ்வாம்!
விருப்பம்போல் கண்டபடி வேட்டை நாயாய்
வெறிகொண்டே அலைபவர்கள் இந்த நோயால்
கருகிடுவர் தீப்பட்ட சருகைப் போல!
கடும்பழியும் இழிமொழியும் பெயர்சொன் னாலே
அருவருப்பும் சொல்லவொணா மானக் கேடும்
அளிக்கின்ற நோய்! நம்மை அழிக்கும் நோயாம்!



பல்வேறு வழிகளிலே இந்நோய் தாக்கும்!
பாலுறவு இவற்றிலெலாம் முதன்மை யாக
வல்லூறாய் வட்டமிடும்! குடும்ப வாழ்வின்
வழிமாறி முறைதவறி வரம்பு மீறிச்
செல்வோரை அரவணைக்கும்! சீர்மை போக்கிச்
சிறுமைகளைப் பரிசளித்துச் சிரிக்கும்! என்றும்
நல்லவராய் வாழ்வதுவே சிறப்பாம் இந்த
நானிலத்தின் நல்வாழ்வை நயந்து காப்போம்!

பெற்றோர்கள் செய்கின்ற தவற்றுக் காகப்
பிள்ளைகளும் தண்டனையை அடைதல் நன்றோ?
கற்றதனால் பயனென்ன? கண்ணி ருந்தும்
கால்பதிக்க லாமோ? அச் சேற்றுக் குள்ளே!
முற்றும்நம் தலைமுறையை ஆட்டி வைக்கும்
மிகுந்தவிடப் பாம்பான எயிட்சு நோயை
அற்றுப்போ கச்செய்வோம்! குடும்ப வாழ்க்கை
அமைதிகெட்டுப் போகாமல் காப்போம் நன்றே!

- முனைவர் கடலூர் மணிமாறன்

# இதுவரை சிறுகதை

**த**மிழ்ச் சிறுகதைக்கு என்ன வயதிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

வாய்மொழியாகக் கதை சொல்லப் பட்ட காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொல்லப் போதுமான ஆதாரங்கள் இல்லை. கதை சொல்வதைப் பற்றித் தொல்காப்பியத்தில் ஒரு வரி வருகிறது. "பாட்டிடை வைத்த குறிப்பினானும்" என்று துவங்குகிற சூத்திரத்தில் "பொருள் மரபில்லா பொய்மொழியானும்" என்று ஒரு வரி வருகிறது.

பொய்மொழி என்ற இந்த வார்த்தையை "உண்மையில்லாத பொய்க்கதை" என்று உரையாசிரியர்கள் விளக்குகிறார்கள். பொய்மொழி என்ற சொல் **'Fiction'** என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான ஒரு சொல்லாக இருப்பது, மொழியின் பற்பல ஆச்சரியங்களில் ஒன்று. கதை என்பதே பொய் என்பது ஒரு பரவலான நம்பிக்கை. கதை விடுதல், கதை அளத்தல் என்ற பேச்சு வழக்கிற்குப் பொய் சொல்வது என்றே பொருள். இந்தப் பேச்சு வழக்கைப் பாரதியார், கவிதைக்குள்ளும் எடுத்துச் சென்று அதற்கு ஒரு சிரஞ்சீவித் தன்மையைக் கொடுத்து விடுகிறார். (அட, பிள்ளைக் கதைகள் விரிக்கிறாய் - பாஞ்சாலி சபதம் - 109).

கதைக்கு எத்தனை வயதிருக்கும் என்று 'கதை விடுவதில்லை' என்னுடைய நோக்கம். தமிழ்ச் சிறுகதையின், எழுத்து வடிவில் இன்று நமக்குப் படிக்கக் கிடைக்கிற தமிழ்ச் சிறுகதையில், வயதை அல்ல, வரலாற்றை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கதை என்னும் பொய்மை, அச்சுமையைச் சந்தித்தது - குத்து மதிப்பாகச் சொன்னால் 175 வருடங்களுக்கு முன்னால், 1822ல் சென்னைக் கல்விச் சங்கத்தார் என்ற அமைப்பினர், வீரமாமுனிவரின் "பரமார்த்த குரு" கதைகளை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

வாய்மொழியர் பேச்சு வழக்கில் இருந்த கதைகளின் தொகுப்புதான் இது என்ற ஒரு கருத்து உண்டு. அதே சமயம் தமிழில் முதலில் அச்சேறிய இந்தக் கதைகள் குறித்து சுவாரஸ்யமான சர்ச்சையும் ஒன்று உண்டு. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாவில்லா ராமஸ்வாமி சாஸ்திரி அண்ட் சன்ஸ் பிரசுரித்துள்ள பரமார்த்த குரு கதையின் முன்னுரை. அந்தக் கதைகள் சுப்ரதீபக் கவிராயரால் இயற்றப்பட்டு அவருக்குப் பொருளுதவி செய்து வந்த வீரமா முனிவரால் அச்சிடப்பட்டது என்றும், தேம்பாவணியும் இந்தக் கவிராயராலேயே எழுதப்பட்டது என்றும் குறிப்பிடுகிறது. இந்தத் தகவல் உண்மை என்றால் தமிழில் அச்சான முதல் கதைத் தொகுப்பிலேயே **Ghost Writing!**

> "**பா**ரதி, காமக்களியாட்டங்களும் ஒழுக்க உபதேசங்களும் சிறுகதை உலகை ஆக்ரமித்திருந்த காலத்தில் தமிழ்ச் சிறுகதை உலகில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். சிறுகதை என்பது ஒரு ஐரோப்பியக் கலைவடிவம் என்று கருதப் பட்ட காலத்தில் அதை மறுதலிப்பதுபோல் பாரதி, முற்றிலும் புதியதொரு வடிவத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதி உருவாக்கிய இந்த வடிவம் மரபு சார்ந்தது. அதே நேரம் நவீனமானது."

**- மாலன்**

பரமார்த்த குரு கதைகளை அடுத்து வந்த பல தொகுப்புகளும் வாய்மொழியாக வழங்கிவந்த கதைகளின் தொகுப்பாகவோ அல்லது மொழி பெயர்ப்புகளின் தொகுப்புகளாகவோ இருக்கக் காண்கிறோம். சில உதாரணங்கள்

1826 பஞ்சதந்திரக் கதைகள் (மூலம் : மராத்தி)

1826 கதாமஞ்சரி (மூலம் : வடமொழி)

1853 ஈசாப்பின் நீதிக் கதைகள் (மூலம் : ஆங்கிலம்)

1855 மதனகாமராஜன் கதை (வாய்மொழி)

1868 மயில்ராவணன் கதை (வாய்மொழி)


1869 முப்பத்திரண்டு பதுமை கதை (வாய்மொழி)

1869 தமிழறியும் பெருமாள் கதை (வாய்மொழி)

வாய்மொழி வழக்கில் இருந்த கதைகளும், மொழிபெயர்ப்புகளும் புத்தகங்களாக வெளிவந்துகொண்டிருந்த காலத்தில், சுயமாக எழுதப்பட்ட கதைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு 1869ல் வெளியாயிற்று. அதை எழுதியவர் ஒரு இலங்கைத் தமிழர். 1841லிருந்து யாழ்ப்பாணத்தில் 'உதயதாரகை' என்ற ஒரு பத்திரிகை வெளியாகி வந்தது. 1857ல் அதன் ஆசிரியராகப் பொறுப் பேற்றவர் அ. சதாசிவம்பிள்ளை. வட்டுக்கோட்டை அமெரிக்கன் மெஷின் செமினாரியில் படித்து வரும்போதே, இந்த அருணாசலம் சதாசிவம்பிள்ளை மதம் மாறி ஜே.ஆர்.ஆர்னால்ட் என்றபெயரைச் சூடிக்கொண்டார். தனது பத்திரிகையில் தான் எழுதி வந்த கதைகளில் நாற்பது கதைகளைத் தொகுத்து 1869ல் ஒரு நூலாக வெளியிட்டார். அதன் பெயர் "நன்னெறி கதாசங்கிரகம்." இதுதான் தமிழில் முதன் முதலில் வெளியான சுயமான கதைகளின் தொகுப்பு.

நல்ல நெறிகளை - அருணாசலம் பிள்ளையின் வார்த்தைகளில் சொன்னால், "சன்மார்க்க சாதனைக்கும், போதனைக்கும் உரிய" விஷயங்களைப் போதிப்பதுதான் இந்தத் தொகுப்பின் நோக்கம். இதை ஒட்டி இதே போன்று போதனை நோக்கத்தோடு பல தொகுப்புகள் வரத்துவங்கின. அவற்றையெல்லாம் பற்றி விரிவாகப் பேச இங்கு இடமில்லை.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றை ஆராய்ந்த சிட்டியும், சிவபாதசுந்தரமும் அதை நான்கு கட்டங்களாகப் பிரிக்கிறார்கள். நன்நெறி கதாசங்கிரகம் தோன்றிய 1869 முதல் வ.வே.சு. ஐயர் மரணமடைந்த 1925 வரை உள்ள ஆண்டுகள் முதல் கட்டம். 1926 முதல் புதுமைப்பித்தன் இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய 1945 வரை இரண்டாவது கட்டம். 1946 முதல் 60 வரை மூன்றாவது கட்டம். அறுபதுக்குப் பிந்தைய ஆண்டுகள் நான்காவது கட்டம். நானும் இந்தப் பாகுபாடுகளைப் பின்பற்றி ஒவ்வொரு காலகட்டத்திற்கும் இரண்டு கதாசிரியர்கள் என்று எடுத்துக் கொண்டு சிறுகதை இலக்கியத்தின் போக்கைச் சொல்ல முற்படுகிறேன்.



புராணப் பாடல்களும், காதல் பிரபந்தங்களும், தனிமனிதப் புகழ்ச்சிகளும், சித்திரக்கவிகளும் தமிழ்க் கவிதை உலகில் மண்டிக் கிடந்த காலத்தில் கவிதையை மீட்டெடுத்ததைப் போலவே பாரதி, காமக் களியாட்டங்களும் ஒழுக்க உபதேசங்களும் சிறுகதை உலகை ஆக்ரமித்திருந்த காலத்தில் தமிழ்ச் சிறுகதை உலகில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். சிறுகதை என்பது ஒரு ஐரோப்பியக் கலைவடிவம் என்று கருதப்பட்ட காலத்தில் அதை மறுதலிப்பதுபோல் பாரதி, முற்றிலும் புதியதொரு வடிவத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதி உருவாக்கிய இந்த வடிவம் மரபு சார்ந்தது. அதே நேரம் நவீனமானது. முன்னே குறிப்பிட்ட தொல்காப்பிய சூத்திரத்தின் "பொருள் மரபில்லா பொய் மொழியானும்" என்ற வரிக்கு விளக்கம் எழுதிய உரையாசியர்கள் 'யானையும் குருவியும் தம்முள் நட்பாடிப் பேசிக்கொள்வது போல' என்று விளக்கம் தருகிறார்கள். அதே சூத்திரத்தின் அடுத்த அடி 'பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' என்று அமைந்திருக்கிறது. அதாவது உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு.

கதை சொல்லும் தமிழ் மரபின் இந்த இரண்டு அம்சங்களையும் பின்பற்றித் தனது சிறுகதை வடிவத்தை உருவாக்கினார் பாரதி. அவருடைய காக்காய் பார்லிமெண்ட், இலக்கணம் படித்த காக்கை போன்ற கதைகளில் இவற்றைப் பார்க்க முடியும். அந்தக் கதைகளில் காகங்கள் பேசிக் கொள்கின்றன. அதே சமயம் அவை 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு' பேசுகின்றன.

ஐரோப்பியக் கலை வடிவத்தை நிராகரித்து, தனக்கென, தமிழுக்கென ஒரு புது வடிவை உருவாக்கிக் கொண்ட பாரதி, சிறுகதையின் பயன் குறித்தும் ஒரு இந்தியப் பார்வையே கொண்டிருந்தார். கதை என்பது இன்பம் பயக்கும் ஒரு கலை வடிவம் மட்டுமல்ல. செய்தி சொல்வதற்கான ஒரு ஊடகமும் கூட என்பதுதான் அந்தப் பார்வை. சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் அரசியல் நடப்புகளையும் சொல்வதற்குப் பத்திரிகையைப் போலச் சிறுகதையையும் ஒரு ஊடகமாக அவர் வரித்துக் கொண்டார். அவரது 'துளஸிபாய்' பெண்கள் உடன்கட்டை ஏற நிர்ப்பந்திக்கப்படும் வழக்கத்தைச் சாடுகிறது. பூலோக ரம்பை பொட்டுக் கட்டும் வழக்கத்தின் கொடுமைகளைச் சித்திரிக்கிறது. காந்தாமணி, பெண்கள் ருதுவாவதற்கு முன்பே அவர்களைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கத்தை இகழ்ந்து அதற்கு மாற்றாகக் கலப்புத் திருமணத்தைக் கோடி காட்டுகிறது. சுவர்ணகுமாரி அரசியலிலும் மதத்திலும் மிதவாதத்தைப் பின்பற்றுவதை நையாண்டி செய்து திலகரின் தீவிரவாதத்தையும், பிரம்ம சமாஜத்தையும் உயர்த்திப் பிடிக்கிறது.

தமிழின் முதல் நவீன சிறுகதை என்று கருதத்தக்க - 1911ல் எழுதப்பட்ட- அவருடைய ஆறில் ஒரு பங்கிற்கு எழுதப்பட்ட முகவுரையில் அவருடைய சமூக நோக்கம் அப்பட்டமாக வெளிப்படுகிறது.

"ஒரு சாதி ஒருயிர்: பாரத நாட்டிலுள்ள 30 கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மதபேதங்கள் இருக்கலாம். மதவிரோதங்கள் இருக்கலாகாது.

இவ்வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும். வேறு வழியில்லை. இந்நூலைப் பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்த நமக்கெல்லாம் உணவு கொடுத்து இரட்சிப்போர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்த தன்மை வாய்ந்த வைசிய சகோதர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

தமிழின் இந்த முதல் நவீன சிறுகதை அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதல் தடை செய்யப்பட்ட கதை தமிழின் முதல்

சிறுகதைதான். இந்தத் தடைவிதிப்பை பத்திரிகைகளும், அறிஞர்களும் எதிர்க்க வேண்டும் என்று கோரி 8.10.1912 தேதியிட்ட இந்து நாளிதழின் ஆசிரியருக்குக் 'கடிதம்' பகுதிக்கு சி.சுப்ரமண்யபாரதி என்ற பாரதியார் கடிதம் எழுதினார். அரசாங்கத் தடையை எதிர்க்கும் விஷயத்தில் இன்று நடப்பதே அன்றும் நடந்தது. ஆம். தடையை எதிர்க்க யாரும் முன்வரவில்லை.

பாரதியாரின் சமகாலத்தவரான வ.வே.சு. ஐயர் ஐரோப்பிய சிறுகதை வடிவத்தைப் பின்பற்றி எழுத முற்பட்டவர். 'ரஸோபாவோபேதமாய்' இருக்கவேண்டும் என்பதுதான் அவருடைய சிறுகதைக் கொள்கை. சிறுகதையைச் சமூக விழிப்புணர்விற்குப் பயன்படுத்துவது குறித்து அவர் தீர்மானமான லட்சியங்கள் கொண்டிருந்தார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. குழந்தை மணத்தையும் வரதட்சணைக் கொடுமையையும் பற்றிப் பேசும், இன்றுவரை தமிழின் முதல் சிறுகதை என்று நம்பப்படும் குளத்தங்கரை அரசமரம், தாகூர் எழுதிய காட்டேர் கதர் என்ற வங்கக் கதையின் தழுவல். இந்தக் கதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையில் 1914ம் ஆண்டு 'தி ஸ்டோரி ஆஃப் த ரிவர் ஸ்டேர்' என்ற தலைப்பில் வெளியா யிற்று. வ.வே.சு.ஐயரின் கதை 1915ல் விவேகபோதினி பத்திரிகையில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அவரது மனைவியின் பெயரான பாக்யலக்ஷ்மி அம்மாள் என்ற பெயரில் வெளியாயிற்று. தாகூரின் கதையில் ஆற்றங்கரை படித்துறை ஒன்று கதை சொல்கிறது. ஐயரின் கதையில் குளத்தங்கரை அரசமரம் கதை சொல்கிறது. எட்டு வயதில் விதவையான ஒரு சிறுமி, யுவதியாக ஆன பின்பு ஒரு பால சந்நியாசியிடம் மனதைப் பறிகொடுத்து அந்தச் சந்நியாசியிடம் எந்தவிதச் சலனமும் ஏற்படாததால் ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதைச் சொல்கிறது தாகூரின் கதை. சிறு வயதில் மணமுடிக்கப்பட்ட ருக்மணி வயது வந்து பிறகும் வரதட்சணைக் கொடுமை காரணமாகக் கணவன் வீடு செல்லமுடியாத சூழ்நிலையில் கணவன் விளையாட்டாகச் சொன்ன வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதைச் சொல்வது ஐயரின் அரசமரம்.

தமிழின் முதல் நவீன சிறுகதை என்று வகுப்பறைகளில் போதிக்கப்படும் கதை ஒரு தழுவல் கதை. அதில் காணப்படும் சமூக நோக்கம் தற்செயலானது.

பாரதியாரைப் போல சமூகப் பிரச்சினைகளை விவாதிப்பதற்குரிய ஒரு சாதனமாக அவர் சிறுகதையைக் கருதியிருக்கவில்லை. மாறாக, தமிழனுக்கு அவனுடைய சரித்திரத்தை எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவர்களிடத்தில் பெருமையுணர்வை ஏற்படுத்துவதற்குச் சிறுகதைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதுவே அவருடைய இலட்சியமாக இருந்தது. அவர் காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன்பு காசியில் உள்ள தனது நண்பர் ஆதிமூர்த்தி என்பவருக்கு எழுதிய கடிதம் ஐயரின் மரணச் செய்தியைத் தாங்கிவந்த பாலபாரதி இதழில் வெளியிடப் பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர் எழுதுகிறார்:

"தூமாஸ் பிரெஞ்சு சரித்திரம் அனைத்தையுமே கற்பனைக் கதைகளைச் சரிபண்ணி ஒவ்வொரு பிரெஞ்சுக் காரனையும் தன் தேச சரித்திரத்தினைக் கற்றவனாயும், உற்சாகியாயும் ஆக்கிவிட்டதைப் போலத் தமிழ்நாட்டு சரித்திரமனைத்தையும் கற்பனைக் கதைகளாகச் செய்ய வேண்டுமென்றிருக்கிறேன். பாரியும் நன்னனும் கபிலரும், நக்கீரரும் கரிகாலனும் செங்குட்டுவனும், நாகராஜனும் ராஜேந்திரனும், விஜயபாலனும் சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய சைவ நாயன்மார்களும், குலசேகரன், ராமானுஜன், தேசிகர் முதலிய வைஷ்ணவ ஆச்சார்ய மகான்களும் நமது கதைத் தொடரில் நாயகர்களாக விளங்கி, காம்பீர்யம் முதலிய பௌருஷமான ரசங்களுக்கு நிலையமாக நின்றால், அடுத்த தலைமுறை முதல் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்ச் சரித்திரத்தையும் யார் அவமதிப்பார்? அது சாத்திய மானால், இப்பேர்ப்பட்ட வீரதீரர் பிறந்து வளர்ந்து இறந்த நாட்டில் நாம் பிறக்கச் செய்த புண்ணியமே புண்ணிய மென்றும் நாம் அவர்களுக்கேற்ற சந்ததியாகக் கடவோம் என்னும் எண்ணங்கள் தமிழருள் தோன்றி மற்ற மாகாணங்களில் பிறந்து கொண்டிருக்கும் தீரயுகம் இங்கும் பிறக்க வழிகாட்டியாக நாம் அமைந்து விடுவோம். இந்த நோக்கத்துடனேயே "மங்கையர்க்கரசியின் காதல்" முதலிய கதைகளை எழுதியதோடு, லைலா மஜ்னுனு, அனார்கலி முதலிய கதைகளும் கைப்பழக்கத்துக்காக எழுதிவருகிறேன். நாளாவட்டத்தில் பெரிய சரித்திரத்தை எழுதும் நிலைமைக்கு வரும் என்று நினைத்தே சிறுகதைகளை எழுதி வருகிறேன்."

> சிறுகதை ஒரு தனி சம்பவத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்ற பிராண்டர் மாத்யூவின் இலக்கணத்தை உதறித் தள்ளிவிட்டு, பத்துப் பதினைந்து ஆண்டுக்கால வாழ்க்கை வரலாற்றைச் சிறுகதையாக விரித்துச் சென்ற பாரதியாரைப் போலவே கல்கியும் தனது கதைகளை எழுதினார்.

ஐயரின் மங்கையர்க்கரசியின் காதல் குலோத்துங்க சோழனுடைய தளபதியான கருணாகரத் தொண்டமானுடைய மகளைப் பற்றியது என்றாலும், அது எழுதப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் பின்பற்றப்பட்டு வந்த சிறுகதை இலக்கணங்களைப் பின்பற்றி எழுதப்பட்டது. சிறுகதை என்பது "ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அது ஏற்படுத்தும் தாக்கம் ஒரே ஒரு உணர்வினதாக இருக்க வேண்டும்" என்று எட்கர் அலன்போ (1841) தனது Single Effect சித்தாந்தத்தை வெளியிட்டார். அவருக்குப் பின்வந்த கதாசிரியர்கள் சிறுகதை என்பது ஒரு தனிச் சம்பவத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஐரோப்பியச் சிறுகதைகளுக்கும் இந்தியக் கதை மரபிற்கும் உள்ள வித்தியாசங்களை "அவர்கள் நட்ட நடுவில் கதையைத் தொடங்குகிறார்கள்" என்று சின்ன சங்கரன் கதை முன்னுரையில் பாரதியார் குறிப்பிடுகிறார். இந்த எல்லா லட்சணங்களையும் வ.வே.சு.ஐயரின் மங்கையர்க்கரசியின் காதல் என்ற கதையில் பார்க்க முடியும்.

பாரதியாரை விட, சிறுகதையின் நவீன வடிவத்தைச் சிறப்பாகக் கையாண்டவர் ஐயர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஐயரிடம் Craft இருந்த அளவிற்கு Vision இருந்ததா என்பது கேள்விக்குரிய விஷயம். ஐயருக்கும் பாரதிக்கும் உள்ள ஆளுமையின் வித்தியாசத்தை அவர்கள் உருவாக்கிய துளஸிபாயிக்கும், மங்கையர்க்கரசிக்கும் இடையே காணமுடியும். வலுக்கட்டாயமாக உடன்கட்டை ஏற்றப்பட்ட ராஜ குடும்பத்து துளஸிபாய் அதிலிருந்து தப்பி இஸ்லாமியரான அப்ஸல்கானை மணந்துகொண்டு மகிழ்ச்சியோடு வாழ்வதாக முடிகிறது பாரதியின் கதை.

காதலனின் சடலத்தைக் கண்டு, "நீ போனபிறகு எவ்விதம் நான் நின்றுகொண்டும், பேசிக்கொண்டும் இருக்கிறேன்? என் நாதா, உன் உதடு

அசைகிறதுபோல் இருக்கிறதே, என்னை அழைக்கிறாயோடா? வந்தேன், வந்தேன்'' என்று 'பிரலாபித்துக் கொண்டு' தன்னையும் குத்திக் கொண்டு மடியும் மங்கையர்க்கரசியை முன் வைக்கிறார் ஐயர்.

ஐயர் ஐ.சி.எஸ். படித்தவர். பாரதியார் பட்டதாரியா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஐயர் ஐரோப்பியக் கலாச்சாரத்தின் தலைநகரான இங்கிலாந்தில் வாழ்ந்தவர். ஆனால் ஐயர் சநாதன நம்பிக்கைகளும் வருணாசிரமத்தில் பிடிப்பும் கொண்டவராக வாழ்ந்தார், பாரதி சநாதனக் கலாசாரத்தைத் தாங்கிப் பிடிக்கும் காசியில் வாழ்ந்தவர். ஜாதிமத பேதங்களை நிராகரிக்கிற முற்போக் காளராக வாழ்ந்தார் பாரதி. நிஜவாழ்வில் பழமை மீது பிடிப்புக் கொண்ட ஐயர் சிறுகதையைப் பொறுத்தவரை நவீன ஐரோப்பிய வடிவை வரித்துக் கொண்டதும், முற்போக்கான நவீன எண்ணங்களை வாழ்க்கையில் கொண்டிருந்த பாரதி இந்திய இலக்கிய மரபைச் சார்ந்து தனக்கென ஒரு வடிவத்தை உருவாக்கிக் கொண்டதும் இலக்கிய வரலாற்றின் விசித்திரங்கள்.

இதே போன்ற முரண்பாடுகளை வரலாற்றின் அடுத்த கட்டத்தில் கல்கியிடமும், புலமைப்பித்தனிடமும் பார்க்கிறோம். கல்கி புதுமைப்பித்தனுக்கு ஏழு வருடங்களுக்கு முன்பு பிறந்து, அவருக்கு ஏழு வருடங்களுக்குப் பின்பு காலமானார் என்ற போதிலும், இருவரும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் எழுத ஆரம்பித்தவர்கள். கல்கியின் கதைகள் பல பாரதியாரின் கதைகளைப் போல சமூக நோக்குக் கொண்டவை. கல்கியினுடைய முதல் தொகுப்பான சாரதையின் தந்திரத்தில் காணப்படும் கதைகள் - தீண்டாமை, பால்ய விவாகக் கொடுமை, விதவை மணம், கதர் இயக்கம், புலால் மறுத்தல் ஆகிய விஷயங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவரது மற்றொரு தொகுப்பான 'பேங்க்கர் விநாயக்ராவில்' காணப்படும் கதைகள் அனைத்தும் மதுவிலக்கை அடிப்படையாகக் கொண்டவை. கல்கி பின்னாளில் எழுதிய கதைகளில் இத்தகைய சமூக நோக்கைக் காண இயலாது. அவை கதை சொல்வதையும் ஜனரஞ்சகத்தையும் முதன்மையாகக் கொண்டவை.

இந்த மாற்றத்திற்கு திரு.வி.க.-வின் கீழ் 'வெ.சாமிநாத சர்மாவுடன் துவங்கி' பின்னர் ராஜாஜியின் கீழ் விமோசனம் பத்திரிகையில் பணிபுரிந்த கல்கி, வர்த்தக நோக்கம் கொண்ட பத்திரிகையான ஆனந்த விகடனில் சேர்ந்து கொண்டது காரணமாக இருக்கலாம். கல்கி தனது பெயரில் சொந்தப் பத்திரிகை துவங்கியபோது படிப்படியாகச் சிறுகதைகள் எழுது வதைக் குறைத்துக்கொண்டு நாவல் களின் பக்கம், குறிப்பாகச் சரித்திர நாவல்களின் பக்கம் கவனம் செலுத்தி யதையும் பார்க்கும்போது பாரதியாரைப் போல் துவங்கிய கல்கி வ.வே.சு.ஐயரில் வந்து முடித்தார் என்று சொல்லத் தோன்றுகிறது.

சிறுகதை ஒரு தனி சம்பவத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்ற பிராண்டர் மாத்யூவின் இலக்கணத்தை உதறித் தள்ளிவிட்டு, பத்துப் பதினைந்து ஆண்டுக்கால வாழ்க்கை வரலாற்றைச் சிறுகதையாக விரித்துச் சென்ற பாரதியாரைப் போலவே கல்கியும் தனது கதைகளை எழுதினார். பாரதியாருடைய ஆறில் ஒரு பங்கு, ஸ்வர்ணகுமாரி போன்ற கதைகளில் முன்னுரை, முடிவுரை போன்ற அமைப்புகளைக் காண முடியும். அதைப்போலவே கல்கியினுடைய பல கதைகளில் (உம்: கேதாரியின் தாயார்) இந்த அமைப்பைப் பார்க்கமுடியும்.

கல்கி பாரதியின் நடையைப் பின்பற்றவும் முயன்றார். ஆனால் அதில் அவர் பெரிய வெற்றி பெறவில்லை. கலைமகளுடைய முதல் இதழில் (1932 ஜனவரி) அதன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம்.லெக்ஷ்மி அம்மாள் ' ஸ்ரீ ' என்ற புனைபெயரில் உரையாடல் பாணியில், தமிழ் வசனநடை குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் ஒரு பகுதி இது:

"நான் படித்ததில் பாரதி வசனம் ஒன்றுதான் நன்றாய் இருக்கிறது."


''பாரதி வசன நடையைப் பின்பற்றுவது கஷ்டம்."

"கஷ்டமில்லை. அனர்த்தம்."

"நீ கல்கியின் வியாசங்களை அன்று கொடுத்தாயே? அவை சாரமாய் இருக்கின்றன. ஆனால் சில கட்டுரைகள் பாரதியின் நடையைப் பின்பற்றித் தொத்தப் பார்த்து சுயலக்ஷணம் இல்லாமல் இருக்கின்றன."

பாரதியார் ஒரு சில வரிகளில், போகிறபோக்கில் செய்துவிட்டுப் போகிற நையாண்டியை ஆரம்ப காலத்தில் பின்பற்றி வந்த கல்கி நாளடைவில் கதைகளை முழுக்க முழுக்க நகைச்சுவை ததும்புகிற படைப்புகளாக எழுத ஆரம்பித்தார். சில படைப்புகள் வெறும் கேலிச் சித்திரங்களாக மாறி அவர் எதைச் சொல்ல வந்தாரோ, அதற்கு நேர் எதிரான விளைவை ஏற்படுத்தின.

சிறுகதைகளைப் பற்றிப் பேசும்போது கூட இந்த நையாண்டியைக் கல்கி கைவிடவில்லை. சிறுகதையைப் பற்றி அவர் நிகழ்த்திய ஒரு உரையில்,



"சிறுகதை என்றவுடனேயே அதில் ஒரு கதை இருக்கவேண்டும். அது சின்னதாயும் இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறதல்லவா? இதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம்.

ஒரு நாள் காஞ்சீபுரம் உபய வேதாந்த தாத்தையங்கார் ஸ்வாமிகள் அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, "அடேய் குப்பா! நீ உடனே ஸ்ரீ பெரும்புதூர் திருவேங்கடாச்சார் ஸ்வாமி வீட்டிற்கு ஓடிப்போய் திருக்குடந்தை திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி திருக்கோவில் ஆராதனைக்குத் திருத்துளாய் எடுத்துவிட்டுத் திருக் குளத்திற்குப் போனபோது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி விழ்ந்தார் என்று சொல்லு என்று சொல்லிட்டு, சமாசாரம் புரிந்ததா என்று கேட்டார். அதற்கு வேலைக்காரக் குப்பன், "தெரியாதா சாமி? கும்பகோணத்துப் பாப்பான் குட்டையிலே விழுந்தார் என்று சொல்கிறேன் என்று சொன்னானாம்" என்று கிண்டலடிக்கிறார்.

கல்கியின் சமகாலத்தவரான புதுமைப்பித்தனிடம் இந்தக் கிண்டல் உண்டு. வ.ரா.வின் வார்த்தைகளில் சொல்வதானால் "இவர் எழுத்தில் இடக்கு ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது" ஆனால் கேலியையும் மீறி அதில் வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கு இருப்பதைப் பார்க்க முடியும். 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் புதுமைப் பித்தன்... 'உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டு உயிர்க்கச் செய்யும் நோக்கமோ, எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது' என்று சொல்கிறார்.

தன்னை எந்தவொரு வட்டத்திற் குள்ளும் அடைத்துக்கொள்ள விரும்பாத புதுமைப்பித்தனின் மனப்பான்மையைத் தான் இந்த வார்த்தைகள் காட்டு கின்றனவே அன்றி, அவருடைய படைப்பின் நோக்கங்களை அல்ல. 19.7.41ல் சிவபாத சுந்தரத்திற்குப் புதுமைப்பித்தன் எழுதிய கடிதத்தில் "நான் இதுவரை என்னைப்பற்றி ஒரு 'அப்னார்மல்' மனிதன் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று குறிப்பிட்டு என்னைக் காலத்தின் சின்னமாக மாற்றிவிட்டீர்களே என்று குறைபட்டுக் கொள்கிறார்.

கல்கியைப் போல நேரடியாகச் சமூகப் பிரச்னைகளைப் பற்றிப் புதுமைப் பித்தன் எழுதியதில்லை - என்றாலும் வறுமை நிறைந்த வாழ்க்கையில், துயரங்களை அனுபவிக்கும் ஏழை மக்களைப் பல கோணங்களில் எழுதி இருப்பவர் புதுமைப்பித்தன். கணவனுக்கு மருந்து வாங்குவதற்காகக் 'கற்பை' விற்கும் பொன்னகரத்துச் சேரிப் பெண்ணில் இருந்து, இன்றைய பொழுதைக் கழிக்கக் கடன்வாங்கி, துயரங்களைத் தற்காலிகமாக ஒரு நாளைக்குத் தள்ளிப்போடும் 'ஒருநாள் கழிந்தது' முருகதாசர் வரை வாழ்க்கையின் பல்வேறு கோணங்களை அவரது படைப்புகளில் பார்க்க முடியும்.

கதைப்பொருளில் மட்டுமல்ல, கதையின் வடிவத்தில் பல்வேறு முயற்சிகளைச் செய்து பார்த்தவர் புதுமைப்பித்தன். ஐயரைப் போல ரீதி புதிது என்று இவர் பிரகடனம் செய்யவில்லை. ஆனால், "அவர் நூறு கதைகள் எழுதினாரென்றால் நூறும் நூறு வகை". (தமிழ்ச் சிறுகதைகள் வரலாறும் வளர்ச்சியும், சிட்டி, சிவபாத சுந்தரம்),

ஒரு காலகட்டத்தின் இருவேறு போக்குகளைக் கல்கியும் புதுமைப் பித்தனும் பிரதிபலித்தனர் என்றாலும், அவர்களுக்குள் கடுமையான கருத்து மோதல்கள் நிகழ்ந்ததுண்டு. மணிக் கொடி நின்றுபோன பிறகு தினமணியில் கட்டுரைகள் எழுதிய புதுமைப்பித்தன் கல்கியின் சில கதைகள் வேறு சில ஐரோப்பிய எழுத்தாளர்களின் படைப்புகளைத் தழுவியவை என்பதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டினார். கல்கி அந்தக் கண்ணாடிச் சட்டங்களை மாத்திரம் பயன்படுத்திக் கொண்டா ரேயன்றிச்சித்திரங்கள் அவருடையவை என்று கல்கியின் சார்பாக ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் கனையாழியின் கனவு தொகுதியின் முன்னுரையில் வாதிடுகிறார்.

கல்கி மீது எத்தகைய குற்றத்தைப் புதுமைப்பித்தன் சுமத்தினாரோ, அதே பழிக்குத் தனது மறைவிற்குப் பின் புதுமைப்பித்தன் உள்ளானார் என்பது வரலாற்றின் மற்றுமொரு விசித்திரம்.

> **பாரதியார், புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ரா. பிச்சமூர்த்தி, போன்ற முன்னோடிகள் கையாண்ட கருப்பொருட்களை அவர்களை விட அதிக செழுமையுடன் கையாண்டவர் ஜானகிராமன். அந்த முன்னோடிகள் எடுத்துக் கொள்ளாத விஷயங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை அவர்களை விட ஒரு பெரிய வேகத்துடனும் திறமையுடனும் கையாண்டவர் ஜெயகாந்தன்.**

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தன் அளவிற்குப் பேசப்படும் இன்னொரு எழுத்தாளர் ஜெயகாந்தன். புதுமைப்பித்தனைப் போலவே அடித்தள மக்களின் துயரங்கள், நடுத்தர மக்களின் மன விசித்திரங்கள் இவற்றைப் பற்றி எழுதுபவர். ஆனால் புதுமைப்பித்தன் கதைகளில் அடிப்படை நம்பிக்கை வறட்சி. ("என் கதைகளின் பொதுத் தன்னம்பிக்கை வறட்சி" - புதுமைப் பித்தன் கலைமகள் 1947) ஆனால் ஜெயகாந்தனுடைய பாத்திரங்கள் மிகச் சிக்கலான நேரத்திலும் வாழ்வின் மீதான நம்பிக்கையையும், காதலையும் கைவிட்டு விடாதவர்கள். இதற்குப் புதுமைப் பித்தனுக்கு இல்லாத சித்தாந்த பலம் ஜெயகாந்தனுக்கு இருந்தது ஒரு காரணம். இளைமைப் பருவத்தில் கம்யூனிஸ்ட் கட்சியோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு தன் வாழ்க்கையைத் துவக்கிய ஜெயகாந்தன் மார்க்சிய சித்தாந்தங்களில் பயிற்சியும் நம்பிக்கையும் கொண்டிருந்தவர். கல்கியைப் போலச் சிறு பத்திரிகைகள் எழுதத்துவங்கி, ஆனந்தவிகடனுக்கு வந்தவர். கல்கியைப் பாதித்ததைப் போலவே ஜெயகாந்தனையும் இம் மாற்றம் பாதித்தது. ஆனால், கல்கியைப் போல ஜனரஞ்சகமாக எழுதுபவராக மாறிவிடாமல் ஆனந்த விகடன் வாசிக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சமூகத்தினரின் Crisisஐ தர்க்க ரீதியாக ஆராயத் தனது கதைகளை ஜெயகாந்தன் பயன்படுத்திக்கொண்டார். தனது இலக்கிய வாழ்வின் நான்காவது கட்டம் என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் இந்தக் காலகட்டத்தில் அவர் சிறு பத்திரிகையில் எழுதி வந்த இலக்கிய வடிவத்தை விட்டு விட்டு வேறொரு புதிய வடிவத்தைக் கைக்கொள்ளத் துவங்கினார்.

"அர்த்தமே வடிவத்தை வளமாக்கு கிறது. ஆகையினால் இவற்றைப் பிடித்துக்கொண்டு வீண் அவஸ்தைக்கு உள்ளாகிற பிறரையும் நமது அறியாமை யால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல் சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப் பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம்" என்று தனது சிறுகதை வடிவம் குறித்து வாதிடுகிறார் ஜெயகாந்தன்.

ஜெயகாந்தன் ஆரம்ப நாட்களில் மார்க்சியப் பார்வையோடு எழுதி

**உலகப் புகழ்பெற்ற ஓவியரான 'லியானார்டோ டாவின்ஸி' தீட்டிய பழங்கால ஓவியமான 'தி லாஸ்ட் சப்பர்' புதுப்பிக்கப் பட்டுள்ளது; இருபதாண்டுக் காலமாக நடைபெற்றது இந்தப் பணி! கடந்த 4 நூற்றாண்டுகளில் இவ்வாறு இந்த ஓவியம் 19 தடவை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த ஓவியம் மிலன் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவலாய மடத்தில், பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.**

வந்ததாகவும், பின் பெரிய பத்திரிகைகளுக்குப் போய் 'கெட்டுப்போய்' விட்டதாகவும் குற்றம் சாட்டுகிறவர்கள் உண்டு. ஆனால் அவரது ஆரம்ப காலத்திலேயே, கம்யூனிஸ்ட்டான விஜயபாஸ்கரன் நடத்திவந்த சரஸ்வதி இதழிலேயே ப்ராய்ட்டிச அடிப்படையில் தாம்பத்யம், பௌருஷம், திரஸ்காரம், பால்பேதம் ஆகிய நான்கு கதைகளை ஜெயகாந்தன் எழுதியதுண்டு. இந்தக் கதைகளை எழுதியபோது "சிற்றின் பத்தைத் தூண்டிவிடும்" கதைகளை எழுதுகிறார் ஜெயகாந்தன் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளானார். பெரியாழ்வார் திருமொழி, பாரதியார், ச.து.சு.யோகி ஆகியோரை மேற்கோள் காட்டி 'ஆபாசம் வார்த்தையிலா இருக்கிறது' என்று எதிர்வழக்காடினார் ஜெயகாந்தன். ஆனால் பாலுணர்வு பற்றி உளவியல் ரீதியில் கு.ப.ரா-வும், நடப்பியல் ரீதியில் புதுமைப்பித்தனும், தத்துவ நோக்கில் பிச்சமூர்த்தியும் எழுதினார்கள் என்றால், இந்த மூன்று நிலைகளையும் தாண்டிப் பகிரங்கமான சொல்லாட்சியுடன் ஜெயகாந்தன் எழுதினார் என்பதை மறுப்பதற்கில்லை.

செக்ஸ் கதைகளை எழுதுவதான குற்றச்சாட்டிற்கு உள்ளான இன்னொரு எழுத்தாளர் தி.ஜானகிராமன். 1960ல் புதுப்பிக்கப்பட்ட மணிக்கொடியில் எழுதத் துவங்கியவர். பாலுறவுச் சிக்கல்களை கு.ப.ராவின் பாணியைப் பின்பற்றி, அவரையும்விட நுட்பமாக எழுதியவர் ஜானகிராமன் என்ற போதிலும், அவர் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டதைப்போல வெறும் செக்ஸ் கதைகளை மாத்திரம் எழுதியவரல்ல. இசைக் கலைஞர்களைப் பற்றி, அநாதரவான சிறுவர்களைப் பற்றி, ஆசிரியர்களைப் பற்றி, வெற்றிபெறும் போதும் தோல்வி காணும் போதும் வக்கிரமடைந்துவிடுகிற மனிதர்களைப் பற்றி ஏன், டவுன் பஸ்ஸில் 'பீக்' அவரில் கும்பல் நடுவில் மாட்டிக் கொண்டு 'ஈவ் டீசிங்கிற்கு' உள்ளாகும் பெண்ணைப் பற்றிக்கூட எழுதியவர். இவருடைய கதையில் ஜெயகாந்தனைப் போல, தர்க்கரீதியான அணுகுமுறை இராது. ஆனால், புதுமைப்பித்தனைப் போல வாழ்க்கை பற்றி ஒரு நோக்கு உண்டு. கல்கியினுடைய நகைச்சுவை ஆங்காங்கே இழையோடுவதைப் பார்க்க முடியும். ஆனால் ஜனரஞ்சகத்தை நோக்கமாகக் கொண்டிருக்காது. ஜெயகாந்தனின் பலம் அவருடைய வார்த்தைகள் என்றால், ஜானகிராமனுடைய பலம் அவர் உரையாடலின் இடையே விடும் மௌனம்.

பாரதியார், புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ரா.பிச்சமூர்த்தி போன்ற முன்னோடிகள் கையாண்ட கருப் பொருட்களை அவர்களை விட அதிகச் செழுமையுடன் கையாண்டவர் ஜானகிராமன். அந்த முன்னோடிகள் எடுத்துக்கொள்ளாத விஷயங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை அவர்களை விட ஒரு பெரிய வேகத்துடனும் திறமையுடனும் கையாண்டவர் ஜெயகாந்தன்.


தமிழ் மரபிற்கு முற்றிலும் வெளியே பயின்று, தமிழில் சிறுகதை எழுதி அதில் சிறப்பான இடத்தைப் பெற்றவர் அசோகமித்திரன். மணிக்கொடி காலத்தில் ஐரோப்பிய சிறுகதைகளில் - குறிப்பாக மாப்பசான், செக்காவ், கோகோல் ஆகியோருடைய சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதைகளின் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகித்தன என்றால் 35 ஆண்டுகளுக்குப் பிறகு எழுபதுகளின் துவக்கத்தில் கணையாழி எழுத்தாளர்களிடையே அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர்களின் தாக்கம், குறிப்பாக ஜான் அப்டைக், ஜே.டி.சாலிங்கர், நார்மன் மெய்லர், ஏன் - எர்னஸ்ட் ஹெமிங்வே கூடத்தான், ஏற்படக் காரணமாக இருந்தவர் அசோகமித்திரன். இவருடைய கதைகள் ஒருவகையில் மிகைப்படுத்தப்பட்ட புதுமைப்பித்தனின் கதைகள். வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கம் நம்பிக்கையும் வறட்சியும் கொண்டவைகள். புதுமைப் பித்தனின் கேலியோ எள்ளலோ அதில் கிடையாது. ஆனால் மெல்லிய, மிக மெல்லிய நகைச்சுவை இதில் இழையோடும்.

நெடிய தமிழ்ச் சிறுகதை மரபைத் தன்னுடைய கண்ணுக்குத் தெரியாத ஆணிவேராகவும் ஐரோப்பிய, அமெரிக்க வடிவ, வாக்கிய அமைப்புகளைத் தன்னுடைய கிளைகளாகவும் கொண்டவர் சுஜாதா. பாரதியாரில் இருந்து அசோகமித்திரன் வரை எல்லாருடைய சாயலையும் இவர் எழுத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் பார்க்க முடியும். அசோகமித்திரன் வாழ்க்கையை மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்பவரென்றால் அதை, மிகச் சுலபமாக எடுத்துக் கொள்பவர் சுஜாதா. அசோகமித்திரன் கதைகளில் இழையோடும் நகைச்சுவையை அடையாளம் கண்டுகொள்ளத் தவறி நாம் சிரிக்காமல் இருந்துவிடக் கூடும். ஆனால் அவை முன்வைக்கும் விஷயங்கள் குறித்து நாம் சிந்திக்காமல் இருந்துவிட முடியாது. ஆனால் சுஜாதாவின் கதைகளில் மறைமுகமாக உணர்த்தப்படும் விஷயங்களைப் புரிந்துகொண்டு சிந்திக்கத் தவறுகிற வர்கள்கூட சிரிக்கத் தவறுவதில்லை. அசோகமித்திரன் புலமைப்பித்தனின் மிகைப்படுத்தப்பட்ட வடிவம் (Enlarged Version) என்றால் கல்கியின் மிகைப் படுத்தப்பட்ட வடிவம் சுஜாதா.

என்றோ எங்கோ ஒரு ஊற்றாகத் துவங்கிய தமிழ்ச் சிறுகதை என்ற மகாநதி சளைக்காமல் ஓடிக்கொண்டிருக்கிறது. சில நேரம் பாறைகளைப் புரட்டியபடி; சில நேரம் பாறை நடுவே விரிந்த ஒரு நூல் கயிறாய் மெலிந்து சோர்ந்து நகர்ந்தபடி; நிற்காமல் சளசளக்கும் அருவியாய்; வீட்டு மண்பானையில் இளைப்பாறப் பிடித்து வைத்த நீராய்; ஒளிதரும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாய்; அழுக்குப் போக குளிப்பாட்டுவதாய், கரையோரத்துக் கழிவுகளை வாங்கிச் சுமக்கும் தாதியாய்; கழனிக்குள் புகுந்து பசுமை விளை விக்கும் தாயாய், தமிழ்ச் சிறுகதை என்னும் ஜீவநதி நூற்றாண்டுகளுக்கும் மேலாய் ஓடிக்கொண்டிருக்கிறது. நகரத்து மனிதர்களாகிய நமக்கு அதைக் கண்டு வியந்து நிற்க மனமுண்டு. ஆனால் முங்கிக் குளிக்க நேரமில்லை. வெறுமனே கால் நனைத்து கையில் அள்ளி ஒரு வாய் பருகித் திருப்தி காணவே பிறந்தவர்கள் நாம். இந்தக் கட்டுரையும் அப்படித்தான். மலர்களை விட, மலர்களைப் பற்றிய கவிதை சில சமயங்களில் நன்றாக அமைந்து விடுவதுண்டு. ஆனாலும் அவை மலர்களாக முடியாது. இந்தக் கட்டுரையும் அப்படித்தான்.

●

# திறப்பதற்கு இங்கே கத்தரியுங்கள்



- கள்ளன் போலீஸ்
விளையாட்டில் - யாரும்
கண்டு பிடிக்க முடியாத
இடமொன்று
கண்டறிந்து
ஒளிந்திருந்தான்,
அந்த விளையாட்டு முடிந்து
எல்லோரும் வட்டமாயமர்ந்து
சினிமாப்பேர் போட்டு
விளையாடப் போனது
தெரியாமல்....

- வகுப்பில் பேனாவில்
யாருக்குப் பசி தீர்ந்தாலும்
அவனிடம் கேட்டால்
மட்டுமே
கிடைக்கும்;
சார்வாளுக்குத் தெரியாமல்
தரவும்
அவனுக்கு மட்டுமே முடியும்.

- எங்கிருந்து
கொண்டு வருவானென்று
தெரியாது --
யார் வீட்டு வாசலில்
மார்கழிக் கோலத்தில்
பூசணிப்பூ இருந்தாலும்
அவன் தந்ததாய்த்
தானிருக்கும்.

- அத்தை முறைவேண்டும்
வேம்பக்கா
அவள் வீட்டுக்கு
விலக்கானால்
கருவேப்பிலைச் செடியைக்
காரணம் காட்டி
தோட்டம் பூராவுக்கும்
தண்ணீரிறைக்க
வைத்துவிடுவாள்
(தன் மகளை வேறு
யாருக்கோதான்
தாரை வார்த்திருக்கிறாளாம்)

- படர்குழிக்கு நட்டு வைத்தால்
நன்றாய்க் கொடிவளரும்
என்று கார்த்திகைச்
சொக்கப்பானையின்
கொஞ்சம் எரிந்த
மூங்கில்களை
முண்டியடித்துப் பொறுக்கி
அள்ளிவருவான்;
தெருவின் முதல் வீடு
தொடங்கி
ஆளுக்கொன்றாய் வாங்கிக்
கொள்ள
வெறுங்கையோடு
வீடு வந்து
ஆடைக்கரிக்கும்
மீசைக்கரிக்குமாய்
அப்பாவிடம்
வாங்கிக் கட்டுவான்.

- யார் கேட்டாலும்
இல்லையென்று சொல்லாமல்
"எழுதிக்கிட்ருக்காங்க
நாளைக்கு வரும்".... என்று
தபால்காரன் உத்தியோகம்
எப்படியோ கிடைத்தது.

- எனினும்
இப்போதும்
அவன் வீட்டில் இல்லை
அவனது வீடும்
அவன் சாமியாடும்
கோயிலும்!

கலாப்ரியா





**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறை, டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வுமையம் - ஆகியவை இணைந்து நடத்திய 'இந்திய விடுதலைக்கு முந்திய தமிழ் இதழ்கள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை:**

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ பத்தாயிரம் கிராமங்களில் ஏழாயிரம் கிராமங்களைச் சார்ந்த மக்கள், பத்திரிகை என்றால் என்னவென்றே தெரியாத நிலையிலிருந்த காலத்தையும் சூழலையும் நினைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சியிருக்கும் மூவாயிரம் கிராமங்களிலும் படித்தவர்களாகக் கருதப்படுவோர் எண்ணிக்கை நாலாயிரம் இருக்கும். அவர்களுள் ஒவ்வொரு கிராமத்திலும் யாராவது ஒரு பணக்காரர் வீட்டில் ஏதாவது ஒரு நாளிதழ் வரும். அதை ஒன்பது பேர் படிக்கக்கூடும். இந்த நிலையில் பார்த்தால் ஒவ்வோர் ஊரிலும் பொதுச் செய்திகளைத் தெரிந்து கொள்பவர் பத்துப்பேர் இருந்தால் அதிகம். இப்படிப்பட்ட காலகட்டத்தில் நாளிதழ் நடத்துவதில் எவ்வளவு பேர் ஆர்வம் காட்டுவார்கள் என எண்ணிப் பார்க்கவேண்டும்.

அந்நியர் ஆட்சி, அதன் கெடுபிடிகள், மொழியறியாத அவர்களிடத்தில் அவர்களைப் பற்றிக் குறை சொல்லி யிருப்பதாக யாரேனும் கூறிவிட்டால், எல்லாப் படிகளையும் பறிமுதல் செய்தல் முதலியவற்றால் பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் இழப்பும் தண்டனையும் அக்காலத்தில் தாங்கிக்கொள்ள முடியாத அளவிலிருந்தன.

தலைநகரங்களில் அல்லது பெருநகரங்களில் பத்திரிகையை நடத்தினால் செய்திகளை எளிதில் பெறலாம். படித்தவர் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கும். வாங்குவோர் பொருளாதாரமும் சற்று உயர்ந்ததாக இருக்கும். அதேவேளையில் பத்திரிகைகளிடையே போட்டியும் இருக்கும். இவற்றுக்கும் ஈடுகொடுத்தாக வேண்டும். தொலைதூர நகரங்களில் பத்திரிகையைத் தொடங்கினால் விற்பனை குறைவாக இருக்கும். செய்தி திரட்டுவதும் எளிதாக இராது. வெளியூர் களுக்குப் பத்திரிகை போய்ச்சேரச் சில நாளாகும். இவ்வளவு தொல்லைகளுக்குமிடையே பத்திரிகை நடத்துவது என்பது பெருஞ் சாதனைதான்.

கொண்ட கொள்கையில் பிடிப்பும், உறுதி தளரா உள்ளமும், இழப்பினுக்கும் அச்சுறுத்தலுக்கும் சோர்ந்துவிடாத முயற்சியும் இருக்குமானால் பத்திரிகை நடத்த முன்வரலாம். ஒரு சாராரே படித்தவர்களாக இருந்த காலகட்டத்தில் அவரினத்தாரே பத்திரிகை நடத்தினால் வாங்குவர். பிறர் நடத்தும் பத்திரிகை அந்தச் சூழலையும் கடந்தாக வேண்டும்.



- முனைவர் சா.வளவன்

நாட்டுப்பற்றை ஊட்டியாக வேண்டும். விடுதலை வேட்கையை வளர்த்தாக வேண்டும் என்ற சூழலில் தமிழகத்தில் காங்கிரசு இயக்கம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது.

காங்கிரசின் தூண்களாக மூவரைக் குறிப்பிடுவர். நாயக்கர், நாயுடு, முதலியார் என்றே அம்மூவரையும் குறிப்பிட்டுப் பழக்கம். முறையே பெரியார், டாக்டர் பி.வரதராசுலு, திரு.வி.க. ஆகியோரைக்குறிக்கும். காங்கிரசு இயக்கத்தை வளர்க்க அயராமல் பாடுபட்ட இம்மூவரையும் ஒரு சேர எண்ணிப் பார்ப்பர். மூவரும் காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றனர். தங்கள் நலனை மறந்து, நாட்டு நலனே பெரிதெனக் கொண்டனர்.

டாக்டர் வரதராசுலு சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் 4.6.1887இல் பிறந்தார். இராசிபுரத்தின் பெருமாள் கோவில் அறங்காவலராக அவருடைய தந்தை இருந்தார். தொடக்கக் கல்வியை இராசிபுரத்திலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியைக் கோவையிலும் கற்றார். பர்மா மருத்துவப் பள்ளியிலும் கல்கத்தா தேசிய மருத்துவப் பள்ளியிலும் பயின்று மருத்துவரானார். திருப்பூரில் மருத்துவத் தொழிலைத் தொடங்கினார்.

எளிய குடும்பத்தில் தோன்றினாலும் படிப்பதோடு புறச்சூழல்களை அறிந்துகொள்வதில் ஆர்வங்காட்டியவர் வரதராசுலு. மாணவப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டார். தம் வாழ்க்கையின் முற்பகுதியைச் சேலத்திலும், பிற்பகுதியைச் சென்னை யிலும் கழித்தார். எழுத்திலும் பேச்சிலும் மிகச் சிறந்து விளங்கினார். உணர்ச்சிமிக்க பேச்சால் இளைஞரிடையே எழுச்சியை ஊட்டினார். ஆள்காட்டி விரலை நீட்டி நீட்டிப் பேசுவது அவரது பழக்கமாயிருந்தது.

காற்றையும் தண்ணீரையும் போல அன்றைக்குத் தமிழ்நாட்டிற்குத் தேவையா யிருந்தவை, நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும். தமிழ்நாட்டிற்கு இவ்விரண்டு பெரிய நன்மைகளைச் செய்தார் வரதராசுலு என டி.எஸ்.சொக்கலிங்கம் பாராட்டியிருக்கிறார். பத்திரிகைப் பணியைச் செவ்வனே செய்தவர்

வரதராசுலு. தம் பத்திரிகைப் பாசறையில் பண்பட்ட எழுத்தாளர் பலரைப் பக்குவப்படுத்தினார்; தமிழ் மொழியை எளிமைப்படுத்தினார்.

அன்றைய சூழலில் ஆங்கில வழியே படித்தவர்கள் இருந்தனர். ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்தே பேசும் படித்த கூட்டமாக அது இருந்தது. அக்கூட்டத்திற்கு இசைவாகச் **'சுதேசமித்திரன்'** பத்திரிகை இருந்தது. அப் பத்திரிகையில், தொடக்கத்தில் மிகப்பல ஆங்கிலச் சொற்கள் கலந்து எழுதும் நிலை இருந்தது. பின்னர் வரையறை இல்லாமல் வடமொழிச் சொற்களையும் கலந்து எழுதினர். 'சுதேசமித்திரனின்' தலையங்கத்தில் காணும் தமிழ்நடையைக் **கல்கி** அவர்கள் எள்ளல் சுவையுடன் எழுதிக்காட்டினார்.

''பெங்கால் புரொவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகாசரன் மஜூம்தாரின் பிராஸிடென்ஸியல் அட்ரெஸில் இந்தியப் பிரஜைகளின் தேசிய அபிலாஷைகளை அடக்க, இந்திய புயராக்ரஸி கையாண்டு வரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றி கரதலாமலகமாய் கூறி இருப்பது ஹிஸ் எக்ஸெலன்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமென்று நம்புகிறோம்''. (சா.திரவியம், தேசியம் வளர்த்தமிழ், 1982, ப-120).

இங்ஙனம் பத்திரிகை நடை இருந்தாலும் சுதேசமித்திரனை அதிக அளவில் மக்கள் படித்தனர். காங்கிரசு இயக்கத்தைச் சார்ந்து இருந்ததும் அரசியல் கலைச் சொற்களை உருவாக்கியதும் செய்திகளையும், தலையங்கங்களையும் விரும்பிப் படிக்குமாறு தலைப்பிட்டு அமைத்ததும் விற்பனைப் பெருக்கத்திற்குக் காரணங்களாகும்.

1882இல் 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பாகவும் 1893இல் வாரமிரு முறையாகவும் 1897இல் வாரம் மும்முறையாகவும் வெளிவந்தது. 1899இல் நாளேடாக மலர்ந்தது. பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர், டாக்டர் வரதராசுலு **'பிரபஞ்சமித்திரன்'** எனும் பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். ஏற்கெனவே இயக்கம் காரணமாக நாளேடாக வெளிவந்ததாலும் சுதேசமித்திரன் மக்கள் மனங்களில் இடம் பெற்றது. இந்த நிலையில் 1916 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரபஞ்சமித்திரனை நடத்தத் தொடங்கினார் வரதராசுலு. -

''சென்னையில் கஷ்டநிலையிலிருந்த 'பிரபஞ்சமித்திரன்' என்ற பத்திரிகையை 1916ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் வாங்கி அதை தேசிய முறையில் நடத்தி வந்தேன்'' - என்று அவரே குறிப்பிட்டுள்ளார். (தினமணி, சுதந்திரப் பொன்விழா மலர், ஆகஸ்ட் 97, பெ.சு.மணி - சுதந்திரத்திற்கு பாடுபட்ட பேனாக்கள் ப.142).

அந்த பிரபஞ்சமித்திரனுக்கு எதிர்ப்பு மூன்று நிலைகளில் இருந்தது.

'தேசபக்தியற்ற பிராமணரல்லாதவர்கள், வர்ணாச்ரம தர்மத்தை உயிர்ப்பிக்க முயற்சி செய்யும் பிராமணர்கள், பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் என்று மூன்று பக்கங்களில் இருந்தும் பிரபஞ்சமித்திரன்' (மேலது-ப.145) தாக்கப்பட்டது. அச்சூழலில் வாங்கி விற்பனையைப் பெருக்கியவர் வரதராசுலு.

**ஹோம்ரூல்** இயக்கத்தையும் காந்தியுகக் காங்கிரசையும் பிரபஞ்சமித்திரன் ஆதரித்தது. ஹோம்ரூல் இயக்கத்தில் எல்லா இன மக்களும் அதிகளவில் சேர்ந்தால் பிராமணர் ஆதிக்கம் இராது எனும் கருத்தையும் 19.11.1917 இதழ் வெளியிட்டுள்ளது. வரதராசுலுவின் எழுத்து மக்களிடையே உணர்ச்சியைத் தட்டி எழுப்பியதோடு சிந்திக்கவும் வைத்தது. வலிமையான பிரச்சாரக் கருவியாகவும் அமைந்தது. அரசியல் நடப்புகளைச் சூடாகவும் சுவையாகவும் விமர்சனம் செய்தது. 1918இல் மதுரை மாநகரில் ஹார்வி மில் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அப்போது தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் பேச்சாளர் திரண்டனர். ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பு, அனல் தெறிக்க வெளிப்பட்டது. மதுரை நகரே போர்க்களமாயிற்று. காவலர்கள் சுட்டதால் சிலர் மாண்டனர். நாளும் கொந்தளிப்பு பெருகிக் கொண்டிருந்தது. இவற்றுக்கெல்லாம் வரதராசுலுவின் பேச்சே காரணம் என அரசு கருதியது. அவரைப் பிடித்து (29.8.1918) வழக்கும் தொடுத்தது. **திரு.வி.க.** தாம் நடத்திய தேசபக்தனில் அவருக்காகத் தலையங்கமே எழுதினார். **இராஜாஜி** வாதாடினார்.

ஆனாலும், இராஜாஜிக்குப் புகழ் சேர்த்த இந்த வழக்கு வரதராசுலுவிற்குப் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்றுத் தந்தது. பின்னர் உயர்நீதிமன்றத்தில் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வாதாடி வரதராசுலுவிற்கு விடுதலை வாங்கித் தந்தார்.

## மாநிலத்தில் முதல் மூன்று இடங்கள் பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கு ஊக்கப் பரிசு

பத்தாம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில், முதல் மூன்று இடங்களைப் பெறும் ஊனமுற்ற, பார்வையற்ற மற்றும் காதுகேளாத மாணவர்களுக்குத் தமிழக அரசின் சிறப்பு விருது மற்றும் ரொக்கத் தொகை 1996-97 ஆம் கல்வியாண்டிலிருந்து வழங்கப் பட உள்ளது.

பத்தாம் வகுப்பில் முதல் இடம் பெறுவோருக்கு ரூ.1,500ம், இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூ.1,000ம், மூன்றாம் இடம் பெறுவோருக்கு ரூ.750-ம் பரிசாக வழங்கப்படும்.

அதேபோல் பன்னிரண்டாம் வகுப்பில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.1,500-ம், இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூ.1,000ம், மூன்றாம் இடம் பெறுவோருக்கு ரூ.750-ம் ரொக்கப் பரிசுகளாக வழங்கப்படும்.

இவ்விருது ''மாநிலத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சிறந்த ஊனமுற்ற மாணவர்களுக்கான தமிழ்நாடு அரசு ஊக்கப்பரிசு'' எனக் குறிப்பிடப்படும். □

பேச்சாலும், எழுத்தாலும் மக்கள் பெருமளவில் வரதராசலுவை ஆதரித்தனர். ஆங்கிலேயர், பேச்சைத் தடுக்க முற்பட்டது போலவே எழுத்தையும் முடக்க முனைந்தனர். பிரபஞ்சமித்திரன் இதழுக்கு 1,000 ரூபாய் ஈடுகாணம் (ஜாமீன்) கட்டவேண்டும் என ஆணையிட்டனர். அதனால் பிரபஞ்சமித்திரன் நிறுத்தப் பட்டது.

18.6.1923இல் கல்லிடைக் குறிச்சியில் வரதராசலு அவர்கள் பேசும்போது - 'நரகம் இன்னதென்று அறிய வேண்டுமானால் ஆங்கில ஆட்சியின் கீழ் சிறையை அனுபவித்தால்தான் முடியும்' என விளக்கினார். சிறைக் கொடுமை என்னவென்று தெரிந்தும் தொடர்ந்து உறுதியோடு பேசினார்; எழுதினார். அவருடைய பேச்சிலும் எழுத்திலும் பொருத்தமான உவமைகள் வெளிப்படும்.

**இன்றைய சமுதாயம் வழுக்கு நிலம் போன்றது; அதைச் செம்மைப்படுத்துவதே உண்மையான சமூக சேவை!**

**- அறிஞர் அண்ணா**

"சிவில் சர்வீஸ் அமைப்பு எஃகு அமைப்பு என்று கூறுகிறார் லாயட் ஜார்ஜ். இந்த இரும்புத்தூண் மணலில் எழுப்பப்பட்டுள்ளது என்பதையும் தண்ணீர் பெருக்கெடுத்தால், தரையில் தகர்ந்து விழும் என்பதையும் பாபம் அவர் அறியவில்லை!" (கா.திரவியம், முகுநூ-ப.144) என பொருத்தமான உவமையைக் கொண்டு விளக்கினார்.

''அரசியல், சமுதாய வாழ்வு, வர்த்தகம், சமயம் ஆகிய எத்துறைகளிலாயினும் சரி; ஒவ்வோர் இந்தியனும் முதலில் போர் வீரனாகவும் அதற்குப் பின்பே குடிமகனாகவும் விளங்க வேண்டும்'' என்று கோவையில் நடந்த அனைத்திந்தியத் தொழில் வேளாண்மைக் கண்காட்சியில் 11.4.1933இல் வீரமுழக்கம் செய்தார்.

'இந்த மனிதர் ஒரு விஷப்பூச்சி. இவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டும்' என்று அன்றைய ஆட்சியாளரில் ஒருவர் ஆத்திரப்பட்டுக் கோப்பில் குறித்தாராம் (மேலது, ப.165).

இங்ஙனம் பேச்சில் தொனித்த வீரமும் உறுதியும் எழுத்திலும் அவர்தம் பத்திரிகையிலும் வெளிப்பட்டது. அழகிய உவமையை எழுத்திலும் கூடப் பொருத்திக்காட்டி விளக்கினார்.

"ஒத்துழையாமை இயக்கத்துக்கு அணைபோட, மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரை, அன்னிய ஏகாதிபத்தியம் தந்திரமாகப் பயன்படுத்தி வந்ததைக் கண்டு வருந்தி, அவர் 'ஜின்டான் சாஸ்திரி' என்ற தலைப்பில் எழுதிய குறிப்பில், குத்தல் மட்டுமல்ல, கொள்கைப் பிடிப்பும் காணப்பட்டது. வயிற்றில் ஏற்பட்ட கோளாறு வாயில் நாற்றத்தை உண்டாக்குவதை மாற்ற, ஜின்டான் மாத்திரையை உட்கொள்வதுபோல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன் வயிற்றுக் கோளாற்றை மறைத்து, வெளிப்பகட்டைக் காத்துக்கொள்வதற்கு, சாஸ்திரியைப் பயன்படுத்துகிறது".

வேகமான - விறுவிறுப்பான தமிழ் நடையை வரதராசலு 'தமிழ்நாடு' இதழில் அமைத்தார். திருப்பூரில் மருத்துவராகப் பணியாற்றிய போதே பிரபஞ்சமித்திரனை மங்கலம் சண்முக முதலியாரிடம் இருந்து வாங்கி விறுவிறுப்பான தமிழ்நடையை அப்பத்திரிகையில் வரச் செய்தார். மங்கலம் சண்முகம் அவர்களிடம் 'காரியஸ்தர்' என்ற முறையில் சுப்பிரமணிய சிவா சேர்ந்திருந்தாலும் ஆசிரியராகவே பணியாற்றினார். வெள்ளிதோறும் வார இதழாகப் பிரபஞ்சமித்திரன் வந்தது. செய்திகளை விமர்சனப் பாங்குடன் 'நாரதர்' என்ற புனை பெயரில் சுப்பிரமணிய சிவா எழுதி வந்தார். ஆனால் அப்பத்திரிகை சென்னையில் மிகுந்த பொருளிழப் போடு தடுமாறியது. திருப்பூரில் இருந்த வரதராசலு பிரபஞ்ச மித்திரனை வாங்கி ஓராண்டு நடத்தினார்.

மதுரை வழக்கின் காரணமாகச் சிறையில் தள்ளப்பட்டார் வரதராசலு. முதல் சிறை வாசத்துக்குப் பின் 1919ஆம் ஆண்டின் இறுதியில் 'தமிழ்நாடு' பத்திரிகையை வார இதழாகத் தொடங்கினார் வரதராசலு. சேலத்திலிருந்து வரதராசலு அப்பத்திரிகையை நடத்தி வந்தார். 1925லிருந்து சென்னையில் இருந்து 'தமிழ்நாடு' இதழை வார இதழாகவே வெளிவரச் செய்தார். 14.4.1926 முதல் தமிழ்நாடு நாளிதழாக வெளிவரலாயிற்று. ஆனால் டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்கள் 1927 தமிழ்ப் புத்தாண்டிலிருந்து வெளிவந்தது. செல்வாக்குப் பெற்ற பத்திரிகையான சுதேசமித்திரனுக்குப் போட்டியாக அமைந்த 'தமிழ்நாடு' ஓரணாவிற்கு விற்கப்பட்டது. சுதேசமித்திரனின் விலை ஒன்றரை அணாவாகும்.

1921இல் இரு கட்டுரைகள் வரதராசலுவால் வெளியிடப்பட்டன. அவை அரசு எதிர்ப்புக் குற்றமுடையன என அந்நியர் வழக்கினைத் தொடுத்து வரதராசலுவிற்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனையை விதித்தனர். **'சுதந்திரப் போராட்டம்', 'இந்தியா விடுதலை பெற ஆயுதம் ஏந்த வேண்டும்'** எனும் இரு கட்டுரைகளும் அவருக்கு மீண்டும் சிறைவாசத்தைத் தந்தது. (தமிழ் இதழியல் சுவடுகள், ப.139).

1925இல் 'குடி அரசு' பத்திரிகையை ஈ.வெ.ரா. தொடங்கினார். திரு.வி.க. 'தேசபக்தன்' இதழை, 1917லேயே தொடங்கியிருந்தார். வடநாட்டில் லால் - பால் - பால் (Lal-Pal-Bal) (லாலாலஜபதிராய், விபின்சந்திரபால், பாலகங்காதர திலகர்) என மூவரைச் சேர்த்துச் சொல்வது போல ஈ.வெ.ரா., வரதராசுலு, திரு.வி.க. ஆகிய மூவரையும் கூறுவர். பெரியாரைக் காங்கிரசில் சேர்க்கப் பெரிதும் முயன்றவர்களுள் வரதராசுலுவும் ஒருவர். காங்கிரசு இயக்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்குப் பல கிராமங்களுக்குள்ளும் சென்று பேசியவர் வரதராசுலு. காங்கிரசு கோரிக்கைக்கு ஆதரவு தராமல் இருந்த கட்சிகளைக் கண்டித்து மக்களிடையே சொற்பொழிவாற்றி நாட்டுப்பற்றை வளர்த்தவர் வரதராசுலு. (தினமணி,மேலது, ஏ.என்.சிவராமன் வணக்கமும், நன்றியும் (ப-62).

காங்கிரசுக்காரர்களின் கூட்டங்கள் படித்த வகுப்பினர் மட்டுமே கூடியிருக்கிற சிறிய மண்டபங்களில் நடந்து வந்ததை மாற்றித் திறந்தவெளிகளில் எல்லார் முன்னிலையிலும் நடத்திக் காட்டியவர் வரதராசுலு. எல்லா ஊர்களிலும் வரதராசுலுவின் புகழ் பரவியதால் அவர் நடத்திய பத்திரிகையும் புகழ்பெறத் தொடங்கியது. 1500 படிகள் விற்கும் இதழே - அதாவது சுதேசமித்திரனே மிகப் பெரும் பத்திரிகை என்று போற்றப்பெற்ற காலத்தில் தமிழ்நாடு இதழும் 1500 படிகள் விற்பனையாயிற்று. அது படிப்படியே உயர்ந்து 1930இல் 10,000 ஆயிற்று. (மா.சு.சம்பந்தன் மு.கு.நூல், ப.139, டி.எஸ்.சொக்கலிங்கம் எனது இரா.நாமா, ப.63).

1932இல் வரதராசலு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கில இதழையும் நடத்தி வந்திருக்கிறார். தமிழ்நாடு

இதழ் நீதிக்கட்சியை வன்மையாகக் கண்டித்தது. 1912இல் செப்டம்பர் 20இல் சென்னையில் காங்கிரசு இயக்கத்தின் பிராமணரல்லாதவர்கள் 'சென்னை மாகாண சங்கம்' என்னும் ஓர் அமைப்பினை நிறுவினர். ஏற்கெனவே **தென்னிந்திய நல உரிமைச்சங்கம்** என **நீதிக்கட்சி** இயங்கிக் கொண்டிருந்தது. அது பிராமணரல்லாதார் அரசியல்-சமூக உரிமைகளைப் பெறத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தது. காங்கிரசிற்கு வலுவான போட்டியாக நீதிக்கட்சி இருந்தது. அதனால் பிராமணரல்லாத காங்கிரசுக்காரர்கள் பிராமணரல்லாதார் நலன்களைப் பாதுகாக்க காங்கிரசின் நோக்கத்திற்கு முரண்படாதவாறு சென்னை மாகாண சங்கத்தை நிறுவினர் எனத் **திரு.வி.க.** அவர்கள் குறித்துள்ளார். (திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.760).

'தமிழகத்தின் அரசியல் வாழ்விலும் இதழியியல் வளர்ச்சியிலும், 1917 முதல் 1930 வரை வரதராசுலு அவர்கள் மிகச் சிறந்த சேவை செய்தவராவார். அவரது தொண்டால் தமிழகத்தைப் பெருமைப்படுத்தினார். இந்த அடிப்படைப் பணியைத் தமிழகம் என்றென்றும் மறவாது, மறவாது' - என 1923ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1931ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் வரை தமிழ்நாடு இதழில் பணியாற்றிய **'பேனாமன்னர்' டி.எஸ்.சொக்கலிங்கம்** குறிப்பிட்டுள்ளார்.

**வரதராசுலு** அவர்கள் தம் **தமிழ்நாடு** இதழ் மூலம் பல போராட்டங்களை நடத்தினார். 'இந்து மதப் பரிபாலன போர்ட்' என்னும் அறநிலையத்துறை கோவில் நிர்வாகங்களைச் சரியாய் நடத்த தேவையானதாகும். ஆனால் அறநிலையத் துறைக்குச் சட்டம் ஏற்படுத்தியபோது சில நாளிதழ்கள் அதனை எதிர்த்தன. வரதராசுலு அவர்கள் தாம் தீவிரமான ஆதரவை வெளிப்படுத்தினார். கோவிலில் பொட்டுக் கட்டும் பழக்கத்தை ஒழிக்கச் சட்டம் பிறப்பித்தபோது, அதனையும் இதழ்களும் சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களும் வன்மையாய் எதிர்த்தனர். அச்சட்டத்தையும் தீவிரமாய் ஆதரித்தது தமிழ்நாடு இதழ்.

**தமிழ்நாடு** பத்திரிகை 1925ஆம் ஆண்டு பொங்கல் மலரில் **பாரதியார்** பாட்டுக்கள் சிலவற்றை வெளியிட்டதோடு அவற்றிற்கு ஓவியங்களும் தீட்டப்பட்டன. டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்களின் இந்த முயற்சி பின்னர் பல பத்திரிகைகளிலும் வேகமாய்ப் பரவியது எனக் குறித்துள்ளார். (மா.சு.சம்பந்தன்,மு.கு.நூல், பக்.142-143).

தமிழ்நாடு இதழ் சேலத்திலிருந்து வந்துகொண்டிருந்த போது வரதராசுலு அவர்கள் வாரந்தோறும் எழுதும் தலையங்கங்களைத் தந்தியில் வரவழைத்து **இந்துப்** பத்திரிகையில் வெளியிட்டு வந்தது. இது வரதராசுலு அவர்களின் எழுத்து வன்மையைப் புலப்படுத்தும். சுதேசமித்திரன் இதழும் தமிழ்நாடு இதழில் வெளிவந்த கட்டுரைகளை அச்சிடும் கருத்துக்களை வரதராசுலு விளக்குவதற்குக் கதைகளின் உதாரணங்களையும் எப்போதாவது எடுத்துக்காட்டுவார் என்கிறார் டி.எஸ்.சொக்கலிங்கம். (மேலது-ப.62, ப.138).

*மனித சமூகத்தின்*
*தரித்திரத்திற்குக் காரணம் -*
*செல்வவான்கள்*
*செல்வவான்களாக இல்லா*
*விட்டால், தரித்திரவான்கள்*
*இல்லை!*

*- தந்தை பெரியார்*

வரதராசுலு அவர்களின் தமிழ்நடை மிகச் சிறப்பானதாகும். கட்டுரைகளிலும் மொழிபெயர்ப்புகளிலும் தமிழ் மரபே இருக்கவேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தார். Water falls என்பதனை **'நீர்வீழ்ச்சி'** என மொழிபெயர்ப்பதை அவர் விரும்பவில்லை. **'அருவி'** என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்றார். அதுபோன்றே எழுத்துக்களைத் தேவையில்லாமல் கூட்டி எழுதுவதை அவர் தவிர்த்தார். **'மகாத்மாவின் பிரசங்கம்'** என்பதை **'மகாத்மா பிரசங்கம்'** என்று போட்டாலே போதும் என்றார். 'போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம்' என்பதைப் 'போலீசார் சுட்டனர்' என்று போட்டாலே போதும். ஆங்கிலத்தில் உள்ளதைப் படித்து உள்ளத்தில் இருத்திக்கொண்டு தமிழில் பிறர்க்கு எப்படிச் சொல்லுவோமோ அதுபோல் எழுத வேண்டும் என்றார். இங்ஙனம் பத்திரிகைத் தமிழில் அவர் மிகப்பல சீர்திருத்தங்களைச் செய்தார். நேராக மனத்தில் எழுத வேண்டும் என்பதே அவருடைய கொள்கை. மனத்தில் பதியுமாறு பேசியதைப் போலவே மனத்தில் பதிய எழுதியவர் வரதராசுலு. (மா.சு.சம்பந்தன், மு.கு.நூல் பக்.142, டி.எஸ்.சொக்கலிங்கம் ப.42).

தமிழ்நாடு இதழுக்கு வரதராசுலு அவர்கள் தேர்ந்தெடுத்த இலச்சினை அவருடைய கொள்கைப் பிடிப்பைக் காட்டும். மூவண்ணக் கொடியின் நடுவே கலப்பை ஏந்திய ஓர் உழவன் நின்று கொண்டிருப்பான். இரு பக்கங்களிலும் இரண்டு வாள்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கும். கீழே 'சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு' எனும் தொடர் இருக்கும். இது **தமிழ்நாடு** இதழின் இலச்சினையாகும்.

அவருடைய நாட்டுப்பற்றும் அடித்தள மக்களை உயர்த்தும் நோக்கமும் விடுதலை வாழ்வே இனிய வாழ்வு என்ற கருத்தும் சிந்திக்கத் தக்கவை. **பாரதி** நடத்திய **'விஜயா', 'சூர்யோதயம்'** போன்ற பத்திரிகைகளில் கூட ஆங்கிலத் தொடரும் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் பெயரும் இருந்தன. ஆனால் வரதராசுலு அவர்கள் இதழின் முகப்பில் தமிழ்ச் சொற்களையே கையாண்டிருந்தார். ஆங்கிலத்திலும் பெயர் பொறிக்கப்படவேண்டும் என்பதால் வலது பக்கத்தின் மேல் பகுதியில் மிகச் சிறிய எழுத்தில் ஆங்கிலத்தில் குறித்துள்ளார். வாரப் பதிப்பு, நிறுவிய ஆண்டு (வாரப் பதிப்பு-ஸ்தாபிதம்) 1919 எனக் குறித்துள்ளார். 1941ஆம் ஆண்டில் இதன் விலை அரையணாவாக இருந்திருக்கிறது. (தினமணி, மு.க.நூ.பெ.சி.மணி மு.கு.க.ப.147இல் வெளியிட்டுள்ள இதழின் நகல் - அறிமுகம்).

காங்கிரசு இயக்கத்தை வளர்த்ததைப் போலவே காங்கிரசுக்குள்ளிருந்து தவறு செய்தவர்களையும் கண்டித்து எழுதியிருக்கிறார் வரதராசுலு **'சேரமாதேவி குருகுலப் போராட்டம்'** மிகச் சிறப்பானதாகும். வ.வே.சு.ஐயர் நடத்திவந்த சேரமாதேவி குருகுலத்தில் பிராமண மாணவர்களுக்குத் தனியாகவும் பிறருக்குத் தனியாகவும் உணவு பரிமாறிய வழக்கத்தைச் சாடினார். சமத்துவத்தை நிலைநாட்டச் சமபந்தி வேண்டுமென வலியுறுத்தினார். **திரு.வி.க., பெரியார்** ஆகியோரும் இவ்வியக்கத்தில் பெரிதும் ஈடுபட்டனர்.

குருகுலம் தொடங்கப்பட்டதன் நோக்கமும் அதற்குப் பொருள் தந்தோர் உணர்வும் எத்தகையன என்பதை முதலில் விளக்கி, வெளிநாடு சென்று திரும்பிய வ.வே.சு.விடம் தமக்கு இருக்கும் நம்பிக்கையைக் காட்டி, அவர் தம்மை மாற்றிக்கொள்ள ஒரு மாத காலம் கொடுத்தும் மிக நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

''தேசிய வேலை செய்யக் கூடியவர்களைத் தயாரிப்பதற்காக குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா வகுப்புகளையும் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அதற்கு உதவி செய்தார்கள். மொத்தம் வசூலான **50,000** ரூபாயில் **96%** பிராமணரல்லாதாரால் கொடுக்கப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி **5000** ரூபாய் கொடுத்தது. என்னுடைய கிளர்ச்சியின் பயனாகவே இவ்விவாதம் தீரும் வரையில் வாக்களித்த ரூ.**22,000** கொடுபடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சிறுவர்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்களென்று நம்பித் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் பிராமணரல்லாதாரும் பணம் கொடுத்தனர். எது எப்படியிருந்த போதிலும் பிராமண, பிராமணரல்லாத சிறுவர்கள், ஆகாரம், கல்வி இரண்டிலும் வித்தியாசமின்றி நடத்தப்படுவார்கள் என்ற நிச்சய ஏற்பாட்டின் பேரில்தான் நான் பணம் கொடுத்தேன். ஸ்ரீமான் வ.வெ.சு.ஐயர் இங்கிலாந்து சென்று திரும்பியவராயும் தேசீயவாதியாகவும் இருப்பதால் அவர் ஜாதி வித்தியாசம் பாராட்டமாட்டார் என்று நம்பினேன்; ஆனால் அவ்விதம் நடக்கவில்லை. எல்லாச் சிறுவர்களையும் சமத்துவமான முறையில் நடத்த வேண்டுமென்றே நான் கேட்கிறேன். எவ்வித வித்தியாசமும் இருக்கக்கூடாது. அல்லது பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். தேசீய ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்குச் சமத்துவமான நடத்தை ஏற்படாத வரையில், முடிவு என்ன ஆனபோதிலும் நான் எனது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மாதக் கெடு கொடுத்திருக்கிறோம். அதற்குள் அவர் குருகுலத்தைச் சீர்திருத்த வேண்டும். அல்லது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அவர் இப்பொழுது போலவே நடந்து கொண்டிருந்தால் நேரடியான வேலை ஆரம்பிக்குமுன் தேசத்தில் பலமான பிரசாரம் செய்யப் போகிறேன். (குடிஅரசு, 10.5.1925, வார இதழில் மீண்டும் அச்சிடப்பெற்ற அறிக்கை).

எழுதியது போலவே தீவிரமாகப் போராடினார் வரதராசுலு. விடுதலை பற்றியும் மிக நல்ல விளக்கத்தை 'ஓர் எச்சரிக்கை' எனும் தலைப்பில் **20.12.1925** இதழின் தலையங்கத்தில் எழுதியுள்ளார்:

சுதந்திரம் மனிதவர்க்கத்தின் பிறப்புரிமையாகும். சுதந்தரமென்பது ராஜீய சுதந்தரத்தை மட்டும் குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். அது தவறான எண்ணமாகும். **சமய சுதந்தரம், சமூக சுதந்தரம்**, சிறு கூட்டத்தார் தம்முடைய நயவஞ்சகத்தால் பெரும்பான்மையோரை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்துவது போன்ற மோசங்களிலிருந்து குடிமக்கள் விடுதலை பெறும் சுதந்தரம் ஆகிய பல சுதந்தரங்களும் உண்டு. நாம் கோருவது பரிபூரண சுதந்தரமாகும். ராஜீய - சமய - சமூக விடுதலையே, நாம் வேண்டுகிறோம். வெள்ளைக்காரனுக்கு குறிப்பிட்ட விசேஷ-சுதந்தரமும் அந்தஸ்த்தும் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. சமய-சமூக-உயர்வும் மற்றவர்களுக்கில்லாத **'பிறப்புரிமை'** எனப்பட்ட பாத்தியதைகளும் பிராமணருக்குக் கொடுக்கப்படுவதையும் நாம் ஆட்சேபிக்கிறோம். (குடிஅரசு, 27.12.1925 இதழில் அச்சிடப்பெற்ற பகுதி).

ஆங்கிலேய அரசுக்கு வரிகள் செலுத்தக் கூடாது என்று வரதராசுலு அறைகூவல் விடுத்தபோது, அரசு அவருக்கு அபராதம் விதித்தது. அவர் செலுத்த மறுத்தார். அதனால் அவருடைய காரைப் பறிமுதல் செய்தது. ஆனால் அக்காரை ஓட்டிச் செல்ல இந்தியர் எவரும் முன் வரவில்லை. ஆங்கிலேய உயர் அதிகாரியே அதனை ஓட்டிச் சென்றார். அந்த அளவுக்கு மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தவர் வரதராசுலு. அவருடைய உறுதியையும் வீரத்தையும் கண்டு **'தென்னாட்டுத் திலகர்'** என வாயார வாழ்த்தினார் வ.உ.சி. (கா.திரவியம், மு.க.நூ.ப.145).

பத்திரிகையின் கடமையாக நல்ல கருத்தொன்றை வரதராசுலு அவர்கள் தம் இதழில் வெளியிட்டார். அக் கொள்கையை அவர் இறுதிவரை பின்பற்றினார்.

''பத்திராதிபரின் பொறுப்பு வெகு கஷ்டமானது. பத்திராதிபர்களுக்கு அளவற்ற ஆண்மை வேண்டும். அதற்குத்தக்க அடக்கமும் வேண்டும். உண்மையைச் சொல்ல வேண்டும். உற்றார் உறவினர் தாட்சண்யங்களைப் பொருட்படுத்தலாகாது. ஜனங்களின் தவறுகளை ஆணித் தரமாக எடுத்துக்காட்ட வேண்டும். அவர்களுடைய ஆத்திரத்தைக் கண்டு அஞ்சலாகாது. **'ஈசுவர சேவையை விடத் தேச சேவை உயர்ந்தது'** என்பது நமது அபிப்பிராயம்.

நெஞ்சில் பேத புத்தியும் கையில் தேசியக் கொடியும் பிடித்த பத்திராதிபர்களின் சேவை, கக்கத்தில் கன்னக்கோலும், கையில் ஜபமாலையும் வைத்தவர் செய்யும் பக்தியைப் போன்றதாகும். (மா.சு.சம்பந்தன், மு.கு.நூல், பக்.127-128).

கொள்கை வீரரான வரதராசுலு காங்கிரசு இயக்கத்தில் தொடர்ந்து போராடி வந்தார். **1925இல் பெரியாரும்** (1927இல்) **திரு.வி.க.வும்** காங்கிரசு இயக்கத்திலிருந்து விலகிய பின்னும் தொடர்ந்து போராடியவர் **வரதராசுலு**.

'அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு அஞ்சிப் பணிந்து சிலரும், சர்க்காரின் சலுகைகளில் மயங்கித்தாசர்களாகச் சிலரும் நமக்கேன் வம்பு என்று நாட்டு நடப்பில் நாட்டம் கொள்ளாமல் சிலரும், மனித உணர்வு இல்லாது மரத்துப்போய் சிலரும் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் எழுத்தின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தையே உருவாக்கி, பாரதநாட்டின் விடுதலைப் படைக்கலனாகப் பத்திரிகையைப் பயன்படுத்தி, துன்பத்தைத் துச்சமாகக் கருதி, தியாகத்தையே பரிசாக ஏற்று, தமிழுக்கும் தாய் நாட்டுக்கும் தளராத தொண்டாற்றியவர் டாக்டர் **வரதராசுலு**'. (கா.திரவியம் மு.க.நூ. ப.102).

''தியாகமும் உறுதியோடு எதிர்த்த தன்மையும் அவருக்குப் பின்னாளில் வெற்றியைத் தரவில்லை.

## தண்டனை

''இருதார மணத்துக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'' என்று அந்நாளில் தலைமை நீதிபதியாக இருந்த லார்ட் ரஸ்ஸல் அவர்களை ஒரு சமூக ஊழியர் கேட்டார்.

உடனே ரஸ்ஸல், ''இரண்டு மாமியார்கள் இருப்பதே அதிக தண்டனைதான்'' என்று சிரித்துக்கொண்டே கூறினார்!

1926இல் நாளிதழாகத் தம் வார இதழான தமிழ்நாடு இதழை வெளியிட்டு வீச்சான அதே நேரத்தில் பேச்சுவழக்கிலான நடையைக் கொண்டு மிகப் பல வாசகர்களை ஈர்த்து சுதேசமித்திரனுக்கு மிக வலிவான போட்டியாக அமைத்தவர் வரதராசுலு. ஆனால் 1930இல் மகாத்மா காந்தியின் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தமிழ்நாடு இதழ் ஆதரிக்காததால் சில காங்கிரசார் 'இந்தியா' எனும் நாளிழை வெளியிட எண்ணினர்.

1930இல் இருந்தே தமிழ்நாடு இதழின் விற்பனை குறையத் தொடங்கியதாலும். 1931இல் டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் விலகியதும் விற்பனையைப் பாதித்திருக்கும். 1936 செப்டம்பர் 26ஆம் நாள் வரதராசுலு எழுதிய தலையங்கத்தில், தீவிரமான சமய, சமூக, அரசியல் துறைகளில் கழிக்க வேண்டுமென்ற எண்ணம் (தினமணி, மு.க.நூ.பெ.சு.மணி, மு.கு.க.ப.147) காரணமாகத் தமிழ்நாடு இதழை நிறுத்தப்போவதாக அறிவித்தார்.

1936இல் வாரப் பதிப்பும் நாளிதழும் நின்றன. நான்கு ஆண்டுகள் கழித்து வார இதழை சேலத்திலிருந்து அரையணா விலையில் மீண்டும் நடத்தினார். அதுவும் சில ஆண்டுகளே வெளிவந்தது. பின்னர் கருமுத்து தியாகராசர் அப்பத்திரிகையை வாங்கிச் சில காலம் நடத்தினார். 1930-32களில் காந்தியடிகள் நடத்திய உப்புச்சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம் முதலியவற்றை வரதராசுலு எதிர்த்ததால் 'தமிழ்நாடு' இதழ் தேசபக்தர்களின் ஆதரவை இழந்தது. 1934இல் இந்தியச் சட்டசபை தேர்தல் நடந்தது. காங்கிரசில் இருந்து விலகியிருந்ததால் தேர்தலின் சுயேச்சையாக நின்றார் வரதராசுலு. அவரைக் காங்கிரசில் நிறுத்துவதற்குத் திரு.வி.க. பெரிதும் முயன்றார். (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.432) ஆனால் வரதராசுலு இணங்கவில்லை. தேர்தலில் தோற்றுப்போனார்.

சரிவும் தோல்வியும் இருந்தாலும் அவருடைய பத்திரிகைப் பணியும் பேச்சும் தொண்டும் அவருடைய பெயரை இந்திய விடுதலை வரலாற்றில் நிலைத்திருக்கச் செய்யும். 1957இல் அவர் மறைந்தார்.

## மனித நேய வார விழா




மனித நேய வார விழா ஜனவரி 24 முதல் 30ஆம் தேதி வரை தமிழகமெங்கும் - குறிப்பாக மாவட்டத் தலைநகர் தோறும் கொண்டப்பட்டது.

சென்னையில் - கிண்டியில் உள்ள டான்ஸ்டியா அரங்கில் அவ்விழா - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தின் மூலம் 29.1.98 அன்று 'சமுதாயப் பொருளாதார சிந்தனைக் கூட்டம்' என்ற பெயரில் நடத்தப்பெற்றது.

ஆதி-திராவிடர் பழங்குடியினர் இயக்கத்தின் நலத்துறைச் செயலாளரும்; இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர், இணை இயக்குநர், ஆகியவர்களும் தொழில் மற்றும் வணிகத்துறை இணை இயக்குநர் திரு. நடராசன், கல்கத்தாவில் உள்ள ரவீந்திரநாத் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர். சுபசங்கர் மற்றும் தாட்கோ, டான்ஸியா, சிப்பெட் நிறுவன உயர் அலுவலர்கள் முதலான பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

இதன் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் சிவானந்தா சாலையில் உள்ள அண்ணா கலையரங்கில் நடைபெற்றன. செய்தி விளம்பரத்துறையோடு, மாணவ - மாணவிகள் சேர்ந்து நடத்திய கண்காட்சியும் இதில் இடம் பெற்றது.




# திராட்சையில் மாவுப் பூச்சியா ?

தமிழ்நாட்டில் திண்டுக்கல், மதுரை, தேனி, தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பரவலாகவும் இதர மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளிலும் திராட்சை சாகுபடி செய்யப் படுகின்றது.

திராட்சையைத் தாக்கும் பூச்சிகளில், 'மாவுப்பூச்சி' அல்லது 'கற்றாழைப் பூச்சி' என்று சொல்லப்படும் இப்பூச்சியினால் சேதாரம் மிகவும் அதிகமாகும். பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தி மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். மேலும் இரசாயனப் பூச்சிக்கொல்லிகளை உபயோகிப்பதனால் திராட்சையின் பழங்களில் அதன் நச்சுத் தன்மை கலந்து உண்பவர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறது.

எனவே, இரசாயனப் பூச்சிக் கொல்லியை உபயோகிப் பதற்குப் பதிலாகப் பூச்சியை உணவாக உண்ணும் கிரிப்டோலிமஸ் என்ற இரை விழுங்கிப் பொறிவண்டுகளைத் திராட்சைத் தோட்டத்தில் விட்டு மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். இத்தகைய இரைவிழுங்கிகள், புழு மற்றும் வண்டு பருவத்தில் உள்ள மாவுப்பூச்சியை இணையாக உண்டு, தோட்டத்தில் இட்ட 10முதல் •12 வாரங்களில் சேதாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்திவிடும்.

'ஆஸ்திரேலியப் பொறி வண்டு' என்று அழைக்கப்படும் இத்தகைய இரைவிழுங்கிகள் மதுரை வேளாண் கல்லூரியின் பூச்சியியல் துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு திராட்சைச் சாகுபடியாளரின் நலனுக்காக வண்டு ஒன்றுக்கு ரூ.1/-க்கு (ரூபாய் ஒன்று மட்டும்) விற்பனைக்கு உள்ளது.



இது தவிர, பச்சைக் கண்ணாடி இறக்கைப்பூச்சி என்ற இரைவிழுங்கிப் பூச்சியினமும் இக்கல்லூரி ஆய்வுத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த வகைப்பூச்சியும் திராட்சை மாவுப்பூச்சியை நன்கு கட்டுப்படுத்தும்.

ஒரு எக்டேருக்கு மாவுப்பூச்சியின் தாக்குதலின் அளவிற்கு ஏற்ப சுமார் 1,000 - 4,000 வண்டுகள் வரை தேவைப்படும். ஒரு முறை வண்டுகளைத் தோட்டங்களில் விட்டால் நாளடைவில் இவைகள் பல்கிப்பெருகி, வரும் ஆண்டுகளில் மாவுப்பூச்சியின் தாக்குதல் பெருமளவில் குறைந்து திராட்சை மகசூலை அதிகரிக்கின்றது.

மேற்சொன்ன இரைவிழுங்கிகள் வேண்டுவோர்:-

**பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை,**
**வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,**
**மதுரை - 625 104.**

- என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- டாக்டர் கே. சந்திரசேகரன்

# நூல் நயம்

## முத்துச் சிப்பி

ஆசிரியர் : வாழியூர் வே.இராசவேலன்

வெளியிட்டோர் : பேரரசு பதிப்பகம், வாழியூர், ஒண்ணுபுரம் வழி, திருவண்ணாமலை மாவட்டம், 632 315.

பக்கம்: 96 விலை ரூ.25

எழுத்திலும் பேச்சிலும் வல்லவரான நூலாசிரியர், பல்வேறு ஏடுகளில் எழுதிய-மேடைகளில், வானொலியில் முழக்கிய-புதியதாக இயற்றிய 32 கவிதைகளைத் தொகுத்தளித்துள்ள நூல் இது. எளிய கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளன.

## புயலை வென்ற புழுதி

ஆசிரியர் : பரிக்கல் என். சந்திரன்,எம்.ஏ.,

வெளியிட்டோர் : மீனா புத்கப் பண்ணை,
7, வில்லியம் லே-அவுட் 2வது தெரு,
கே.கே.ரோடு, விழுப்புரம்-605 602

பக்கம்: 188 விலை ரூ.42

இது ஒரு நகைச்சுவை நாடக நூல். இரண்டு நாடகங்கள் உள்ளன. சற்றே வித்தியாசமாக 'கொல்ல வந்த கள்ளிப்பாலுக்குத் தப்பிய பெண் குழந்தைகளுக்கு' காணிக்கை ஆக்கப்பட்டுள்ளது. பல வானொலி நாடகங்களை எழுதிய ஆசிரியரின் அனுபவம், நாடக நடையில் தெரிகிறது.

## குருத்துவம் என்னும் பாம்பனார் புகழ்க்காதை

ஆசிரியர் : ஓவியப் பாவலர் மு.வலவன்

வெளியிட்டோர் : முத்தையன் பதிப்பகம்,
65, பெரியதெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600 005

பக்கம்: 96 விலை ரூ.25

அருள்மிகு முருகப்பெருமானின் பெருமை பாடியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்-அருணகிரிநாதர், வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள், குமரகுருதாசர் என்னும் பாம்பன் அடிகள் ஆகியோராவர். இவர்களில் மூன்றாமவர் வரலாறு-அவதாரக் காண்டம், அருந்தவக் காண்டம், அருள்புரிக் காண்டம் என மூன்று காண்டங்களாக, முத்தான தமிழ்க் கவிதையாக்கிப் படைக்கப்பட்டுள்ள நூல் இது.

## ஆயிரம் உண்டிங்கு சேதி

ஆசிரியர் : பி.எல். ராஜேந்திரன்,எம்.ஏ.,

வெளியிட்டோர் : கதிர் வெளியீடு,
7, பொன்னம்பலம் தெரு,
சோழபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053

பக்கம்: 128 விலை ரூ.23

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்கிற திருமூலர் பாடலடிகளில் தொடங்கி - 'சாதிகள் இல்லையடி பாப்பா! குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!' என்கிற பாரதியின் பாடலடிகள் வரை, ஆயிரத்திற்கு மேலான பொன்மொழிகள் தொகுக்கப்பட்டுள்ளன இந்த நூலில். தமிழ்நாட்டறிஞர்கள் மட்டுமன்றிப் பிற நாட்டறிஞர்களின் நல்லுரைகளும் இதில் அடங்கியுள்ளன.

## ஓர் ஓவியம் காவியமானது

ஆசிரியர்: பெருங்கவிஞர் நெ.அ.பூபதி

பக்கம் : 112 விலை ரூ.25

மனிதத் தன்மை என்னவெனக் கணவனுக்கு உணர்த்திட வாழ்நாள் முழுவதும் பாடுபட்டும் பலன் காணாமல் - சுகம் காணாமல் கண்மூடும் சுந்தராங்கி பற்றிய சோக காவியம் இது; முழுதும் இனிக்கும் எண்சீர் விருத்தப் பாக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.

## முதல் முத்தம்


ஆசிரியர் : பெருங்கவிஞர் நெ.அ.பூபதி

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர் :
தேன்மொழி வெளியீடு,
22, பாரதிதாசன் தெரு, குமரன் காலனி,
சைதாப்பேட்டை, சென்னை-15.

பக்கம் : 88 விலை ரூ.20

வறிய குடும்பத்து வாலிபன் ஒருவனும், அதே நிலையில் உள்ள இளம் பெண்ணொருத்தியும் காதலிக்கிறார்கள்; அவர்களுடைய காதல் தொடர்கதையாக நீளாமல், சிறுகதையாகவே முற்றுப் பெறுகிறது; இதுதான் பத்துத் தலைப்புகளின் கீழான காவியமாகப் படைக்கப்பட்டுள்ளது இந்த நூலில்.

- இந்திரன்



# 1998 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்

## 1. வடசென்னை : சி.குப்புசாமி (தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 18,80,926 |
| பதிவான வாக்குகள் | - | 8,76,109 |
| செல்லாதவை | - | 24,262 |

| | | | |
|---|---|---|---|
| சி.குப்புசாமி | திமுக | - | 4,01,322 |
| ஆர்.டி. சபாபதி மோகன் | மதிமுக | - | 3,32,229 |
| ஏ.சௌந்தரராஜன் | இ.கம்யூ.(மா) | - | 50,590 |
| ஜி.கே.ஜேபாரதி | இதேகா | - | 47,147 |
| டி.தேவநாதன் | பசக | - | 12,085 |
| எஸ்.குமாரசாமி | இ கம்(மார்க் லெ) | - | 4,100 |
| கே.கலைச்செல்வன் | சுயே | - | 1,608 |
| ஜே.கணேசன் | சுயே | - | 1,331 |
| என்.பாஸ்கர் | சுயே | - | 757 |
| டி.கே.மூர்த்தி | சக | - | 678 |

## 2. மத்திய சென்னை :

### முரசொலி மாறன் (தி.மு.க.) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 12,06,719 |
| பதிவான வாக்குகள் | - | 5,97,170 |
| செல்லாதவை | - | 15,721 |

| | | | |
|---|---|---|---|
| முரசொலி மாறன் | திமுக | - | 3,00,774 |
| டி.ஜெயகுமார் | அதிமுக | - | 2,29,047 |
| ஆர். அன்பரசு | இதேகா | - | 44,061 |
| எஸ்.நடராஜன் | புத | - | 1,385 |
| சுதர்சன் | சுயே | - | 1,161 |
| சுவாமிநாதன் | சுயே | - | 973 |
| திருமதி சவா முஸ்தபா | சுயே | - | 888 |
| வி.சிவகுமார் | சுயே | - | 798 |
| டி.சிவஞான சம்பந்தன் | ராஜத | - | 714 |
| எஸ்.ரங்கநாதன் | சுயே | - | 622 |
| வி.ஜி.லோகநாதன் | சுயே | - | 493 |
| இ.ஜகந்நாதன் | சுயே | - | 299 |
| எஸ்.ராமச்சந்திரன் | சுயே | - | 234 |

## 3. தென் சென்னை : டி.ஆர்.பாலு (தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 19,36,542 |
| பதிவான வாக்குகள் | - | 9,17,040 |
| செல்லாதவை | - | 18,242 |

| | | | |
|---|---|---|---|
| டி.ஆர்.பாலு | திமுக | - | 4,32,913 |
| கே.ஜனா கிருஷ்ணமூர்த்தி | பாஜக | - | 4,12,899 |
| எம்.பி.சுப்பிரமணியம் | இதேகா | - | 44,549 |
| எம்.நாகப்பன் | சுயே | - | 3,294 |
| என்.கனகசபை | சுயே | - | 2,012 |
| ஜே.மோகன்ராஜ் | டிஎல்ஜே | - | 1,276 |
| எஸ்.விவேகானந்தா | சுயே | - | 744 |
| எஸ்.ஸ்ரீனிவாசன் | சுயே | - | 574 |
| பி.எஸ்.கணேசன் | சுயே | - | 537 |

## 4. ஸ்ரீபெரும்புதூர் (தனி) :

### கே.வேணுகோபால் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 12,66,643 |
| பதிவான வாக்குகள் | - | 7,24,858 |
| செல்லாதவை | - | 28,531 |

| | | | |
|---|---|---|---|
| கே.வேணுகோபால் | அதிமுக | - | 3,26,528 |
| டி.நாகரத்தினம் | திமுக | - | 3,02,733 |
| டாக்டர் கே.ஜெயகுமார் | இதேகா | - | 64,944 |
| எஸ்.வியாசராஜன் | சிசேக | - | 1,345 |
| எஸ்.டி.ஜெயராமன் | சுயே | - | 777 |

## 5. செங்கல்பட்டு :

### காஞ்சி பன்னீர்செல்வம் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,48,117 |
| பதிவான வாக்குகள் | - | 6,96,499 |
| செல்லாதவை | - | 25,913 |

| | | | |
|---|---|---|---|
| காஞ்சி பன்னீர்செல்வம் | அதிமுக | - | 3,29,239 |
| கே.பரசுராமன் | திமுக | - | 3,06,323 |
| டி.என்.முருகானந்தம் | இதேகா | - | 24,968 |
| எம்.யூ.கிருஷ்ணன் பாராயனர் | சுயே | - | 5,419 |
| கே.ஜெகவீரபாண்டியன் | ராஜத | - | 2,754 |
| எஸ்.கே.பி.ஸ்ரீனிவாசன் | சுயே | - | 765 |
| எம்.கே.ரமேஷ் | சுயே | - | 588 |
| எத்திராஜ் பிரிகேடியர் | சுயே | - | 530 |

## 6. அரக்கோணம் : சி.கோபால் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,72,687 |
| பதிவான வாக்குகள் | - | 7,20,670 |
| செல்லாதவை | - | 23,592 |

| | | | |
|---|---|---|---|
| சி.கோபால் | அதிமுக | - | 3,59,431 |
| ஏ.எம்.வேலு | தமாகா | - | 3,09,943 |
| ஆர்.தாமோதரன் | இதேகா | - | 24,519 |
| ஏ.கந்தப்பன் | சுயே | - | 1,120 |
| எஸ்.எம்.என்.நடராஜன் | சிசேக | - | 1,078 |
| புலவர் மணிஎழிலன் | சக | - | 987 |

## 7. வேலூர் : என்.டி.சண்முகம் (பா.ம.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,01,147 |
| பதிவான வாக்குகள் | - | 6,93,560 |
| செல்லாதவை | - | 19,631 |

| | | | |
|---|---|---|---|
| என்.டி.சண்முகம் | பாமக | - | 3,31,035 |
| டி.ஏ.மொஹமது சகி | திமுக | - | 3,04,630 |
| பி.அக்பர் பாஷா | இதேகா | - | 18,885 |
| எம்.பத்மநாபன் | சுயே | - | 17,837 |
| ஜே.சத்யமூர்த்தி | சக | - | 836 |
| பி.எஸ்.தரணிவாசன் | சுயே | - | 706 |

## 8. திருப்பத்தூர் :

### டி.வேணுகோபால் (தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,93,837 |
| பதிவான வாக்குகள் | - | 6,99,805 |
| செல்லாதவை | - | 25,250 |

| | | | |
|---|---|---|---|
| டி.வேணுகோபால் | திமுக | - | 3,22,990 |
| எஸ்.கிருஷ்ணமூர்த்தி | அதிமுக | - | 3,22,716 |
| ஆர்.கண்ணபிரான் | இதேகா | - | 28,095 |
| பி.அஜிஸ் | சுயே | - | 844 |

## 9. வந்தவாசி : எம்.துரை (பா.ம.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,75,770 |
| பதிவான வீக்குகள் | - | 6,67;287 |
| செல்லாதவை | - | 21,751 |

| | | | |
|---|---|---|---|
| எம்.துரை | பாமக | - | 3,27,010 |
| எல்.பலராமன் | தமாகா | - | 2,61,935 |
| எம்.கிருஷ்ணசாமி | இதேகா | - | 34,827 |
| ஆர்.குப்புசாமி (எ).ஆர். அரட்டைவடையார் | சுயே | - | 21,219 |
| ஜி.எஸ்.சந்திரபோஸ் | சுயே | - | 545 |

## 10. திண்டிவனம் :

### செஞ்சி எம்.ராமசந்திரன் (ம.தி.மு.க) வெற்றி


| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,65,034 |
| பதிவான வாக்குகள் | - | 6,74,617 |
| செல்லாதவை | - | 26,335 |

| | | | |
|---|---|---|---|
| செஞ்சி எம்.ராமச்சந்திரன் | மதிமுக | - | 3,20,112 |
| ஜி.வெங்கட்ராமன் | திமுக | - | 2,88,380 |
| கே.ராமமூர்த்தி | இதேகா | - | 29,898 |
| ஆர்.ஜெயபாலன் | பசக | - | 4,837 |
| டி.பரமசிவம் | சுயே | - | 1,892 |
| வி.ராமச்சந்திரன் | சுயே | - | 827 |
| என்.எம்.இஸ்மாயில் | சுயே | - | 640 |
| பி.எஸ்.பழனி | சுயே | - | 575 |
| ஜி.லஷ்மணன் | ராஜத | - | 443 |
| ஜி.இனியதயாளன் | சுயே | - | 332 |
| எம்.முகமது அலி ஜின்னா | சுயே | - | 189 |
| ஆர்.முனுசாமி | சுயே | - | 157 |

## 11. கடலூர்: எம்.சி.தாமோதரன் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,76,136 |
| பதிவான வாக்குகள் | - | 6,58,340 |
| செல்லாதவை | - | 23,596 |





| | | | |
|---|---|---|---|
| எம்.சி.தாமோதரன் | அதிமுக | - | 3,09,985 |
| பி.ஆர்.எஸ்.வெங்கடேசன் | தமாகா | - | 2,82,856 |
| டாக்டர் ஆர். இராமதாஸ் | இதேகா | - | 40,603 |
| கே.நம்பியார் | ராஜத | - | 1,300 |

## 12. சிதம்பரம் (தனி) :

### ஆர்.ஏழுமலை (எ) எழில்மலை (பா.ம.க.) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,54,642 |
| பதிவான வாக்குகள் | - | 6,84,155 |
| செல்லாதவை | - | 17,561 |

| | | | |
|---|---|---|---|
| ஆர்.ஏழுமலை (எ) எழில்மலை | பாமக | - | 3,05,372 |
| வி.கணேசன் | திமுக | - | 2,97,417 |
| டாக்டர் பி.வள்ளல்பெருமான் | இதேகா | - | 43,214 |
| பி.நாகப்பன் | பசக | - | 19,922 |
| எஸ்.ஜெயராஜ் | சுயே | - | 351 |
| வி.ஜானகிராமன் | சுயே | - | 318 |

## 13. தருமபுரி : கே.பாரி மோகன் (பா.ம.க.) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,75,234 |
| பதிவான வாக்குகள் | - | 6,39,529 |
| செல்லாதவை | - | 18,288 |

| | | | |
|---|---|---|---|
| கே.பாரி மோகன் | பாமக | - | 3,41,917 |
| பி.தீர்த்தராமன் | தமாகா | - | 2,42,490 |
| பி.வெங்கடேசன் | சுயே | - | 14,788 |
| பி.கே.பட்டாபிராமன் | யுசிபிஐ | - | 10,018 |
| சி.ஜெயசீலன் | பசக | - | 5,693 |
| ஏ.கோபால் இனமுரசு | ராஜத | - | 3,185 |
| என்.ஆர்.தியாகராஜன் | சுயே | - | 1,222 |
| டாக்டர் கே.பத்மராஜன் | சுயே | - | 999 |
| டி.மகேந்திரன் | சுயே | - | 559 |
| கே.மாணிக்கம் | சுயே | - | 370 |

## 14. கிருஷ்ணகிரி:கே.பி.முனுசாமி (அ.தி.மு.க.) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,15,876 |
| பதிவான வாக்குகள் | - | 6,48,144 |
| செல்லாதவை | - | 25,455 |

| | | | |
|---|---|---|---|
| கே.பி.முனுசாமி | அதிமுக | - | 3,15,762 |
| டி.ஆர்.ராஜாராம் நாயுடு | தமாகா | - | 2,66,413 |
| ஏ.ஜி.ஏ.கிருஷ்ணமூர்த்தி | இதேகா | - | 35,229 |
| ஆர்.முனிராஜ் | பசக | - | 5,285 |

## 15. ராசிபுரம் (தனி) :

### டாக்டர் வி.சரோஜா (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,08,243 |
| பதிவான வாக்குகள் | - | 6,06,487 |
| செல்லாதவை | - | 28,103 |

| | | | |
|---|---|---|---|
| டாக்டர் வி.சரோஜா | அதிமுக | - | 3,02,801 |
| கே.கந்தசாமி | தமாகா | - | 2,48,424 |
| தேன்மொழி | இதேகா | - | 18,178 |
| வி.அருள்மணி | புத | - | 5,338 |
| பி.சதாசிவம் | பசக | - | 1,159 |
| கே.பழனியப்பன் | சுயே | - | 928 |
| ஆர்.சுப்பிரமணி | சுயே | - | 510 |
| கே.பிரபாகரன் | சுயே | - | 360 |
| வி.வீரபாபு | ராஜத | - | 323 |
| ஆர்.ராமசாமி | சுயே | - | 205 |
| ஏ.தர்மராஜன் | சுயே | - | 158 |

## 16. சேலம் : கே.ராமமூர்த்தி (சுயே) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,78,177 |
| பதிவான வாக்குகள் | - | 6,79,486 |
| செல்லாதவை | - | 20,513 |

| | | | |
|---|---|---|---|
| கே.ராமமூர்த்தி | சுயே | - | 3,65,557 |
| ஆர்.தேவதாஸ் | தமாகா | - | 2,29,677 |
| கே.வி.தங்கபாலு | இதேகா | - | 48,027 |
| பி.சம்பத்குமார் | சுயே | - | 10,311 |
| எஸ்.கேசவராஜன் | ஏஜேபிபி | - | 2,091 |
| ஏ.ஜி.பத்மநாபன் | பசக | - | 1,710 |
| பி.மாரிமுத்து | சுயே | - | 550 |
| கே.பழனிசாமி | சுயே | - | 495 |
| சி.சிங்காரவேலு | சுயே | - | 405 |
| டி.பெரியசாமி | சுயே | - | 150 |

## 17. திருச்செங்கோடு :

### கே.பழனிச்சாமி (அ.தி.முக) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 14,60,247 |
| பதிவான வாக்குகள் | - | 7,81,520 |
| செல்லாதவை | - | 22,895 |

| | | | |
|---|---|---|---|
| கே.பழனிச்சாமி | அதிமுக | - | 4,14,992 |
| டாக்டர் கே.பி.ராமலிங்கம் | திமுக | - | 3,10,183 |



| | | | |
|---|---|---|---|
| பி.பழனிச்சாமி | இதேகா | - | 28,421 |
| டி.பாக்கியம் | புத | - | 2,442 |
| எஸ்.வி.செல்வம் | சுயே | - | 1,483 |
| பொன்.எஸ்.தில்லைக்கரசி | சுயே | - | 622 |
| ஆர்.செங்கோடன் | சுயே | - | 482 |

**18.நீலகிரி :**

**எம். மதன் (எ) மாஸ்டர் மதன் (பா.ஜ.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 12,94,110 |
| பதிவான வாக்குகள் | - | 7,18,202 |
| செல்லாதவை | - | 23,844 |

| | | | |
|---|---|---|---|
| எம்.மதன் (எ) மாஸ்டர் மதன் | பாஜக | - | 3,22,818 |
| எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் | தமாகா | - | 2,62,433 |
| ஆர்.பிரபு | இதேகா | - | 1,06,588 |
| எம்.பாஸ்கரன் | சுயே | - | 1,416 |
| சி.ரமேஷ் | சுயே | - | 1,103 |

**19. கோபிசெட்டிபாளையம்:**

**வி.கே.சின்னசாமி (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,21,268 |
| பதிவான வாக்குகள் | - | 6,27,372 |
| செல்லாதவை | - | 24,917 |

| | | | |
|---|---|---|---|
| வி.கே.சின்னசாமி | அதிமுக | - | 3,29,753 |
| என்.ராமசாமி | திமுக | - | 2,15,111 |
| இ.வி.கே.எஸ்.இளங்கோவன் | இதேகா | - | 48,531 |
| எல்.சுரேஷ் | சுயே | - | 7,836 |
| பன்னாரி | சுயே | - | 615 |
| வி.ஏ.முருகன் | சுயே | - | 609 |

**20.கோயம்புத்தூர் :**

**சி.பி.ராதாகிருஷ்ணன் (பா.ஜ.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 14,95,355 |
| பதிவான வாக்குகள் | - | 8,26,652 |
| செல்லாதவை | - | 22,167 |

| | | | |
|---|---|---|---|
| சி.பி.ராதாகிருஷ்ணன் | பாஜக | - | 4,49,269 |
| கே.ஆர்.சுப்பையன் | திமுக | - | 3,04,593 |
| ஆர்.கிருஷ்ணன் | இதேகா | - | 40,739 |
| எஸ்.டி.கல்யாணசுந்தரம் | பசக | - | 4,596 |
| ஆர்.ரங்கசாமி | சுயே | - | 1,431 |
| ஆர்.கிருஷ்ணசாமி | சுயே | - | 1,181 |
| சி.சாந்தி | சுயே | - | 1,091 |
| எம்.சாமிநாதன் | சுயே | - | 666 |
| ஒ.ராமசாமி | சக | - | 405 |
| ஆர்.லக்ஷ்மண நாராயணன் | சுயே | - | 220 |
| ஆர்.இளங்குமரன் | சுயே | - | 161 |
| கே.எஸ்.ராகவேந்திரா | சுயே | - | 133 |

**21. பொள்ளாச்சி (தனி) :**

**எம்.தியாகராஜன் (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,26,056 |
| பதிவான வாக்குகள் | - | 5,78,887 |
| செல்லாதவை | - | 24,612 |

| | | | |
|---|---|---|---|
| எம்.தியாகராஜன் | அதிமுக | - | 3,06,083 |
| கோவை தங்கம் | தமாகா | - | 2,10,682 |
| ஆர்.ஈஸ்வரவேலு | இதேகா | - | 31,967 |
| எம்.ஜோதிராஜ் | புத | - | 4,926 |
| கே.மணி | சுயே | - | 617 |

**22. பழனி : ஏ.கணேசமூர்த்தி (ம.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,17,611 |
| பதிவான வாக்குகள் | - | 6,26,656 |
| செல்லாதவை | - | 18,606 |

| | | | |
|---|---|---|---|
| ஏ.கணேசமூர்த்தி | மதிமுக | - | 2,86,300 |
| எஸ்.கே.கார்வேந்தன் | தமாகா | - | 2,58,863 |
| கே.எஸ்.வேணுகோபால் | இதேகா | - | 61,089 |
| என்.பழனிசாமி | சுயே | - | 1,084 |
| எஸ்.பொன்னுசாமி | சுயே | - | 714 |

**23. திண்டுக்கல் :**

**சி.ஸ்ரீனிவாசன் (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,43,880 |
| பதிவான வாக்குகள் | - | 6,11,642 |
| செல்லாதவை | - | 18,469 |

| | | | |
|---|---|---|---|
| சி.ஸ்ரீனிவாசன் | அதிமுக | - | 2,76,106 |
| என்.எஸ்.வி.சித்தன் | தமாகா | - | 2,60,907 |
| லதா | எம்.அதிமுக | - | 35,119 |
| சி.சந்தானகிருஷ்ணன் | புத | - | 19,176 |
| ஆர்.பாஸ்கரன் | சுயே | - | 808 |
| எஸ்.காளிமுத்து | சுயே | - | 540 |
| பி.சங்கர் | சுயே | - | 295 |
| கே.பழனிச்சாமி | சுயே | - | 222 |

**24. மதுரை :**

**சுப்பிரமணியன்சுவாமி (ஜனதா) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 13,49,265 |
| பதிவான வாக்குகள் | - | 6,76,204 |
| செல்லாதவை | - | 18,553 |

| | | | |
|---|---|---|---|
| சுப்பிரமணியன்சுவாமி | ஜனதா | - | 2,66,202 |
| ஏ.ஜி.எஸ்.ராம்பாபு | தமாகா | - | 2,45,305 |
| பி.மோகன் | இ.கம்யூ(மா) | - | 1,10,862 |
| டி.பாண்டியன் | இதேகா | - | 17,507 |
| திருமதி ரஜினி | சுயே | - | 5,485 |
| எஸ்.ராமசந்திரன் | சுயே | - | 4,977 |
| ஆர்.பழனிச்சாமி | சுயே | - | 4,764 |
| ஆர்.வி.சேஷாச்சாரி | ஏஜேபிபி | - | 967 |
| கே.ஆர்.சௌந்தர பாண்டியன் | சுயே | - | 663 |
| எஸ்.பி.தளபதி பாலு | சுயே | - | 498 |
| டி. தனசேகர் | டிஎல்ஜே | - | 421 |

**25.பெரியகுளம் :**

**ஆர்.முத்தையா (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,79,256 |
| பதிவான வாக்குகள் | - | 6,16,663 |
| செல்லாதவை | - | 14,422 |

| | | | |
|---|---|---|---|
| ஆர்.முத்தையா | அதிமுக | - | 3,19,594 |
| ஆர்.காந்திமதி | திமுக | - | 2,48,931 |
| சி.மூக்கையா | புத | - | 20,217 |
| பி.வி.கே. தேவேந்திரன் | சுயே | - | 5,549 |
| எம்.வீரபிரகாஷ் | இதேகா | - | 4,198 |
| பி.முருகன் | சுயே | - | 1,231 |
| கே.பழனிச்சாமி | சுயே | - | 1,130 |
| எஸ்.முருகராஜ் | சுயே | - | 469 |
| கே.இளமுருகன் | சுயே | - | 252 |
| ஏ.காமாட்சி | சுயே | - | 223 |
| வி.முருகன் | சுயே | - | 200 |
| ஏ.மூவேந்தன் | சுயே | - | 147 |
| ஆர்.வீரசாமி | சுயே | - | 100 |

**26.கரூர் : எம்.தம்பிதுரை (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,30,361 |
| பதிவான வாக்குகள் | - | 6,75,172 |
| செல்லாதவை | - | 25,292 |

| | | | |
|---|---|---|---|
| எம்.தம்பிதுரை | அதிமுக | - | 3,27,480 |
| கே.நாட்ராயன் | தமாகா | - | 2,83,807 |
| கே.பி.சண்முக சுந்தரம் | இதேகா | - | 30,157 |
| எஸ்.காமராஜ் | புத | - | 5,449 |
| ஆர்.எம்.ராமசாமி | சுயே | - | 522 |
| பி.கண்ணன் | சுயே | - | 484 |
| பி.சுந்தரராஜ் | சுயே | - | 474 |
| வி.மாரிமுத்து | ராஜத | - | 411 |
| பி.முருகேசன் | சுயே | - | 403 |
| வி.மனோகர் | சுயே | - | 320 |
| எஸ்.செல்வராஜ் | சுயே | - | 206 |
| கே.அசோகன் | சுயே | - | 167 |

**27.திருச்சிராப்பள்ளி :**

**ரங்கராஜன் குமாரமங்கலம் (பா.ஜ.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,78,260 |
| பதிவான வாக்குகள் | - | 6,47,499 |
| செல்லாதவை | - | 16,694 |

| | | | |
|---|---|---|---|
| ரங்கராஜன் குமாரமங்கலம் | பாஜக | - | 3,05,233 |
| எல்.அடைக்கலராஜ் | தமாகா | - | 2,93,778 |
| சுபா சோமு | இதேகா | - | 23,747 |
| கே.சச்சிதானந்தம் | புத | - | 4,979 |
| எம்.கலீல் | சுயே | - | 1,133 |
| அழகிய மணவாளன் | சுயே | - | 749 |
| எஸ்.சண்முகசுந்தரம் | ராஜத | - | 612 |
| ஜி.ஆ.சி.முதீன் | சுயே | - | 373 |
| எஸ்.ஆர்.ராமு | சுயே | - | 201 |

**28.பெரம்பலூர் (தனி) :**

**பி.ராஜரெத்தினம் (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,25,125 |
| பதிவான வாக்குகள் | - | 6,61,506 |
| செல்லாதவை | - | 22,306 |



| | | | |
|---|---|---|---|
| பி.ராஜரெத்தினம் | அதிமுக | - | 3,41,118 |
| ஏ.ராஜா | திமுக | - | 2,80,682 |
| பி.வி.சுப்பிரமணியன் | இதேகா | - | 16,579 |
| செல்வி எம்.செல்வாம்பாள் | ராஜத | - | 821 |

### 29. மயிலாடுதுறை :

**கே.கிருஷ்ணமூர்த்தி (த.மா.கா) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 9,90,364 |
| பதிவான வாக்குகள் | - | 6,43,835 |
| செல்லாதவை | - | 17,565 |

| | | | |
|---|---|---|---|
| கே.கிருஷ்ணமூர்த்தி | தமாகா | - | 2,86,098 |
| பிடி.அருள்மொழி | பாமக | - | 2,43,642 |
| மணிசங்கரஐயர் | சுயே | - | 72,911 |
| ஆர்.திருநாவுக்கரசு | இதேகா | - | 15,265 |
| டாக்டர் பாலு | புத | - | 2,189 |
| கே.பாண்டியன் | ராஜத | - | 2,120 |
| எஸ்.பாலசுந்தரம் | இ.கம்(மார்க் லெ) | - | 1,965 |
| ஏ.தயாளன் | பசக | - | 1,528 |
| டாக்டர் ஏ.ஷேக் தாவுத் | சுயே | - | 552 |

### 30. நாகப்பட்டினம் (தனி) :

**எம்.செல்வராசு (இந்திய கம்யூ.) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,21,037 |
| பதிவான வாக்குகள் | - | 6,61,129 |
| செல்லாதவை | - | 22,063 |

| | | | |
|---|---|---|---|
| எம்.செல்வராசு | இந்திய கம்யூ. | - | 3,75,589 |
| டாக்டர் கே.கோபால் | அதிமுக | - | 2,44,286 |
| எம்.தியாகராஜன் | இதேகா | - | 15,837 |
| ஜி.ஜீவானந்தம் | புத | - | 3,354 |

### 31. தஞ்சாவூர் :

**எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் (தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,13,609 |
| பதிவான வாக்குகள் | - | 6,45,683 |
| செல்லாதவை | - | 19,603 |

| | | | |
|---|---|---|---|
| எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் | திமுக | - | 3,24,344 |
| எல்.கணேசன் | மதிமுக | - | 2,76,140 |
| மதியழகன் | இதேகா | - | 23,109 |
| திருமதி எஸ்.உமா | சுயே | - | 1,296 |
| கே.சோழமன்னார் கனகராஜா | சுயே | - | 1,191 |

### 32.புதுக்கோட்டை :

**ராஜா பரமசிவம் (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 11,84,609 |
| பதிவான வாக்குகள் | - | 7,91,405 |
| செல்லாதவை | - | 18,022 |

| | | | |
|---|---|---|---|
| ராஜா பரமசிவம் | அதிமுக | - | 2,88,072 |
| பி.என்.சிவா | திமுக | - | 2,57,552 |
| எஸ்.திருநாவுக்கரசு | எம்அதிமுக | - | 2,26,416 |



| | | | |
|---|---|---|---|
| எம்.ஆர்.சொக்கலிங்கம் | சுயே | - | 895 |
| சி.வேலப்பன் | சுயே | - | 448 |

### 33. சிவகங்கை : பி.சிதம்பரம் (த.மா.கா) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,76,206 |
| பதிவான வாக்குகள் | - | 6,15,492 |
| செல்லாதவை | - | 21,456 |


| | | | |
|---|---|---|---|
| பி.சிதம்பரம் | தமாகா | - | 3,03,854 |
| கே.காளிமுத்து | அதிமுக | - | 2,44,713 |
| எம்.கௌரிசங்கரன் | இதேகா | - | 34,114 |
| திருமதி சாந்தி உடையப்பன் | சுயே | - | 6,847 |
| இ.நல்லசாமி | ராஜத | - | 3,839 |
| பி.குணசேகரன் | சுயே | - | 389 |
| ஜி.அண்ணாதுரை | சுயே | - | 280 |

### 34. ராமநாதபுரம் :

**வி.சத்தியமூர்த்தி (அ.தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,78,503 |
| பதிவான வாக்குகள் | - | 6,13,150 |
| செல்லாதவை | - | 22,328 |

| | | | |
|---|---|---|---|
| வி.சத்தியமூர்த்தி | அதிமுக | - | 2,58,978 |
| எஸ்.பி.உடையப்பன் | தமாகா | - | 2,34,886 |
| டாக்டர்(திருமதி)கே.நசீர்பர்வீன் | புத | - | 53,542 |
| வி.ராஜேஸ்வரன் | இதேகா | - | 24,942 |
| ஆர்.கார்த்திகேயன் | சவாக | - | 17,569 |
| ஆர்.முத்து கணபதி | சுயே | - | 905 |



## 35.சிவகாசி : வைகோ (ம.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 12,03,627 |
| பதிவான வாக்குகள் | - | 7,81,757 |
| செல்லாதவை | - | 16,840 |

| | | | |
|---|---|---|---|
| வைகோ | மதிமுக | - | 3,87,694 |
| வி.அழகிரிசாமி | இந்திய கம்யூ. | | 2,52,771 |
| எஸ்.சத்தியமூர்த்தி | புத | - | 1,06,726 |
| கே.ராஜேந்திரன் | இதேகா | - | 9,745 |
| கே.மாரியப்பன் | சுயே | - | 1,922 |
| சி.பொன்னுசாமி | சுயே | - | 1,756 |
| எம்.மன்மதன் | சுயே | - | 1,021 |
| பி.எல்.டி.தியாகராஜன் (எ) யோககண்ணன் | சுயே | - | 793 |
| எம்.குருசாமி | சுயே | - | 639 |
| ஏ.ராஜசேகர் | ராஜத | - | 627 |
| எஸ்.வி.ரெங்கநாயகம் | சுயே | - | 583 |
| வி.கண்ணன் | சுயே | - | 369 |
| ஆர்.பி.ராமசாமி | சுயே | - | 271 |

## 36. திருநெல்வேலி :

### ஆர்.ஜனார்தனன் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,75,467 |
| பதிவான வாக்குகள் | - | 6,09,616 |
| செல்லாதவை | - | 11,602 |

| | | | |
|---|---|---|---|
| ஆர்.ஜனார்தனன் | அதிமுக | - | 2,47,823 |
| ஆர்.சரத்குமார் | திமுக | - | 2,40,919 |
| டாக்டர் ஏ.சேவியர் செல்வ சுரேஷ் | புத | - | 86,419 |
| ஜி.ஆர்.எட்மண்ட் | எம்அதிமுக | - | 16,789 |
| கிருஷ்ணகாந்தன் யாதவ் | சுயே | - | 3,795 |
| பி.பாஸ்கர் | சுயே | - | 1,100 |
| கே.நகைமுகன் | ராஜத | - | 821 |
| எஸ்.வேல்முருகன் | சுயே | - | 348 |

## 37. தென்காசி (தனி) :

### எஸ்.முருகேசன் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,14,494 |
| பதிவான வாக்குகள் | - | 6,62,154 |
| செல்லாதவை | - | 16,663 |

| | | | |
|---|---|---|---|
| எஸ்.முருகேசன் | அதிமுக | - | 2,70,053 |
| எம்.அருணாசலம் | தமாகா | - | 1,72,736 |
| டாக்டர் கே.கிருஷ்ணசாமி | புத | - | 1,23,592 |
| வி.செல்வராஜ் | இதேகா | - | 77,285 |
| கே.லக்ஷ்மணன் | சுயே | - | 1,059 |
| டி.பாலமுருகன் | சுயே | - | 716 |

## 38. திருச்செந்தூர் :

### ஆர்.ராமராஜன் (அ.தி.மு.க) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,14,366 |
| பதிவான வாக்குகள் | - | 5,46,862 |
| செல்லாதவை | - | 11,225 |

| | | | |
|---|---|---|---|
| ஆர்.ராமராஜன் | அதிமுக | - | 2,64,290 |
| ஆர்.தனுஷ்கோடி ஆதித்தன் | தமாகா | - | 2,17,435 |
| குமரி அனந்தன் | இதேகா | - | 38,291 |
| ஏ.பக்கிரிராஜ் சதய் | சுயே | - | 11,408 |
| காலந்தி பி.சந்திரசேகரன் | பசக | - | 3,166 |
| என்.இராஜகோபாலன் | சுயே | - | 692 |
| எஸ்.தேவதாசன் ராஜா | சுயே | - | 355 |

## 39. நாகர்கோவில் :

### என்.டென்னிஸ் (த.மா.கா) வெற்றி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 10,28,393 |
| பதிவான வாக்குகள் | - | 5,99,670 |
| செல்லாதவை | - | 6,494 |

| | | | |
|---|---|---|---|
| என்.டென்னிஸ் | தமாகா | - | 2,96,611 |
| பி.ராதாகிருஷ்ணன் | பாஜக | - | 2,67,426 |

## 1998 பொதுத்தேர்தல் - பங்கேற்ற கட்சிகள் பெயர் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திமுக | - | திராவிட முன்னேற்றக் கழகம் |
| 2. | தமாகா | - | தமிழ் மாநிலக் காங்கிரஸ் |
| 3. | அதிமுக | - | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| 4. | இகம்யூ | - | இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி |
| 5. | பாமக | - | பாட்டாளி மக்கள் கட்சி |
| 6. | இதேகா | - | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 7. | மதிமுக | - | மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் |
| 8. | பாஜக | - | பாரதிய ஜனதா கட்சி |
| 9. | ஜத | - | ஜனதா தளம் |
| 10. | இகம்யூ(மா) | - | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) |
| 11. | இகம்யூ(மாலெ) | - | இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) |
| 12. | அதமுக | - | அனைத்திந்திய தமிழக முன்னேற்ற கழகம் |
| 13. | சக | - | சமதா கட்சி |
| 14. | புத | - | புதிய தமிழகம் |
| 15. | பசக | - | பகுஜன் சமாஜ் கட்சி |
| 16. | ராஜத | - | ராஜ்ய ஜனதா தளம் |
| 17. | சிசேக | - | சிவசேனா கட்சி |
| 18. | சவாக | - | சமாஜ்வாடி கட்சி |

| | | | |
|---|---|---|---|
| பி.எஸ்.ஸ்டெயின்லாஸ் | இதேகா | - | 27,821 |
| ஏ.அய்யப்பன் | சுயே | - | 904 |
| யூ.நாகூர் மீரான் பீர் முகமது | சுயே | - | 287 |
| பி.ஜோசப் | சுயே | - | 127 |

### தமிழ்நாடு - சட்டப்பேரவை இடைத்தேர்தல் 1998

**126. குன்னூர் (தனி) : எம்.ரங்கநாதன் (தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| **மொத்த வாக்காளர்** | - | **1,69,753** |
| **பதிவான வாக்குகள்** | - | **99,268** |
| **செல்லாதவை** | - | **5,140** |

| | | | |
|---|---|---|---|
| எம்.ரங்கநாதன் | திமுக | - | 47,850 |
| எஸ்.கருப்புசாமி | அதிமுக | - | 37,945 |
| பி.ஆறுமுகம் | இதேகா | - | 7,189 |
| ஜி.சித்தன் (எ) குருசாமி | அதமுக | - | 1,144 |

**204. அருப்புக்கோட்டை :**

**தங்கம் தென்னரசு (தி.மு.க) வெற்றி**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | - | 1,67,272 |
| பதிவான வாக்குகள் | - | 1,10,183 |
| செல்லாதவை | - | 7,269 |

| | | | |
|---|---|---|---|
| தங்கம் தென்னரசு | திமுக | - | 40,223 |
| வி.எஸ்.பஞ்சவர்ணம் | அதிமுக | - | 38,272 |
| பி.டி.மாணிக்கம் | புத | - | 12,484 |
| கே.பழனிசாமி | சுயே | - | 9,525 |
| கே.சந்திரன் | இதேகா | - | 1,329 |
| ஏ.சமயன் | சுயே | - | 386 |
| டாக்டர் கே.பால்மராஜன் | சுயே | - | 262 |
| டி.கே.கருத்தபாண்டியன் | சுயே | - | 219 |
| எம்.மலைச்சாமி | சுயே | - | 99 |
| எம்.திருநாவுக்கரசு | சுயே | - | 64 |
| இ.பூமிநாதன் | சுயே | - | 51 |



# நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் வாடும் 72 கிராமங்களுக்குத் தாமிரபரணி தண்ணீர் !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

சங்கரன்கோவில் - ஆலங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே சங்கரன்கோவில் நகராட்சி, ஆலங்குளம் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம், நீலிதநல்லூர் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் பல கிராமங் களுக்குத் தாமிரபரணி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது; ஆனால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் சில கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. விடப்பட்ட கிராமங்களுக்குப் புதிதாகத் தாமிரபரணி தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்தில் ஆறு மாதங்களுக்கு முன்பே விண்ணப்பித்திருந்தார்.

அதன் அடிப்படையில், சேந்தமங்கலம் தாமிரபரணி குடிநீர்த் திட்டம் தயாரிக்கப் பட்டது. அந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.6 கோடியே 69 இலட்சங்கள் ஆகும். இதனைப் பராமரிக்க ஒவ்வொரு ஆண்டும் ஆகும் செலவு ரூ.10 இலட்சத்து 38 ஆயிரம் ஆகும். இதற்கான உத்தரவை அரசு (4.3.1998) அன்று பிறப்பித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், புதிதாகத் தாமிரபரணியில் ஒரு கிணறு தோண்டப் படுகிறது. நீலிதநல்லூர் ஒன்றியம், ஆலங்குளம் ஒன்றியம், மானூர் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் விடப்பட்ட 72 கிராமங்களுக்குத் தாமிரபரணி தண்ணீர் வழங்கிட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

மேலும், கீழப்பாவூர் ஒன்றியத்தி லுள்ள ஆண்டிப்பட்டி ஊராட்சி, பூலான் குளம் ஊராட்சி, பெத்தநாடார்பட்டி ஊராட்சி ஆகியவற்றிலுள்ள கிராமங்களும் இந்தத் திட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கான வேலை மிக விரைவில் துவக்கப்படும். இதனை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார். ●

# வெள்ளரிப் பூண!

**-சு.சமுத்திரம்**

“சோசியம் பாக்கலியோ... சோசியம்...”

கமர்க்கட்டு, வேர்க்கடலை, வெள்ளரிக்காய் வகையறாக்களை விற்பது போலத்தான், மாரியம்மாவின் குரல் ஒலித்தது. போதாக்குறைக்கு இந்த நொறுக்குத் தீனிகளைச் சுமப்பது போன்ற ஒரு சணல் பை, அவளது இடதுகரத்தில் பிடிபட்டிருந்தது. வெறும் பை தான்...ஆனாலும் சுமக்க முடியாததுபோல் அவள் பிடித்த தோரனை அப்படி. சோசியத்தை விற்று அரிசி, பருப்பு, காய்கறிகளை வாங்கிப் போவதற்காக அந்தப் பையைக் கொண்டு வந்திருக்கிறாள்.

இந்தப் பையை ஒரு கையிலும், ‘சக்கம்மா பிரம்பை’ இன்னொரு கையிலும் பிடித்தபடி, மாரியம்மா அந்தக் கடற்கரைப் பரப்பைத் தாண்டினாள். கடல் மண்ணுக்கு வரப்பைக் கட்டியதைப் போன்ற இருக்கைச் சுவரைக் கடந்து, அதற்கும் தார்ச்சாலைக்கும் இடையேயுள்ள பிளாட்பாரத்தில் சாய்வாக நின்றபடி வாகனக்காரர்களையும், இருக்கைச் சுவரில் இருந்தவர்களையும் நோட்டமிட்டாள். வேகவேகமாக நடக்கப் போனாள். ஆனாலும் உடல், மனதிற்கு ஒத்துழைக்க மறுத்து, மூச்சு முட்டலாய் அல்லாடியது. கால்கள் தாறுமாறாக நின்றன. இந்தக் கடற்கரையின் உள்வளாகத்தை மும்முறை சுற்றி வந்துவிட்டாள். இவளது அம்பது வயதிற்கு இது அதிகம்தான். குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றி கும்பல், கும்பலாக இருந்தவர்களுக்கு முன்னாலும், ‘ஒருடல் ஈருயிராய்’ பின்னிப் பிணைந்தவர்களின் பின்னாலும் நின்றதில் கால்கள் வலி கொடுத்தன...கண்கள் சொருகின... ஆனால் அவள் சோசியத்திற்கு உரியவர்கள் அகப்படவில்லை. கடலோர ஈரமண்ணில் உட்கார்ந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும் குறுந்தாடி இளைஞர்கள், வாழ்ந்த வாழ்க்கையை உருவகப்படுத்தி, அதை எதிரே முன்னிறுத்தி, அதைத் தீட்டித் தீர்ப்பதுபோல் தனக்குந்தானே பேசிக்கொள்ளும் நடுத்தரங்கள், கைக்கடிகாரத்தில் ஒரு கண்ணும், பின்பக்கம் மறு கண்ணும் போடும் இளம் பெண்கள் - ஆகிய அத்தனை பேரும், ஏனோ சொல்லிவைத்தது போல் மாரியம்மாவை ஏறிட்டும் பார்க்கவில்லை... இதனால்தான் சாலைப் பக்கம் வந்துவிட்டாள்.. நடக்க ரொம்பவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது... இருந்தாலும் நடந்துதான் ஆக வேண்டிய நிர்ப்பந்த நிலை...

மாரியம்மாள், உடலும் நோவாமல், மனதும் தளராமல், இந்த இரண்டுக்கும் சமரசம் செய்வதுபோல் நடந்தாள். முக்கால் கிலோ மீட்டர் தூரமுள்ள நீள, நெடிய, இருக்கைச் சுவற்றில் இருந்த சின்னஞ்சிறிய விடலிகளைக் குறிவைத்தாள். இவர்களில் பலர் ஆணும் - பெண்ணுமாய் ‘வாடா-போடா’ என்று பேசியபடியே சினிமா ஸ்டைலில் இடையையோ, உடையையோ யதார்த்தமாய் பற்றியிருப்பவர்கள். இவர்கள், ‘யார்வேணுமுன்னாலும் பார்க்கலாம்’ என்பது மாதிரி காதலில் ‘கன்பார்ம்’ ஆனவர்கள்... அல்லது காதலாவது, கத்திரிக்காயாவது என்ற மனோபாவத்தில், ஒருவருக்கொருவர் ‘கம்பெனி’ கொடுப்பவர்கள்; இந்த இரு சாராருமே சோசியத்தைச் சீண்டாதவர்கள்.

**இவளது சகாக்கள் சக்கம்மா பிரம்புகளையும் மூலையில் போட்டு விட்டு, மண்வெட்டி, கடப்பாறைகளை கைகளில் எடுத்தபோதுகூட, இந்தக் கைக்கோல் இவளைக் கைவிடவில்லை... . . .**

மாரியம்மா, கிட்டத்தட்ட ஒட ஆரம்பித்தாள். ஒரு மோட்டார் பைக்கிலிருந்து ‘சின்னஞ்சிறிசுகள்’ இறங்கின... அவர்கள் முன்னால் போய் நின்றாள். “சோசியம் பார்க்கிறீகளா?” என்றாள். அந்தப் பெண், ஆளைவிடு என்பதுமாதிரி அவளைப்பார்த்து, பாசாங்குத்தனமாய்க் கும்பிடு போட்டாள்... அவளைக் கூட்டிவந்த, அல்லது அவளால் கொண்டுவரப்பட்ட நவநாகரீக இளைஞன், மாரியம்மாவை அருவெறுப்பாய்ப் பார்த்தபடியே, கைகளைத் துடுப்புப்போல் அங்குமிங்குமாய் ஆட்டி ‘கோ... கோ’ என்று ஆங்கிலத்தில் விரட்டினான்.

மாரியம்மாவிற்கு, என்னவோ போலிருந்தது. கடற்கரை வேலிச்சுவரில் பொத்தென்று உட்கார்ந்தாள். பக்கத்தில் இருந்த பளபளப்பு மனிதர், எழப்போனபோது இவளே எழுந்து ஓர் லுங்கிக்காரர் பக்கம் போய் உட்கார்ந்தாள். கால்களை மடித்துப் போட்டு செருப்பு இல்லாத பாதங்களில் கண்ணாடித் துகள்கள் போல் குத்திய கடல் மண் துகள்களைத் தட்டிவிட்டாள். சிறுவர்களின் கால்பந்து,

கைப்பந்தாட்டங்களால், உடம்புக்குள் படிந்த மண் துகள்களின் அரிப்பைத் தாங்க முடியாமல், முந்தானையைத் தூக்கி, தலைக்குமேல் நிறுத்தி, அந்த 'மறைப்பில்' சட்டை மாதிரியான ஜாக்கெட்டைத் தளர்த்தி விட்டாள்... தாரில் நெய்தது போன்ற முரட்டுச் சேலை... கொண்டையற்ற தலை... பாதி கழுத்தை மறைத்து உச்சியில் சிலிர்த்த முடி... அந்தக்காலத்து போலீஸ் சிகப்புத் தொப்பியில் கருப்பு வடிவம் மாதிரியான மகுடத் தலை... காதுகளில் வெள்ளைச் சுண்ணாம்பு தடவியது போன்ற கம்மல்கள்...

மாரியம்மாவிற்கு, இன்னும் எழுந்திருக்கத் தெம்பில்லை.. தானும் ஒரு வகையில் பிச்சைக்காரிதானோ என்ற எண்ணம், மனதை வருத்தியது. கையில் உள்ள சக்கம்மா பிரம்பை வெறுமையாகப் பார்த்தாள்... ஒரு கோலாட்டுக் குச்சியின் பாதிக் கனபரிமாணம் கொண்ட உருண்ட கோல்... இரு புறமும் வெள்ளிப் பூண்களால் கோல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலம் கொடுத்த மூப்பைக் காட்டும் சிராய்ப்புகள்...

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்து சக்கம்மா கோவிலில், ஈரப் புடவையோடும், இடுப்பில் வேப்பிலைக் கொத்துக்களோடும், கற்பூர, அக்னி சாட்சியாக, தாத்தா ஒப்படைத்த கோல்... இந்தக் கோல்தான், அவளைக் கோவில் திருவிழாக்களுக்கும், வாரச் சந்தைகளுக்கும், கோர்ட்டு வளாகங்களுக்கும் வெற்றிகரமாகக் கூட்டிச் சென்றது. அறுவடை காலத்தில் வயல் வரப்புகளில், அவலும், வெல்லமும், உளுந்தும், நெல்லுக்குப் பண்டம் மாற்றும் செய்யும் கூடைக்காரிகளோடு போட்டியிட்டு அவர்களுக்குக் கிடைத்ததைவிட ஒருபடி நெல்லை அதிகமாக வாங்கிக் கொடுத்த பிரம்பு; வாலிப வனப்பில் இவள் சுடர்விட்டபோதும், வம்பர்களைக்கூட பயபக்தியோடு பார்க்க வைத்த சோசியக் கோல். வீடியோ-ஆடியோ திடீர்ப் படையெடுப்பில் கிராமங்களில் மயான புத்திரன் உள்ளிட்ட இருபத்தொரு தேவதைகளும் காணாமல் போனபோது, இவளது சகாக்கள் சக்கம்மா பிரம்புகளையும் மூலையில் போட்டுவிட்டு, மண்வெட்டி, கடப்பாறைகளைக் கைகளில் எடுத்தபோதுகூட, இந்தக் கைக்கோல் இவளைக் கைவிடவில்லை... இவளைச் சென்னைக்கு அழைத்துவந்து ஒரு குடிசையைச் சொந்தமாகப் போடவைத்தது. இறப்புச் சல்லடையில் எஞ்சி நிற்கும் இரண்டு பெண்களையும் ஒரு பையனையும் கௌரவமாக வாழ வைத்த பிரம்புதான்...

ஆனாலும் கடந்த ஒரு மாதமாய் இதுக்கு என்னமோ ஆயிடுச்சு... இல்ல ஜனங்களுக்கு என்னவோ ஆயிடுச்சு...

மாரியம்மாள் எழுந்தாள்... கண்காட்டும் தொலைவில் ஒரு மோட்டார் பைக்கில் - மேலும், கீழுமாய் வியாபித்திருந்த இளவட்டங்களிடம் போய், பழக்கப்பட்ட அஸ்தரத்தை பிரயோகப் படுத்தலாமா என்று தன்னை மீறி நினைத்தாள்... அந்த அஸ்திரம் பணத்தைக் கொண்டுவரும். கூடவே தொழில் கௌரவத்தையும் குலைத்து விடும்.

போன வாரம், மெரினா கடற்கரையில் தனக்குக் கிடைத்த கசப்பான அனுபவத்தை, பத்து படித்துக் கொண்டிருக்கும் தன் மகன் மருதுவிடம் சொன்னபோது

"எம்மா நீ சோசியம்... கீசியம்... பார்த்துக் கிழிச்சது போதும்... நான் கடலை வித்து உன்னைக் காப்பாத்துறேன்" என்றான். ஆனாலும், இவள்தான் 'அடி செருப்பால; ஒப்பனமாதிரி முட்டாளா இருக்கப் போறியா?' என்று அடக்கினாள். ஆனால் மறுவாரம், இவள் உடம்புக்கு முடியாமல் படுத்தபோது, மகன் மருது, கடலைப் பெட்டியோடு வந்து ஆசீர்வாதம் கேட்டான். இவளால் அழத்தான் முடிந்தது. அனுமதி கொடுக்காமல் இருக்க



முடியவில்லை. சும்மா சொல்லப்படாது. மருது, தினமும் இருபது ரூபாய் கொண்டுவந்தான்.. வயது வந்த இரு மகள்களும் அரசு குடியிருப்பு வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்தும், துணி துவைத்தும், பழைய சோற்றோடு வந்தார்கள்.. இவள் பழைய சகவாசத்தில் ஒரு நாள் இந்த மந்திரக் கோலை எடுத்தபோது, உழைப்பாளி மகன் பார்த்த பார்வையில் இந்தக் கோல் தானாய் விழுந்து தரைதட்டியது.

மாரியம்மாள், நினைவுகளைக் கலைத்தாள்; எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். இரவு எட்டிப் பார்த்தது. தொலைவில் உள்ள கடலின் இமைபோல் அதன் மேல்பக்கம் ஆகாயம் கருத்திருந்தது. அதற்கு மேல் கடலவனின் நெற்றி போன்ற செவ்வகச் செவ்வானம், நட்சத்திரங்களை மினிக்கி மினிக்கிக் காட்டியது... இவற்றிற்கு மேலே பறப்பது போன்ற பிரமையுடன் ஒரு விமானம் இரட்டை நட்சத்திரக் கண்களை மூடி மூடித் திறந்தபடி பறந்தோடியது.

சோசியக்காரி யோசித்தாள். வீட்டுக்குத் திரும்பலாமா? எப்படி

முடியும்? கைநிறையப் பணம் கொண்டுவந்த மருது முந்தாநாள் முதுகு வீங்கி வந்தான். இவனைக் கட்டிப் பிடித்துக் கூப்பாடு போட்டான். சுண்டல், வேர்க்கடலை முதலாளி, இவன் பாதி சரக்கை விற்காமல் வந்தான் என்று தலையில் ஓங்கி குட்டியிருக்கிறான். இந்த மாதிரி சமயங்களில் மற்ற பயல்கள் பல்லை இளிப்பதுபோல் இளிக்காமல், இவன் பல்லைக் கடித்து, முதலாளியை முறைத்துப் பார்த்திருக்கிறான்... முதலாளி முன்னெச்சரிக்கைக்காரன், இவனைப் போல், மற்ற பையன்களும் முறைத்துவிடக் கூடாதே என்ற பயத்தில் பயங்கரவாதியாகி, மருதுவை இரும்பு அகப்பையாலேயே செம சாத்து சாத்திவிட்டான். அவனைத் தேடிப்பிடித்து இவள் நியாயம் கேட்டால், 'உன்னால ஆனதைப் பார்' என்கிறான். இப்போதெல்லாம் கார், பங்களா, தொழிற்சாலை, தோட்டம், துரவு வைத்திருப்பவங்க மட்டும் முதலாளி இல்லை... நாலுபேரைக் கீழே வேலைக்கு வைத்திருப்பவன் எல்லாம் முதலாளிங்க. ஒரே அடாவடிதான். இந்த அடாவடியில் பிள்ளை படுத்த படுக்கையாகக் கிடக்கான். அடியின் வலியைவிட அம்மாவிடம் சவால் விட்டானே 'ஆனதைப்பார்' என்று அந்தப் பயலைப் பரீட்சித்துப் பார்க்க முடியலயே என்ற இயலாமை.. இதுவும் போதாதென்று, மகள்கள் வேலைபார்த்த, குடியிருப்பு முதலாளிகள், வெளியில் விடுமுறையில் போய்விட்டார்கள். பொண்ணுகளை விவரம் தெரியாத வீடுகளுக்கு அனுப்பமுடியாது. சின்னவளை, ஒரு தடவை அப்படி அனுப்பி பட்டபாடு போதும். இப்போதைக்குப் பழைய சோறும், ஊசிப்போன சாம்பாரும் கிடைக்காது. பிள்ளைகள் குலைப்பட்டினியாய்க் காத்திருப்பார்கள்... பேசாமல் இந்த வெள்ளிப் பூணை மார்வாடியிடம் அடகு வைக்கலாமா?... அதவிட நம்மயே அடகுவைக்கலாம்... 'எம்மாடி' இந்த நினைப்பே வரக்கூடாது.

மாரியம்மாவுக்கு, நினைவுகள் நிகழ்வுகளை ஏற்படுத்தத் தூண்டின. யானை பலத்தோடு நடந்தாள். மூன்றாவது சுற்றாக, அந்தக் கடல் மண் பரப்பைக் குறுக்கும் நெடுக்குமாய்க் கால்களால் உழுதாள். மணல் திட்டில் உள்ள 'உங்கள் நண்பன்' கூண்டிற்குக் கும்பிடு போட்டு, அங்கிருந்து தாவி, குடைராட்டினம் பக்கம் கூவி, விளையாட்டு கிளிக்கூண்டிற்குப் பக்கம் தவமிருந்து, பலூன்களைச் சுடும் துப்பாக்கி "வீரர்கள்" பக்கம், அவர்களை வியப்பது போல் நின்று, பிறகு நடந்து நடந்து, படகுகளின் பக்கம் பாய்ந்து, மீண்டும்

> **இந்தப்பணம் மனசுல தங்காது. மனசுல தங்காத எதுவும் வயித்துல தங்காது. இது வெள்ளிப்பூண் போட்ட பிரம்பு. என்னைக் கவனிச்சுக்கும்.**

கடற்பக்கமிருந்து கரைப்பக்கம் நோக்கி பெருமூச்சோடு நடந்தாள். குறி சொல்வதற்காக நடந்தவள், இப்போது குறிக்கோளை மறந்து எதையோ ஒன்றை உதறப் போவது போல் திமிறித் திமிறி நடந்தாள். கிட்டத்தட்ட ஒரு உருவத்தை மிதிக்கப் போய்விட்டாள். எப்படியோ, கால்களைக் கடல் மண்ணில் நங்கூரம் ஊன்றி அந்த உருவத்தைப் பார்த்துவிட்டாள். அது ஒரு இளம் பெண். அவளோ முன்பக்கம் இரு கரங்களாலும், மண்ணைத் தோண்டித் தோண்டி அங்குமிங்குமாய் வீசிக் கொண்டிருந்தாள். அவள் பறித்த குழியில் அவள் கண்களைப் போலவே நீர்க் கசிவு...

மாரியம்மாவுக்குப் புரிந்துவிட்டது. இது காதல் தோல்வி... அல்லது கட்டியவன் கொடுமை... கழுத்தில் மஞ்சள் கயிறு இல்லை... அலங்கமலங்கப் பார்க்கும் கண்களைப் பார்த்தால் இது காதல் தோல்விதான்...

மாரியம்மா, அவளது 'மண்வாசனை' கவனத்தைத் திருப்புவதற்காக உரத்துக் குரலிட்டாள்.

"சோசியம் பாரு தாயீ... நடந்தது நடக்கிறது நடக்கப்போகிறது... உனக்கு வாற கணவன் நல்லவனா... கெட்டவனா... பொறக்கப் போறது ஆணா.. பெண்ணா... இந்த வருசம் பரீட்சையில் பாஸாயிடுவியா இல்லே பெயிலாயிடுவியா... சொத்து வாங்க யோகம் இருக்கா... இல்லையா... வெளிநாடு செல்ல வாய்ப்பு இருக்கா. இல்லையா... காதல் கல்யாணமா... கட்டாயத் திருமணமா... ஆயுசப்பத்திய சந்தேகமா... கைரேகை எல்லாம் காட்டும் - உன்னைத்தான் தாயி..."

அந்தப் பெண் முதலில் மருண்டு பார்த்தாள்... சல்வார் கமீஷ்காரி... கழுத்தைச் சுற்றிய துப்பட்டா துணி சுடர் விட்டது... காது வளையங்கள் ஒளிவிட்டன... கைக்கடிகாரம் டாலடித்தது. இருபத்திமூன்று வயது தேறலாம்.

"ஒன்னத்தான் தாயீ!"

"எனக்கு எந்த இழவும் வேண்டாம்... வேணுமுன்னா இந்தக் கையை வெட்டிப்போடு..."

"அபசகுனமா பேசாத தாயீ... உனக்கு நல்ல காலம் பொறக்கப் போறதாலதான் "சக்கம்மா தேவி" என்னை இங்கே அனுப்பிவச்சிருக்காள்.."

அந்தப் பெண், மாரியம்மாவைச் சிநேகிதமாய்ப் பார்த்தாள். கண்ணிமை இருட்டிலும் உருட்டிப் பார்த்தால் சின்னஞ்சிறு ஒளிக்கதிர் தென்படுமே, அதுபோன்ற ஒரு மெலிந்த புன்னகை. ஈரக் கைகளைப் பிட்டத்தில் துடைத்துவிட்டு வலது கையை நீட்டினாள்.

"தட்சணை கொடு தாயீ! அப்போதுதான் தாட்சாயிணீ பேசுவாள்..."

"எவ்வளவு?"

"இருபத்தொரு ரூபாய் முப்பது காசு... தாயீ அதுக்கு மேலே உன் இஷ்டம் தாயீ".

அந்தப் பெண் கொடுத்த இருபது ரூபா நோட்டை உற்றுப் பார்த்தும, சில்லறை நாணயங்களை எண்ணாமலும் மாரியம்மாள் தன் சுருக்குப் பைக்குள் போட்டுக்கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டாள். தட்சணையை இரு மடங்காக கூட்டியது வருத்தம்தான்... 'விலாவாரியாகச் சொன்னால் போச்சு...'.

அந்தப் பெண்ணின் உள்ளங்கையில் 'சக்கம்மா பிரம்பை' பட்டும் படாமலும் படர விட்டபடி, மாரியம்மா இசை நயத்தோடு இழுத்து இழுத்துப் பேசினாள்.

"சக்கம்மா தேவியே சடுதியில் வரவேணும்... கோட்டை மாரியம்மா குதூகலமாய் வரவேணும்... மலையாள பகவதி மாறாமல் வரவேணும்... பொய் சொல்லக்கூடாது... மெய் சொல்லவேணும்...


"ஒன்னோட மனசு பொன்னான மனசு - பிறரோட கஷ்டத்தப் பார்த்தால் கண்ணீர் சிந்துவே:, நஷ்டத்தப் பார்த்தால் ஈடு கட்டுவே. ஆனாலும் உன்னால உயர்ந்தவர்கள் இப்போதோ நன்றி மறந்தார்கள்...நம்பிக்கை துரோகிகள்... கலங்காதே! மலங்காதே! நீதான் ஜெமிப்பே... ஒரு மாத காலத்தில் உருண்டோடும் கஷ்டங்கள்... கிரகாதிகளில் விடுபட்டு கீர்த்தி அடைவே..."

மாரியம்மா வழக்கம்போல் பொதுப்படையாகக் குறி சொன்னாலும், அந்தப் பெண்ணுக்கு, அவள் சொன்னது தனக்கு மட்டுமே சொல்வதுபோல் தோன்றியது. மாரியம்மா பேசி முடித்ததும், விளக்கம் கேட்டாள்.

"நம்பிக்கைத் துரோகம்னா?"

"நம்பிக்கைத் துரோகமுன்னா.. நம்பிக்கைத் துரோகம்...காதல் வலையிலே சிக்கினே... அழகன் கண்பட்டு ஆகாயத்துல பறந்தே... தொட்டவன் விட்டான்...துஷ்டன் போல் ஆனான்... ஆனாலும் கோளாறு அவன் பக்கம் இல்ல... திருஷ்டி பட்டதாலே தீயவன் போல் ஆகிவிட்டான்... பரிகாரம் செய்தால் பறந்தோடி வருவான்..."

அந்தப் பெண் கடந்த கால நிகழ்வுகளை நினைவுகளாக்கினாள்.



'அவனுடன் சேர்ந்ததில் மற்றவள்களுக்குப் பொறாமை அதிகம்... முந்திக்கிட்டாளே என்ற கோபம்... அவரு நல்லவரு... இந்தப் பிசாசுங்க கண்பட்டுதான் என்னை மறந்துட்டாரு.. இருங்கடி.. இருங்க.. ஒங்க கண்ணு முன்னாலேயே அவரோடு இணைந்து காட்டுவேன்...'

அந்தப் பெண் பெரு நம்பிக்கையோடு மாரியம்மாளிடம் கேட்டாள்...

"திருஷ்டிப் பரிகாரத்திற்கு எவ்வளவு செலவாகும்?"

"உன் காதல் கதையை ஆதியோட அந்தமாகச் சொல்லு தாயீ... அப்போதான் எப்படிப்பட்ட பரிகாரமுன்னு சொல்ல முடியும்..."

"நானும் ரவியும் உயிருக்குயிராய் பழகினோம்..."

"ஒரு நொடி தாயீ... ரவீன்னா எந்த ரவி... ரவிக்குமாரா... ரவிச்சந்திரனா... ரவீந்திரனா..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது சோசியரம்மா... எல்லோரையும் போல நானும் அவரை ரவின்னுதான் கூப்புடுவேன்... நானும், அவர் தங்கையும் கல்லூரியில் கம்ப்யூட்டர் பாடம் ஒன்றாகப் படித்தோம். அதோட தொடர்ச்சியா ஒரு கம்பெனியில புராஜெக்ட் செஞ்சோம்... ரவி தங்கையைக் கூப்பிடத் தினமும் வருவார்...

"அங்கேயே நில்லு தாயீ... அவனுக்கு, அவள் நிசமான தங்கைதானா? அவன், உன்னைத் தன்னோட வீட்டுக்கு கூட்டிப் போனானா.. எதுக்குக் கேட்டேன்னா, தங்கை என்கிற வார்த்தையோட மகிமை தெரியாம, இப்போ பலர் புறப்பட்டிருக்காக..."

அந்தப் பெண் மாரியம்மாவைத் துணுக்குற்றுப் பார்த்தாள். இது ஒன் வேலை என்பது மாதிரி.. வெட்டு ஒன்று துண்டு இரண்டாய்க் கேட்டாள்.

"அவர் என்னை மறந்தாலும், என்னால அவரை மறக்க முடியாது... எனக்கு அவர் திரும்ப வேணும்... பரிகாரத்திற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை..."

மாரியம்மா, அந்தக் கம்ப்யூட்டர் பெண்ணையே மாறி மாறிப் பார்த்தாள். பிறகு கைகளைப் பின்பக்கமாய் ஊன்றி, உடம்பைச் சரித்தாள். போனமாதம் மெரினா கடற்கரையில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் கண்களை உறுத்த, அவள் இரண்டு கண்களையும் இறுக மூடினாள்...

மெரினா கடற்கரையில் கப்பிச் சாலைப் பக்கம் ஒரு மோட்டார் பைக்கில் நான்கைந்து பேர் மேலும் கீழுமாய்க் கிடந்தார்கள். இவள் அவர்கள் பக்கம் போய் 'சோசியம் பாக்கலியோ' என்றபோது, ஒருவன் கைதட்டிக் கூப்பிட்டான். இவள் கேட்ட பதினொரு ரூபாய்க்குப் பதிலாக இருபது ரூபாயைத் திணித்தான். இவளும் வழக்கம்போல் அந்தக் கைக்காரனைத் துதிபாடிவிட்டு, "இப்போதைய காதல் இடைஞ்சலான காதல்... இது போய் இன்னொரு காதல் வரும்... அதுவே நிற்கும்... நிலைக்கும். "ஆனாலும் திருஷ்டி கழிக்கனும்" என்றாள். உடனே சக பயல்கள் "அடே மச்சி கரெக்டா சொல்லுடா... 'ஆப்' வாங்குடா" என்றார்கள். மோட்டார் பைக்கில் இருந்த அந்தப் பையன் துள்ளிக் குதித்து, ஒக்காபோலா ஆட்டம் ஆடினான். பிறகு "ஆயா ஒன் வாயிலே ஒரு குவார்ட்டர் ஊத்தனும். போன வாரமே அந்த "போரைக்" கழிச்சுக் கட்டிட்டேன். விட்டுட்டேன். இரண்டாவது புனிதக் காதலி எப்போ வருவா ஆயா? என் வருங்காலக் காதலி எப்படி இருப்பா" என்றான். உடனே இன்னொருத்தன் "ஆயா, பொண்ணு மாதிரி அழகா இருப்பாடா... ஆமாம் ஆயா... ஒனக்குஎத்தனை குட்டிங்க..." என்றான். மாரியம்மாள் காசை வீசி எறிந்துவிட்டு, திரும்பி நடந்தாள்.

அப்போது நடந்தது, இப்போதும் வலி கொடுத்தது... இதற்குள் சரிந்து கிடந்த மாரியம்மாவை அந்தப் பெண் உசுப்பினாள். மாரியம்மாள் இருபத்தொரு ரூபாய்க்காக யாசிக்காமல், அதையும் மீறி சிந்தித்தாள்.. 'அந்தப் பயல்கள் மாதிரிதான் இவள் பயலும் இருப்பான். எம் பொன்ன எப்படி நிமிர வச்சனோ... அப்படி இவளையும் நிமிர வைக்கணும்...'

மாரியம்மா பொரிந்து தள்ளினாள். "பெத்த மககிட்டச் சொல்ற மாதிரிதான் சொல்றேன்... கோபப்படாம கேளு தாயீ... நீ படிச்ச பொண்ணு... கை நிறைய சம்பளம் வாங்குறே... இல்ல வாங்கப் போறே... சொந்தக் காலுல நிக்கப் போற பொண்ணு... பெண்டாட்டிக்குத் துரோகம் செஞ்சிட்டு ஆற அமர திரும்பி வார புருசனைக்கூட, ஏத்துக்காதவள்தான் அசல் பொம்பளை... நீ நிசமான பொண்ணுன்னா அந்தப் பயல மனசுல இருந்து வீசி எறி... உன்னை இந்நேரம் வீட்டுக்கும், வாசலுக்குமாய் தேடிக்கிட்டிருக்கிற உங்கம்மா அந்தப் பயலவிட ஒசத்தி... ஒரு வேளை, ஒனக்காக பஸ் ஸ்டாப்புல காத்திருக்கிற அப்பாவும் அண்ணனும், தம்பியும் அவனை விட ஒசத்தி... கல்யாணத்துக்கு முன்னாடியே பீடை கழிஞ்சதேன்னு சந்தோஷப்படு தாயீ... சந்தோஷப்படு. கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதே தாயீ... கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதே தாயீ..."

அந்த கம்ப்யூட்டர் பெண்ணுக்கு மகிழ்ச்சி வராவிட்டாலும், துக்கம் தணிந்தது. அடிக்கடி தடம்புரண்ட இந்த முடிவை உறுதிப்படுத்திக் கொண்டாள்.. சுயவிளக்கம் கொடுத்தாள்...

"நீங்க திருஷ்டி, கிருஷ்டின்னு சொன்னதாலதான் எனக்குப் போன ஆசை, திரும்பிவந்தது. சக்கம்மாவே சொல்றதா நினச்சு..."

"சக்கம்மா எங்கே இருக்காளோ... எப்படி இருக்காளோ யாருக்குத் தெரியும்... கண்டவர் விண்டதில்லை... விண்டவர் கண்டதில்லை...நீயே ஒனக்குச் சக்கம்மா... இந்தா ஒன் ரூபா..."

'வச்சிக்கோங்க சோசியரம்மா."

'இல்லம்மா... இந்தப் பணம் மனசுல தங்காது... மனசுல தங்காத எதுவும் வயித்துல தங்காது... இது வெள்ளிப் பூண் போட்ட பிரம்பு... என்னைக் கவனிச்சுக்கும்... சரி... சரி... எழுந்திரு... ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாய் நடப்போம்..."

அவர்கள் தாயும், சேயும் போல் எழுந்தார்கள்... கடலோரம் போனார்கள்... அலைகள் வழக்கம்போல் ஆர்ப்பரித்தன... ஆனாலும் அவர்களுக்கு இப்போது அது புது முழக்கமாய்க் கேட்டது. ★

## அட்டைப்பட விளக்கம்:

### முதல் பக்க அட்டைப்படம்:

'பாரதரத்னா' விருதுபெற்ற திரு.சி.சுப்பிரமணியம், திருமதி. எம்.எஸ்.சுப்புலட்சுமி, திரு. ஏ.பி.அப்துல் கலாம்.

### கடைசிப்பக்க அட்டைப்படம்:


கலைஞரின் அரசு மகளிர் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளும் சிறப்புமிகு நடவடிக்கைகள் சிலவற்றின் படப்பிடிப்பு.

**மருத்துவம்:**

# சித்த மருத்துவக் குழு

தமிழ்நாடு சித்த மருத்துவத்தின் (முன்னேற்றம் மற்றும் சித்த மருத்துவர்கள் பதிவு) சட்டத்தின் கீழ் முதல் சித்த மருத்துவக் கவுன்சில் அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முன்னாள் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் திரு. லெட்சுமிகாந்தன் பாரதி அவர்களை இந்தக் கவுன்சிலின் தலைவராக நியமித்துள்ளது. கீழ்க்கண்டவர்கள் இந்தக் கவுன்சிலின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மரு. எ. ஆனந்தகுமார், சென்னை
மரு. பிரகாசம், சேலம்
மரு. ஜெபி. கிருஷ்ணமூர்த்தி, குன்றத்தூர்
மரு. ஆர். ராமமூர்த்தி
மரு. கே. நடராஜன், சென்னை
பட்டணம் வைத்தியர் மரு. ஜெபஸ்டீன், நாகர்கோவில்
மரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, தாராபுரம்
மரு. கண்ணன், திண்ணூர், திருச்சி மாவட்டம்
துணைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை
இணை இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை
முதல்வர், அரசினர் மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை
கண்காணிப்பாளர், அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, சென்னை
மேலாளர், தமிழ்நாடு மூலிகைப்பண்ணை மற்றும் மருத்துவக் கழகம், சென்னை



எல்லா சித்த மருத்துவர்களும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ், பதிவு செய்துகொள்ள வேண்டும். ஏற்கெனவே பதிவு பெற்ற சித்த மருத்துவர்களும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் புதிதாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசநோய்

மிகவும் பலவீனமாகிவிட்ட உடலில் எதிர்ப்புச் சக்தி குறைவதற்காகக் காத்திருந்து காசநோய்க் கிருமி தாக்குதலைத் தொடங்குகிறது.

குழந்தைகள், முதியவர்கள், சர்க்கரை நோயாளிகள், ஆஸ்துமாவுக்காக 'ஸ்டீராய்ட்' மருந்துகளைச் சாப்பிடுவோர், வறுமை நிலையில் உள்ளவர்கள் ஆகியோருக்குக் காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அடிக்கடி குழந்தை பிறத்தல், அடிக்கடி கருச்சிதைவு, காலரா, டைபாய்டு ஆகியவை காரணமாக நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. சாதாரண மருந்துகளுக்குக் கட்டுப்படாமல் மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து இருமல், மாலையில் லேசான காய்ச்சல், எடைக்குறைவு, பசியின்மை, உடல் சோர்வு ஆகியவை காசநோயின் அறிகுறிகளாகும். இருமும்போது இரத்தம் வெளியேறினால் அலட்சியமாக இருக்கக்கூடாது

மார்பு எக்ஸ்-ரே, சளிப் பரிசோதனைகள் மூலம் காசநோய் உள்ளதா எனத் தெரிந்துகொள்ள முடியும்.

ஊட்டச்சத்து உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டு, நோய் எதிர்ப்புச் சக்தியைப் பராமரித்தால் காசநோய்க் கிருமிக்கு 'வேலை' இல்லை.

காசநோயால் தாக்கப்படும் பெண்களில் 70 சதவீதத்துக்கு மேற்பட்டோரின் கருத்தரிக்கும் திறன் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

துருக்கியில் நூருதீன் அகா, இஸ்ட், உரால் ஆகியோர் மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

காசநோயால் பாதிக்கப்பட்ட 57 பெண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. அவர்களில் 71.4 சதவீதம் பேருக்கு கர்ப்பப்பை தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. காலம் தவறி மாதவிலக்கு ஏற்படுதல், ஆரம்பக்கட்ட அழற்சி ஆகியவை காணப்பட்டன. இந்தக் கோளாறுதான் இறுதியில் அவர்களின் கருத்தரிக்கும் திறனைப் பாதிக்கிறது.

எனினும், இதைத் தொடக்க நிலையிலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை அளித்தால் அவர்களின் கருவுறும் திறனை மீட்டுவிட முடியும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்.

சுவாச மண்டலத்துக்குள் நுழையும் காசநோய்க் கிருமி, முதலில் நுரையீரலை ஆக்கிரமிக்கிறது. பின்னர் அங்கிருந்து இரத்தம் மூலமாக இனவிருத்தி உறுப்புகளைச் சென்றடைகிறது. கர்ப்பப்பை, அதற்குச் செல்லும் குழாய் உள்ளிட்டவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.


இனவிருத்தி உறுப்புகளில் காசநோய்க் கிருமி பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் பெண்களின் தொகை 12.3 சதவீதமிருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

வளரும் நாடுகளில், 17 லிருந்து 40 வயதுக்கு உட்பட்டோரே இந்நோயால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வயிறு, அடிவயிற்றில் வலி, அளவுக்கு அதிகமான இரத்தப்போக்கு ஆகியவையே இந்நோயின் முக்கிய அறிகுறிகள்.

ஏழை நாடுகளில் பெண்கள், சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியே இருக்கிறார்கள். அவர்களை இந்நோய் தாக்கியதற்கான அறிகுறிகள் தெரியாமல் போகின்றன. அதனால் தொடக்க நிலையிலேயே இந்நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்க முடியாத நிலை உள்ளது என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

- டாக்டர் ஆர். உமா

# பார்வை இழப்பைத் தடுப்பதில் பள்ளி ஆசிரியர்கள் பங்கு



## மு. வீராசாமி

கண் ஒரு நுட்பமான உறுப்பு. அதனால்தானோ என்னவோ, பலர் அதைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. கண்களை முறையாகப் பேணிக் காப்பதுமில்லை!


இன்று நம்நாட்டில் பார்வை யிழப்பும், அது தொடர்பான பார்வைக் குறைவும் மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கின்றன. நம்நாட்டில் 90 இலட்சம் பேர் பார்வையிழந்துள்ளதாகவும், தவிர 40 இலட்சம் பேர் பார்வைக்குறைவினால் துன்பப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து, தன்னலம் போற்றல், கண் பாதுகாப்பு பற்றிய போதிய அறிவில்லாமையும், கண்ணில் ஏற்படும் நோய்கள், காயங்கள் இவற்றை அலட்சியப்படுத்துவதுமே பார்வையிழப்பை அதிகரிக்கச் செய்கின்றன.

### ஆசிரியரின் பங்கு

நம் நாட்டில் 14 வயதுக்குட்பட்ட, பள்ளியில் பயிலும் குழந்தைகளில் 2.5 இலட்சம் பேர் பார்வைக் குறைவினால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாகப் புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கின்றது. தடுக்கக் கூடிய பார்வையிழப்பைத் தடுப்பதில் பள்ளிகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கண்ணின் அமைப்பு பற்றியும், கண்பாதுகாப்பு பற்றியும் போதிப்பதுடன் உரிய நேரத்தில் அவர்களை மருத்துவம் செய்துகொள்ளவும் அறிவுரை கூறலாம்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதால் பிள்ளைகளிடையே பார்வைக் குறைவு தொடர்பான வெளிப்பாடுகளை (Symptoms) ஆசிரியர்களே கவனித்து, குறையுள்ளவர்களை உடனடியாகத் தக்க மருத்துவம் செய்துகொள்ளச் சொல்லி, கண்மருத்துவரிடம் அனுப்பலாம். ஏனெனில், குழந்தைகள் பார்வைக்குறைவு தொடர்பான வெளிப்பாடுகளை அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை. பார்வைக் குறைவு, கண்களுக்குக் களைப்பைத் தருவதுடன், தலைவலி, படிப்பில் போதிய ஆர்வமின்மை, மாறுகண், சரிசெய்ய முடியாத நிரந்தரப் பார்வையிழப்பு ஆகியவற்றிற்கும் மூல காரணமாயுள்ளது.

கீழ்க்கண்ட அறிகுறிகளுள் ஏதேனும் காணப்பட்டால் ஆசிரியர்கள் அத்தகைய குழந்தைகளின் பெற்றோரிடம் தெரிவிப்பதுடன் அவர்களைக் கண் மருத்துவரிடம் உரிய மருத்துவத்திற்கு அனுப்பவும் வேண்டும்.



### பார்வைக்குறைவு

படிக்கும் பிள்ளைகளுக்குக் கரும் பலகையில் ஆசிரியர் எழுதுவது தெரியாது; படித்தால் எழுதினால் தலைவலி வருவது; புத்தகத்தைக் கண்ணிற்கு அருகே வைத்துப் படித்தல்; தொலைவில் உள்ள பொருட்களைப் பார்க்கும்போது ஒரு கண்ணை மூடி அல்லது தலையைச் சற்றுச் சாய்த்துப் பார்த்தல்.

### கண்ணில் ஏற்படும் நோய்கள்

கண்வலி, திரும்பத் திரும்ப ஏற்படுகின்ற கண்கட்டி டிரக்கோமா, (Trachoma), கெரொட்டோமலேஷியா (Keratomalacia) என்கிற பார்வை யிழப்புக்கு வழிவகுக்கும் வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையால் ஏற்படும்.

இதன் அறிகுறிகள்: கண்ணின் விழிவெண் படலத்தில் முக்கோண வடிவில் சாம்பல் நிறத்தில் ஏற்படுகின்ற பைட்டாட் புள்ளிகள், மாலைக்கண் முதலியன. இதனை ஆரம்ப நிலையிலேயே வைட்டமின் 'ஏ' மிகுந்துள்ள உணவுப் பொருட்களைக் கொடுப்பதன் மூலம் நலப்படுத்திவிட முடியும்.

### தற்காப்பு முறைகள்

வகுப்பறையில், கரும்பலகை அனைவரும் பார்ப்பதற்கேற்ப வைக்கப்பட வேண்டும். பலகையில் கருமைநிற வண்ணம் நன்றாகத் தீட்டப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியரும், இறுதி வரிசையில் அமர்ந்திருக்கின்ற மாணவர் களுக்கும் தெளிவாகத் தெரியும் வண்ணம் எழுத்துக்களைத் தெளிவாகவும், பெரியதாகவும் எழுதவேண்டும்.

படிக்கும்பொழுதும், எழுதும்பொழுதும் கண்ணுக்கும் புத்தகத்துக்கும் இடையே 30 செ.மீ. இடைவெளி இருக்க வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். மாணவர்களின் இருக்கை அமைப்பு, அவர்களின் வயது, உயரம் இவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். வகுப்பறையினுள் போதிய வெளிச்சம் இருக்க வேண்டும். வகுப்பறை வானிலை அல்லது மின்சார வெட்டு காரணமாக வெளிச்சமின்றியிருப்பின், ஆசிரியர்கள் மாணவர்களிடம் படிப் பதையும், எழுதுவதையும் தவிர்க்குமாறு கூறி அதற்கு மாறாக வாய் வழிப்பயிற்சி (Oral Exercise) அளிக்கலாம்.

மாணவர்கள் ஆய்வகங்களில் வேதிப் பொருட்களைக் கையாளும்போது கவனமாக இருக்கச் சொல்லவேண்டும். எல்லா வேதிப்பொருட்களும் நன்றாகப் பெயரிடப்பட்டிருத்தல் அவசியமாகும். தொழிற்கல்வி நிலையங்களில் பற்ற வைப்பின்போது (Welding) தகுந்த பாதுகாப்புக் கண்ணாடியை அணிந்துக் கொள்ளச் சொல்லவேண்டும்.

### கண்பாதுகாப்பு பற்றிய நலக் கல்வி

கண்ணில் தூசி விழுந்தால் கண்ணைத் தேய்க்காமல் சுத்தமான நீரால் கண்ணைக் கழுவவேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். அது பயனளிக்காதபோது மருத்துவரிடம் அனுப்பலாம்.

சரிவிகித உணவு, சுற்றுப்புறத் தூய்மை, தன்சுத்தம் இவற்றைக் கடைப்பிடிப்பது உடல் நலத்துக்கு மட்டுமின்றி, கண்ணுக்கும் நல்லது. வெடி, மத்தாப்பு போன்றவையினாலும், பென்சில், பேனா போன்ற கூர்மையான பொருட்களைப் பயன்படுத்தி விளையாடும் போதும் ஏற்படுகின்ற காயங்கள் கண்களைப் பாதிப்பதால் அத்தகைய விபத்துக்கள் நேராவண்ணம் தடுப்பதில் குழந்தைகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நல்ல வெளிச்சத்தில் வெளிச்சம் புத்தகத்தில் விழுவதுபோல் அமர்ந்து படிக்க வேண்டும். ஓடும் வண்டியிலும், படுத்துக்கொண்டும் படிப்பதைத் தவிர்க்க வேண்டும். நீண்ட நேரம் படிக்கும்பொழுது கண்களுக்குச் சிறிதுநேரம் ஓய்வு தர வேண்டும்.

தொலைக்காட்சியில் படம் பார்க்கும் போது பெட்டியிலிருந்து 3 மீட்டர் தொலைவில் அமர்ந்து படம் பார்க்க வேண்டும். பார்க்கும்போது அறையில் தேவையான வெளிச்சம் இருக்க வேண்டும். கண் வலியுள்ள மாணவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடக் கூடாது. நோய் பரவா வண்ணம் தடுப்பதில் தன் சுத்தத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்து, ஒருவர் பயன்படுத்துகின்ற துண்டு, கைக்குட்டை போன்றவற்றை வீட்டில் உள்ள மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது என்றும் கூறவேண்டும்.

### பார்வைத்திறன் ஆய்வு


தற்போது தேசியப்பார்வை இழப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் எல்லா மாவட்டங்களிலும், மாவட்டப் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கங்கள் மூலம் பள்ளி மாணவர்களுக்குப் பார்வைத்திறன் ஆய்வு செய்யப்பட்டு, பார்வைக்குறைவு உள்ளவர்களுக்கு இலவசமாகக் கண் கண்ணாடி வழங்கப்படுகிறது. புதிதாகக் கண்ணாடி அணிந்துள்ள மாணவர் களைத் தொடர்ந்து அணிந்திருக்குமாறு ஆசிரியர்கள் மாணவர்களை உற்சாகப் படுத்த வேண்டும்.

குழந்தையின் கண் தொடர்பான குறைபாடுகளைப் பெற்றோரிடம் உணர்த்தவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். கண்நலம் தொடர்பான செயல்திறன்களில் மாணவர்களைப் பங்கு கொள்ளுமாறும், கண்பாதுகாப்பு பற்றிய கட்டுரைகள் எழுதுமாறும் அவர்களை அவ்வப்போது உற்சாகப்படுத்த வேண்டும்.

வைட்டமின் 'ஏ' அதிகமுள்ள உணவுப் பொருட்களான கீரை, கொத்துமல்லி, கருவேப்பிலை, பப்பாளி, கேரட், மாம்பழம் போன்றவற்றை உண்ணுமாறு மாணவர் களை உற்சாகப்படுத்தவும், மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படவும் செய்ய வேண்டும். மேலும் கண் நோய்களில் பெரும்பாலானவை மருந்து மற்றும் அறுவை சிகிச்சையினால் நலப்படுத்தக் கூடியவையே என்றும், மேம்பாடுமிக்க மருத்துவ வசதி பற்றியும் எடுத்துக்கூறி மக்களிடையேயிருக்கின்ற அறியாமை யினைப் போக்கவேண்டும். கண் நோய்களுக்குச் சிற்றூர்களிலுள்ள போலி மருத்துவரை நாடுவதினால் ஏற்படும் தீங்கினையும் மக்களுக்கு எடுத்துரைக்க ஆசிரியர்கள் முயற்சி செய்யவேண்டும்.

கண், உடலின் மிகமுக்கிய உறுப்பு என்பதால் - கண்ட கைமருந்துகளையும் போட்டு, 'சரிப்படாவிட்டால் பிறகு பார்ப்போம்' என்று கருதி அலட்சியமான சிகிச்சைமுறைகளை மேற்கொள்ளக் கூடாது; அது பார்வையையே கெடுத்து விடக்கூடும்.

*ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.*
*சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*தமிழரசு அலுவலகம், அரசினர்தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927, 564906*


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.9

பதிவு எண். M. [illegible]
Licence No. TN/MS(C)/PP-23



